தவத்திரு. ஆத்மானந்த அடிகளார்

80



திருக்குறள்

கருத்துரை

முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

தமிழ்மண்

திருக்குறள்

கருத்துரை

இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரனார்

தமிழ்மண் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே: 24339030

நூற் குறிப்பு

நூற்பெயர்	**திருக்குறள் கருத்துரை**
ஆசிரியர்	இலக்கியச் செம்மல் **இரா. இளங்குமரனார்**
பதிப்பாளர்	கோ. இளவழகன்
பதிப்பு	2006
விலை	உருு. 50/-
நூலாக்கம்	பாவாணர் கணினி
அச்சு	பிராசசு இந்தியா சென்னை
கட்டமைப்பு	இயல்பு
வெளியீடு	**தமிழ்மண் பதிப்பகம்,** 2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017. தொலைபேசி: 2433 9030

திருக்குறள் கருத்துரை

தூய பளிங்கு நீருள் கிடக்கும் பொற்காசு திருக்குறள். பணித்துளியில் பனைமரம் மட்டு மன்று; பனிமாளிமயமும் பளிச்சிடும்! ஆதலால், பழைய உரையாசிரியர்கள் மணக்குடவர் முதல் பதின்மர் எண்ணப் பட்டாலும் புத்துரைகள் பன்னூற்றுக் கணக்கில் வெளிவந்துள. எனினும், 'முழுதுறக் கண்டார் யாரே' என்னும் நிலை யிலேயே திருக்குறள் விளங்குகின்றது.

"எனக்கும் திருவள்ளுவர்க்கும் இடையில் எவரும் நிற்றல் ஆகாது" என்னும் நோக்கில் யான் திருக்குறள் வாழ்வியல் உரை எழுதினேன். இயற்கை இயங்கியல், கண்கண்ட வாழ்வு திருக்குறளுக்குத் திருக்குறளே உரை என்னும் மும்மை நோக்கில் 131 குறள்களுக்குப் புத்துறை காணவாய்த்தது. குறளாய 'வேலா' அவர்களால்

1990 இல் வெளியிடவும் பட்டது. அதன்பின், பல்வேறு பதிப்பகங்கள் வழியே பலபதிப்புகள் கண்டது. பலநாடுகளில் வரவேற்கவும் பட்டது. வாழ்வியல் உரைப் பொருளைச் சுருக்கி ஈரடிக்குறளுக்கு **ஈரடி உரை வேண்டுமென மலையகத்தோன்றல் திரு. மாரியப்பனார்** வேண்ட அவ்வுரையும் எழுதப்பட்டு, அவராலும், **சிங்கபுரி கோவலங் கண்ணனாராலும்**, தமிழ்மண் பதிப்பகத் தோன்றல் **திரு.கோ. இளவழகனாராலும்** வெளியிடப்பட்டன. அப்பதிப்பின் மீள்பதிப்பே இப்பதிப்பாம்

இப்பதிப்பை வெளியிடும் **கருவிநூல் காப்பாளர் திரு. இளவழகனார்க்குப்** பெரு நன்றியுடையேன்.

இரா. இளங்குமரன்.

திருக்குறள் கருத்துரை

அறம்

உயிரின் இயக்கமே
உடலின் இயக்கம்,
அறத்தின் இயக்கமே
வாழ்வின் இயக்கம்.

1. இறைவணக்கம்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

உலகியக்கும் நலம் போற்றல்

எழுத்துகளுக்கு எல்லாம் அகரமே முதல்: அதுபோல்,
பகுத்துவழங்கிய அ ்றலே உலகுக்கு முதல். 1

தூய அறிவனின் நல்வழிகளைப் பற்றிக் கொள்வதே
கற்கும் மெய்ப்பொருட் கல்விப் பயனாகும். 2

மலரினும் மேம்பட்ட மெல்லியவன் வழியைப் பற்றிக்
கொண்டவர் நெடுங்காலம் இனிது வாழ்வர். 3

விருப்பு வெறுப்பு இல்லாதவன் வழியில் நடப்பவர்க்கு
எப்பொழுதும் துன்பம் இல்லை. 4

நன்மைக்கு உறைவிடமானவனின் மெய்வழியில்
நடப்பவர்க்கு மயக்கும் இன்ப துன்ப மில்லை. 5

ஐம்பொறிகளையும் பக்குவப்படுத்தியவனின் மெய்யான
வழியில் நிலை பெற்றவர், நெடுங்காலம் வாழ்வர். 6

இணையற்ற பெரியோன் வழியில் நடவாதவர்க்கு
மனக்கவலை மாறாது. 7

அறக்கடலாக விளங்கும் அருளாளன் வழியில்
செல்லாதவர் பழிக்கடலைக் கடவார். 8

இயக்கமில்லாப் பொறிகளால் பயனில்லாமைபோல்
நற்குணத்தவனை மதியாத் தலையால் பயனில்லை. 9

நன்மைக்கு இடமானவன் வழியைப் பற்றிக் கொண்டவர்
அறியாமைக் கடல் கடப்பர்; பிறர் கடவார். 10

2. வான் சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. 11

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 12

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. 13

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 16

நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும். தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். 17

சிறப்பொடு பூசனை செல்லாது. வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 18

தானம் தவமிரண்டும் தங்கா. வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 19

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 20

மழையின் சிறப்பு

மழைபொழிந்து உலகத்தைக் காத்து வருவதால், அம்மழையே அமிழ்தம் ஆகும். 11

உண்பவர்க்கு வேண்டும் உணவைத் தந்து, தானும் உணவாக இருப்பது மழையாகும். 12

மழை பெய்யாது போனால், உலகத்து உயிர்களை யெல்லாம் பசி வாட்டும். 13

மழை என்னும் கொடை இல்லை என்றால், உழவர் உழுதொழில் செய்யார். 14

கேடு செய்வதும், கேடு அடைந்தவரை நன்மையால் உயர்த்துவதும் மழையாகும். 15

மழைத்துளி வீழாவிட்டால், அவ்விடத்தில் புல்லும் முளையாது. 16

மழை பொழியா விட்டால், பெரிய கடலும் வளமையில் குறைந்துபோகும். 17

மழைபொழிய வில்லையெனின், உயர்ந்தோர்க்கு விழாவும் வழிபாடும் நிகழமாட்டா. 18

பெரிய உலகில் மழை பெய்யாவிட்டால், கொடையும் தவமும் நிலை பெறா. 19

நீர் இல்லாமல் உயிர்கள் வாழா; அதுபோல், மழை இல்லாமல் ஒழுக்கம் நிலையாது. 20

3. நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 21

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 22

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 23

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்.
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 24

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. 25

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 26

சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 27

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 29

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். 30

பற்றற்றோர் பெருமை

பற்றற்றவர்களின் பெருமையைத் தம் பெருமையாகக் கொள்ளுதல் நூல் முடிபாகும். 21

பற்றற்றவர் பெருமையை அளத்தல் அரிது. அது உலகில் இறந்தவரை. எண்ணிக்கையிடல் போன்றது. 22

ஆக்கமும் அழிவுமாம் இருவகையும் தெரிந்த துறவோர் பெருமையே பெருமை. 23

அறிவு என்னும் கருவியால் ஐம்பொறிகளையும் காப்பவன் உயர்வுக்கு மூலமானவன். 24

ஐம்புலன்களையும் அடக்கியவர்க்கு ஐந்திரன் என்னும் இந்திரனே சான்றாவான். 25

பிறரால் செய்ய இயலாத அருஞ்செயல்களைச் செய்பவர் பெரியர்; பிறர் சிறியர். 26

சுவை முதலியவற்றின் விரிவுகளைத் தெரிந்தவர் வழியிலேயே உலகியக்கம் உள்ளது. 27

சொன்னது சொன்னபடி நிறைவேறும் துறவியர் பெருமை, நூல்களால் விளங்கும். 28

உயர்ந்த குணமலையாக விளங்குபவர் நொடியளவு கூடச் சினம் கொள்ளார். 29

எல்லா உயிர்களுக்கும் அருள் செய்தலால் அந்தணர் என்பவர் அறவோர் ஆவர். 30

4. அறன் வலியுறுத்தல்

சிறப்பீனும், செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு. 31

அறத்தினூஉங் காக்கமும் இல்லை: அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 32

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 33

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 34

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 35

'அன்றறிவாம்' என்னா தறம்செய்க: மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

அறத்தா றிதுவென வேண்டா. சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை. 37

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். 38

அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 39

செயற்பால தோரும் அறனே; ஒருவற்
குயற்பால தோரும் பழி. 40

அறத்தின் தேவையை வற்புறுத்துதல்

அறம் புகழையும் தரும்; பொருளையும் தரும்; ஆதலால், உயிர்க்கு நலமாவது அதுவே. 31

அறம் செய்தலினும் நன்மையும் இல்லை; அதனை மறத்தலினும் தீமையும் இல்லை. 32

முடிந்த வகையால் எல்லா வழிகளிலும் ஓயாமல் அறம் செய்தல் கடமை. 33

மனத்தில் களங்கம் இல்லாமையே சிறந்த அறம்; மற்றவை ஆக்கக் கேடானவை. 34

பொறாமை ஆசை சீற்றம் கடுஞ்சொல் என்பவற்றை நீக்குவதே அறம். 35

பின்னே பார்க்கலாம் என்னாது அறம் செய்க; அதுவே இறக்கும் போதும் இறவாத் துணை. 36

பல்லக்கை மாந்தன் சுமக்க அதில் இருந்து மாந்தன் செல்வது அறநெறி ஆகாது. 37

ஒவ்வொரு நாளும் நல்லவை செய்க; அது வீழ்நாள் என்னும் ஆற்றை நிறுத்திக் காக்கும் அணை ஆகும். 38

அறச் செயலால் வருவதே இன்பமாம்; பிறவற்றால் வருவன துன்பமும் பழியும் ஆம். 39

ஒருவன் செய்யத் தக்கது அறச் செயலே; அவன் விலக்கத் தக்கது அறமல்லாச் செயலே. 40

5. இல்வாழ்க்கை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 41

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை. 43

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்? 46

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. 47

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 49

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 50

குடும்ப வாழ்வு

இல்வாழ்வு வாழ்பவன் தன் தந்தை, தாய், மனைவி ஆகிய மூவர்க்கும் நிலைத்த துணையாவன். 41

பற்றற்றோர், வறியவர், வெளியேறி இரப்பவர் என்பவர்க்கு இல்வாழ்வான் துணையாவன். 42

சிறந்த அறிவினர், முனிவர், விருந்தினர், சுற்றத்தார் ஆயவரொடு தன்னையும் பேணல் இல்வாழ்வான் கடமை. 43

நல்வழியால் தேடிய பொருளைப் பகுத்துண்டால் அவன் வாழ்வில் குறைவு இல்லை. 44

இல்வாழ்க்கையின் பண்பு (இயல்பு) அன்பாகும். அதன் பயன் அறம் ஆகும். 45

அறவழியில் இல்லறம் நடத்தினால் பிறவழியில் போய் அடையத்தக்க நலம் இல்லை. 46

முறையாக இல்வாழ்க்கை வாழ்பவன் முயற்சியாளர் அனைவர்க்கும் தலைமையானவன். 47

பிறரை நல்வழிப்படுத்தி, அறந்தவறாதவர் இல்வாழ்க்கை, நோன்பிற் சிறந்த நோன்பாகும். 48

அறம் என்று சொல்லப்படுவது இல்வாழ்வே; அவ்வாழ்வு பழிப்பற்றதாக இருத்தல் மிக நலமாம். 49

உலகில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் தெய்வத்தன்மையன் ஆவன். 50

6. வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 52

இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை? 53

பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்? 54

தெய்வம் தொழாஅள்: கொழுநற் றொழுதெழுவாள்:
பெய்யெனப் பெய்யும் மழை. 55

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 57

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 58

புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை. இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 60

குடும்பத்தில் துணையாகும் நன்மை

குடும்பத்திற்குத் தக்க பெருமையும் வருவாய்க்குத்
தக்க வாழ்வும் உடையவள் நல்ல துணைவி ஆவள். 51

குடும்பத்திற்குரிய நல்லதன்மை மனைவியிடத்து
இல்லையானால், குடும்பம் பெருமையடையாது. 52

மனைவி உயர்ந்தவள் எனின் இல்லாததில்லை;
அவள் உயர்வில்லாதவள் எனின் இருப்பதில்லை. 53

கற்பெனப்படும் உறுதி உண்டானால், பெண்ணினும்
பெருமைமிக்கவை எவையும் இல்லை. 54

கணவனையே தெய்வமாகக் கொண்டு வாழ்பவள்.
பெய் என்றதும் பெய்யும் மழைபோன்றவள். 55

தன்னைப் பேணித் தன் கணவனையும் பேணிப்
புகழ் நிலை பெறும் முயற்சியளே நல்ல பெண்மணி. 56

கட்டுப்படுத்திக் காக்கும் காவல், காவல் ஆகாது;
மகளிர்க்குத் தம் கற்புக் காவலே காவலாம். 57

சிறந்த கணவனைப் பெற்றால் பெற்ற மனைவி
தெய்வ வாழ்வினளாகத் திகழ்வாள். 58

புகழ் வாய்ந்த மனைவியைப் பெறாதவர்க்குப்
பழி கூறுபவர்முன் பெருமித நடை இல்லை. 59

மனையாளின் பெருமை குடும்பத்தின் பெருமை;
அதற்கு அணிகலம் போன்றது நன் மக்களைப் பெறுதல். 60

7. மக்கட்பேறு

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை. அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 61

எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 62

தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 63

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

மக்கள்மெய்தீண்டல் உடற்கின்பம், மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 65

'குழலினிது; யாழினிது' என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 66

தந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல். 67

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 68

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன்மகனைச்
'சான்றோன்' எனக்கேட்ட தாய். 69

மகன்தந்தைக் காற்றும் உதவி. 'இவன்தந்தை
என்நோற்றான் கொல்' எனும் சொல். 70

நல்ல மக்களைப் பெறுதல்

யாம் அறிந்தவற்றுள், அறிவமைந்த நல்ல மக்களைப் பெறுதலே பேறாகும்; மற்றவை பேறாகா. 61

பழியில்லாத நல்ல மக்களைப் பெற்றால் வழிவழித் தலைமுறைக்கும் பழியில்லை. 62

தாம் பெற வேண்டும் உயர்ந்த பொருள் என்பது மக்களே; அம்மக்கள் பொருள் அவர்கள் முயற்சியால் வரும். 63

தம் மக்களின் சிறிய கையால் தரப்பெறும் உணவு, எந்த இனிய உணவினும் இனிய உணவாகும். 64

மக்கள், தழுவுதல் பெற்றோர் உடலுக்கு இன்பமாகும்; அவர் சொற் கேட்டல் செவிக்கு இன்பமாகும். 65

தம் மக்களின் இனிய மழலையைக் கேளாதவரே, குழலிசை இனிது யாழிசை இனிது என்பர். 66

சான்றோர் கூட்டத்தில் முதல்வராக இருக்கச் செய்வதே பெற்றோர் மக்களுக்குச் செய்யும் கடமையாகும். 67

மக்களின் அறிவுவளம், பெற்றோரினும் உலகினுள்ள அனைவருக்கும் இன்பம் செய்வதாகும். 68

தம் மக்கள் உயர்ந்தோர் என்பதைப் பிறர் புகழக் கேட்ட பெற்றோர், பெற்ற பொழுதினும் மகிழ்வர். 69

மக்கள் தம் பெற்றோர்க்குச் செய்யும் உதவி, இவரைப் பெற்றோர் நற்பேறமைந்தவர் என்னும் புகழ் தருவதாம். 70

8. அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்: அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. 73

அன்பீனும் ஆர்வ முடைமை; அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74

அன்புற் றமர்ந்த வழக்கென்ப, வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு. 75

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 76

என்பி லதனை வெயில்போலக் காயுமே.
அன்பி லதனை அறம். 77

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை. வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று. 78

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும், யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு? 79

அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. 80

அன்புடையவராக இருத்தல்

அன்பை அடைத்து வைக்கும் கதவு இல்லை: அன்புக் குரியவர் கண்ணீரே அதனைக் காட்டிவிடும். 71

அன்பிலார் தம் பொருளெல்லாம் தமக்கே கொள்வர்: அன்புடையார் தம் உடலையும் பிறர்க்கே வழங்குவர். 72

அரிய உயிர்க்கு உடலோடு அமைந்த தொடர்பு, அன்புடன் இருப்பதற்கே என்பர். 73

அன்பு, ஆவலைத் தரும்: அவ் வாவல் நட்பு என்னும் பெரும் பேற்றைத் தரும். 74

உலகில் இனிது வாழ்பவர் அடையும் நலமெல்லாம் அன்பில் நிலைபெற்ற பயனாகும். 75

அன்பு உருக்கத்திற்கே உரியது என்பவர் அறியார்: அஃது உருக்குப் போன்ற உறுதிக்கும் உரியதாகும். 76

எலும்பு இல்லாத உயிர்களை வெயில் சுடுவது போல அன்பு இல்லாத உயிரினரை அறம் சுடும். 77

அன்பைத் தன்னிடத்துக் கொள்ளாதவர் வாழ்வு, வலிய பாறைமேல் பட்டமரம் தளிர்த்தது போலாகும். 78

உள்ளுறுப்பாம் அன்பு இல்லாதவர்க்கு வெளியுறுப்புகளால் என்ன பயன்? 79

அன்பு தங்கிய உடலே உயிர் தங்கிய உடல்: மற்றவை எலும்புதோல் போர்த்த உடல். 80

9. விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம், விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 81

விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 82

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83

அகனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 84

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ, விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்? 85

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 86

இனைத்துணைத் தென்பதொன் றில்லை: விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87

'பரிந்தோம்பிப் பற்றற்றேம்' என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 88

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு. 89

மோப்பக் குழையும் அனிச்சம்: முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 90

புதிதாக வந்தாரைப் பேணுதல்

வீட்டில் இருந்து இல்லறம் நடத்துவது விருந்தினர்க்கு வேண்டும் உதவி செய்வதற்கே ஆகும். 81

உயிர் தளிர்க்கச் செய்யும் உயர்ந்த உணவே எனினும், விருந்தினர்க்கு உதவாமல் தானே உண்பது ஆகாது. 82

வேளை தோறும் விருந்து செய்பவன் வாழ்வு, அவ் விருந்தோம்பலால் கெடுவது இல்லை. 83

முகமலர்ந்து விரும்தோம்புபவன் இல்லத்தில் செல்வம் சிறந்து விளங்கும். 84

விருந்தினரைப் பேணி எஞ்சியதை உண்பவன், விதைக் குரியதையும்கூட விருந்துக்குப் படைத்து விடுவான். 85

வந்த விருந்தினரைப் பேணி, வர இருப்பவரை எதிர்பார்ப்பவன், அவனினும் உயர்ந்தோர்க்கு விருந்தாளியாவன். 86

விருந்தோம்பலின் பயன் இவ்வளவு என்பது இல்லை. அது விருந்தாளரின் தகுதிக்கு ஒப்ப உயர்ந்ததாகும். 87

விருந்தினரைப் பேணும் நற்செயலைச் செய்யாதவரே, எம் செல்வத்தைக் காத்து உறவை இழந்தேம் என்பர். 88

செல்வக் காலத்திலும் வறுமையானது விருந்தோம்பாக் குற்றமாகும்; அது அறிவிலாரிடத்தே உண்டு. 89

முகர்ந்த அளவால் அனிச்சப்பூ வாடும்; விருந்தினரோ முகமாறிப் பார்த்த அளவாலேயே வாடி விடுவர். 90

10. இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

அகனமர்ந் தீதலின் நன்றே. முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 92

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி, அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 93

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும். யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

பணிவுடையன் இன்சொல னாதல், ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற. 95

அல்லவை தேய அறம்பெருகும், நல்லவை
நாடி இனிய சொலின். 96

நயனீன்று நன்றி பயக்கும், பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 97

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 98

இன்சொல் இனிதீன்றல் காண்பான், எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

இனிய சொற்களைச் சொல்லுதல்

இரக்கம் அமைந்து வஞ்சம் இல்லாது மெய்ப்பொருள் உணர்ந்தார் சொல்லும் சொல் இன்சொல்லாகும். 91

முகமலர்ந்து இனிய சொற்களைச் சொல்லுதல் மனம் மகிழ்ந்து கொடுத்தலினும் சிறந்ததாகும். 92

முகமும் அகமும் மலரப் பார்த்து மனம் நிரம்பிச் சொல்லும் இனிய சொல்லும் அறமாம். 93

எவரிடத்தும் இனிமை தரும் இனிய சொற்களைச் சொன் னால், அவர்க்குத் துன்பம் தரும் வறுமை இராது. 94

பணிவோடு இனிய சொல் சொல்லுதல் அணிகலமாகும் மற்றவை அணிகலங்கள் ஆகா. 95

நல்லவற்றை விரும்பி இனிய சொற்களைச் சொன்னால் தீயவை அழிந்து நலம் பெருகும். 96

கேட்பவர்க்குப் பயனாகும் பண்பமைந்த இனியசொல், சொல்பவர்க்கும் இன்பமும் நலமும் தரும். 97

சிறுமையற்ற இனிய சொல், கூறும் பொழுதுடன் எப்பொழுதும் இன்பம் தரும். 98

இனிய சொல் இன்பம் தருவதை அறிபவன், இனிமை தராத சொற்களைச் சொல்வது எதற்காகவோ? 99

இன் சொற்கள் இருக்க, இனிமையில்லாதவைதச் சொல்லுவது கனியிருக்கக் காயைத் திருடுவதாம். 100

11. செய்ந்நன்றியறிதல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 101

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. 103

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 104

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105

மறவற்க மாசற்றார் கேண்மை. துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர். தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு. 107

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 108

கொன்றன்ன இன்னா செயினும். அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 109

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 110

பிறர் செய்த நன்மையை மறவாமை

முன்னர்ச் செய்யாமல் ஒருவர் செய்யும் உதவிக்கு மண்ணகமும் விண்ணகமும் கூட ஈடாகமாட்டா. 101

நெருக்கடியான பொழுதில் உதவிய உதவி சிறிய தானாலும் இப்பெரிய உலகினும் மிகப் பெரிதாகும். 102

பின்னே நமக்கு நலம் தரும் என்று எண்ணாமல் செய்த உதவியை எண்ணினால் அது கடலிற் பெரிதாகும். 103

மிகச்சிறிய அளவே நன்மை செய்தாலும், நன்றி அறிந்தவர் மிகப்பெரிய அளவாக மதித்துப் போற்றுவர். 104

ஒருவர்க்குச் செய்யும் நன்மை, அந்நன்மை அளவினதில்லை; அதனைப் பெறுபவர் தகுதியின் அளவினதாகும். 105

குற்றமிலார் நட்பை மறுத்தல் ஆகாது அவ்வாறே, துன்பத்தில் துணையானவர் நட்பை விடலாகாது. 106

தமக்குண்டாகிய துன்பத்தை நீக்கியவர் நட்பைப் பலப்பல தலைமுறைகளிலும் நன்றியறிந்தோர் நினைவர். 107

ஒருவர் செய்த நன்மையை மறத்தல் கூடாது. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறத்தல் நல்லது. 108

கொலைக்கு ஒப்பான தீமையை ஒருவர் செய்தாலும் அவர் செய்த நன்மை ஒன்றை நினைக்க அத்தீமை ஒழியும். 109

எந்த நன்மையை மறந்தவர்க்கும் தப்பும் வழி உண்டு. செய்த நன்றியை மறந்தவர்க்குத் தப்பும் வழி இல்லை. 110

12. நடுவு நிலைமை

தகுதி யெனஒன்று நன்றே. பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 111

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. 112

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும். 114

கேடும் பெருக்கமும் இல்லல. நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 115

'கெடுவல்யான்' என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 116

கெடுவாக வையா துலகம். நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 118

சொற்கோட்டம் இல்லது செப்பம்: ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 119

வாணிகம் செய்வார்க்கு வாணிகம். பேணிப்
பிறவும் தமபோல் செயின். 120

எவரிடத்தும் ஒப்ப நடக்கும் சமநிலை

எப்பகுதியையும் எண்ணிச் செயலாற்றினால் நடுவுநிலை என்பது ஒப்பற்ற ஒன்றாகும். 111

நடுவு நிலையாளன் பொருளும் புகழும் அழியாமல் அவன் வழியினர்க்கும் பாதுகாப்பாகும். 112

நன்மையே தரும் எனினும் நடுவுநிலை நீங்கிய வாய்ப்பை, அப்பொழுதே விட்டு விடுதல் வேண்டும். 113

இவர் தகுதியானவர் இவர் தகுதி இல்லாதவர் என்பதை, அவர் உலகில் வைத்துச் சென்றவற்றால் அறியவரும். 114

வறுமையும் வளமையும் இல்லாதவை அல்ல; நடுவு நிலைமை நீங்காதிருத்தலே பெரியோர்க்கு அழகு. 115

தன்மனம் நடுவுநிலை நீங்கித் தீமை செய்ய நினைத்தால் அப்பொழுதே 'கெடுவேன்' என்பதை அறிவானாக. 116

நடுவுநிலை போற்றி நல்வழியில் நிலைபெற்றவன், வறுமை யுற்றாலும் அதனைப் பெரியோர் பழியார். 117

சமமாக நின்று பொருளை அளந்து அறிவிக்கும் நிறை கோல் போல் இருத்தல் உயர்ந்தோர்க்கு அழகாகும். 118

உள்ளத்தில் மாறாத நடுவுநிலை இருந்தால் உரையினும் மாறாத நடுவுநிலை அமைந்திருக்கும். 119

பிறர் பொருளையும் தம் பொருள் போல் கருதிச் செய்தல் வாணிகர்க்கு அற வாணிகமுமாம். 120

13. அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 121

காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 122

செறிவறிந்து சீர்மை பயக்கும், அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின். 123

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 124

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 125

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. 126

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 127

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 128

தீயினால் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 129

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 130

மனம் மொழி மெய்களில் அடக்கம்

அடக்கம் அழியாப் புகழ் நிலை ஆக்கும்; அடக்கம் இல்லாமை அகலாப் பழியிருளில் தள்ளும். 121

அடக்கத்தைச் சிறந்த பொருளாகக் காக்க வேண்டும்; அதனினும் உயிர்க்கு நலம் வேறொன்றும் இல்லை. 122

அறிய வேண்டுவனவற்றை அறிந்து முறையாக அடங்கினால், தக்க நன்மையை அது தரும். 123

உறுதியில் தவறாமல் அடங்கியவன் பெருமை, உயர்ந்த மலையினும் உயர்ந்ததாகும். 124

அனைவருக்கும் அடக்கம் சிறந்ததாகும். அவருள்ளும் செல்வர்க்குள்ள அடக்கம் மேலும் செல்வமாகும். 125

ஓர் ஓட்டுள் ஐந்து உறுப்புகளையும் அடக்கும் ஆமை போல் அடக்கினால் எக்காலமும் நலமாம். 126

எவ்வெவற்றைக் காவா விட்டாலும் நாவைக் காத்தல் வேண்டும். இல்லையானால் துன்புறுவர். 127

ஒரே ஒரு சொல் தீமை தருவதாயினும், மற்றை நல்ல சொற்பயனையும் அஃது அழித்து விடும். 128

தீயால் சுட்ட புண்ணும், உள்ளே ஆறிப்போகும், நாவால் சுட்ட சொல்லாகிய புண் ஆறவே ஆறாது. 129

கற்றுத் தெளிந்து அடங்கி வாழ்பவனை அடைவதற்கு அறம் எப்பொழுதும் வழிபார்த்துக் கொண்டிருக்கும். 130

14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 131

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. 132

ஒழுக்க முடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும். 134

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 135

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 136

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே, தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 139

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 140

நல்ல நடத்தை உடையவராதல்

ஒழுக்கம் எல்லாச் சிறப்புகளையும் தருவதால் அதனை உயிரினும் மேலாகக் காக்கவேண்டும். 131

ஒழுக்கத்தை மிக முயன்று காத்தல் வேண்டும்; ஏனெனில் அதுவே அரிய துணையாகும். 132

ஒழுக்கத்தைக் கொள்வதே உயர்குடித் தன்மை; அஃதில்லாமை தாழ்ந்த பிறப்பாகிவிடும். 133

படிப்பவன் படிப்பை மறந்தாலும் மீண்டும் பெறலாம். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் தீரா இழிவாம். 134

பொறாமையாளன் செல்வம், செல்வமாகாது; அது போல் ஒழுக்கமில்லாதவன் உயர்வு, உயர்வாகாது. 135

ஒழுக்கம் தவறுதலால் உண்டாகும் தீமையை அறிந்த உறுதியாளர், அவ்வொழுக்கத்தில் தளரார். 136

ஒழுக்கமுடைமையால் எவரும் பெருமை பெறுவர்; அஃதில்லாமையால் சிறுமையே அடைவர். 137

நன்மைக்கெல்லாம் நல்லொழுக்கம் மூலமாகும்; தீய ஒழுக்கமோ எப்பொழுதும் துன்பமே தரும். 138

ஒழுக்கமுடையவர்களால், தீயவற்றை மறந்து போய்க் கூடச்சொல்லுதற்கு இயலாது. 139

பலவற்றைப் படித்தாலும், உயர்ந்தவர் வழியில் நடவாதவர் படிப்பறிவில்லாதவரே ஆவர். 140

15. பிறனில் விழையாமை

பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 141

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல். 142

விளிந்தாரின் வேறல்லர் மன்ற. தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 143

எனைத்துணைய ராயினும் என்னாம்தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 144

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 145

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 146

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 147

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

நலக்குரியார் யாரெனின். நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 149

அறன்வரையான் அல்ல செயினும். பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150

பிறன் மனைவியை விரும்பாமை

உயர்ந்த அறத்தையும் பொருளையும் ஆய்ந்தவரிடத்துப் பிறன் மனைவியை விரும்பும் அறியாமை இல்லை. 141

அறநெறியைக் கடைப்பிடியாதவருள் பிறன் மனைவியை, விரும்பி நிற்பவரைப் போன்றவர் எவரும் இலர். 142

மிகத் தெரிந்தவர் மனையிலும் தீய நடவடிக்கை யுடையவர் இறந்து போனவருள் வேறானவர் அல்லர். 143

சிறிதளவும் ஆராயாமல் பிறன் மனையில் புகுபவர் எவ்வளவு பெரியவராயினும் என்ன? சிறியரே அவர். 144

எளிதாக அடையலாம் என்று பிறன் மனை செல்வானுக்கு எப்பொழுதும் பழி நீங்காமல் நிலைபெறும். 145

பிறன் மனையைத் தேடிச் செல்பவனுக்குப் பகை பாவம் அச்சம் பழி என்பவை நீங்கவே நீங்கா. 146

அறநெறியில் இல்வாழ்வு வாழ்பவன், பிறனுக்குரிய வளை விரும்பமாட்டான். 147

பிறன்மனை விரும்பாத பெரிய உறுதியுடையவர்க்கு, அது அறம் மட்டுமன்று; சிறந்த ஒழுக்கமுமாகும். 148

நலத்திற்கெல்லாம் உரியவர் எவர் என்றால், அவர் பிறனுக்கு உரியவளை விரும்பாதவரே. 149

அறம் அல்லாதவற்றைச் செய்தாலும் பிறனுக்கு உரியவளை விரும்பாதிருத்தல் நன்மையாகும். 150

16. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

பொறுத்தல் இறப்பினை என்றும்: அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

இன்மையுள் இன்மை விருந்தொரால்: வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே: வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 155

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்: பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 158

துறந்தாரின் தூய்மை உடையர், இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 159

உண்ணாது நோற்பார் பெரியர், பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

பொறுமை உடையவராக இருத்தல்

தோண்டுபவரையும் சுமக்கும் நிலத்தைப் போலத் தம்மை இகழ்பவரையும் பொறுத்தல் உயர்ந்த பண்பு. 151

தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் சிறப்பு: அதனை மறந்துவிடுதல் அதனினும் சிறப்பு. 152

வறுமையுள் வறுமை விருந்தினரைப் பேணாமை; வலிமை யுள் வலிமை அறிவிலார் செயலைப் பொறுத்தல். 153

மன உறுதி நீங்காமல் இருக்க வேண்டுமானால் பொறுமையாக நடத்தலால் உண்டாகும். 154

தீமை செய்தவரைத் தண்டிப்பவரை மதியார்: ஆனால் பொறுத்துக் கொண்டவரை மதிப்பர். 155

தீமை செய்தவர்க்கு அப்பொழுதே இன்பம்; ஆனால் பொறுத்துக் கொண்டவர்க்கு என்றும் புகழ். 156

தகுதியில்லாததை ஒருவர் செய்தாலும் அதற்கு மிக நொந்து அறமற்ற செயலைச் செய்யாமை நலமாகும். 157

செருக்கினால் அடாச் செயலைச் செய்தாரையும் தம் பொறுமையால் வெற்றி கொள்க. 158

வரம்பு கடந்தவரின் கொடிய சொல்லைப் பொறுப்பவர் துறவியரினும் தூயவர் ஆவர். 159

உண்ணா நோன்பு கொள்பவர் பெரியவர்: அவரும் தீயசொல்லைப் பொறுப்பவர்க்குப் பிறப்பட்டவரே. 160

17. அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க. ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்காறி லாத இயல்பு. 161

விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 162

அறனாக்கம் வேண்டாதான் என்பான். பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். 163

அழுக்காற்றின் அல்லவை செய்யார். இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 164

அழுக்கா றுடையார்க் கதுசாலும். ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 165

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 167

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169

அழுக்கற் றகன்றாரும் இல்லை. அஃதில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். 170

பொறாமைப்படாமல் இருத்தல்

ஒருவன் தன் மனத்தில் பொறாமைப்படாத தன்மையை ஒழுக்கநெறியாகக் கொள்வானாக. 161

எவரிடத்தும் பொறாமை இல்லாதிருந்தால் அதனைப் போல்சிறந்த புகழ்ப்பேறு இல்லை. 162

பிறர் நலம் கண்டு பொறாமைப்படுபவன் அறத்தையும் நலத்தையும் வேண்டா என இழப்பவனாவான். 163

தீய வழியால் துன்பம் உண்டாகும் என்பதை அறிந்தவர் பொறாமையால் அறமல்லாதவைச் செய்யமாட்டார். 164

பொறாமையாளரைப் பகைவர் கெடுக்கத் தவறினாலும் அவர் கொண்ட பொறாமை கெடுக்கத் தவறாது. 165

பிறன் கொடுப்பதையும் தடுக்க நினைப்பவன் தன் சுற்றத் துடன் ஊணும் உடையும் இல்லாமல் கெடுவான். 166

பொறாமையுடையவனைக் கண்டு செல்வமும் பொறாமைப் பட்டு, வறுமைக்கு வழிகாட்டி விடும். 167

பொறாமை என்னும் பாவி, செல்வத்தையும் அழித்து மனஎரிவுக்குள்ளும் தள்ளிவிடும். 168

பொறாமையாளன் செல்வம் செல்வமன்று; பொறுமையாளன் வறுமை வறுமை யுமன்று. 169

பொறாமையால் வளம் பெருகியவரும் இல்லை. பொறுமை யால் வளம் சுருங்கியவரும் இல்லை. 170

18. வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகின். குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்.
நடுவன்மை நாணு பவர். 172

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே.
மற்றின்பம் வேண்டு பவர். 173

இலமென்று வெஃகுதல் செய்யார். புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 174

அஃகி யகன்ற அறிவென்னாம். யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்? 175

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள் வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 176

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 177

அஃகாமை செல்வத்திற் கியாதெனின். வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 178

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்.
திறனறிந் தாங்கே திரு. 179

இறலீனும் எண்ணாது வெஃகின்; விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு. 180

பிறர் பொருளை விரும்பாமை

நடுவுநிலை இல்லாமல் பிறர் பொருளை விரும்பின் அது குடியைக் கெடுத்துக் குற்றம் தரும். 171

நடுவு நிலைமை தவறுவதற்கு வெட்கப்படுபவர், பெரும் பயனை விரும்பிப் பழியாக்கும் செயலைச் செய்யார். 172

அழியாத இன்பத்தை விரும்புபவர் சிறிதளவாம் இன்பத்தை விரும்பி அறமல்லாச் செயலைச் செய்யார். 173

ஐம்புலன்களையும் வெற்றி கொண்ட அறிவாளர் எமக்கு இல்லை என்று பிறர் பொருளை விரும்பார். 174

எவரிடத்து உள்ளதையும் கவர விரும்புவராயின் அவர் தம் நுண்ணிய விரிந்த அறிவின் பயன் என்ன? 175

அருளை விரும்பி நல்வழியில் நடப்பவன் பிறர் பொருளை விரும்பினால் அவ்வளவில் தீமை சூழ்ந்து கெடுவான். 176

பிறர் பொருளால் வரும் நலத்தை விரும்பாது விடுக: ஏனெனில் முடிவில் அதன் பயன் இழிவாகி விடும் 177

செல்வத்திற்குக் குறையாமை எது என்றால், பிறர் பொருளை விரும்பாதிருத்தலேயாகும். 178

அறமுறை அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவினரின் இயல்பறிந்து அவரைச் செல்வம் சேரும். 179

பின்வருவதை எண்ணாமல் பிறர் பொருளை விரும்புதல், அழிவை ஆக்கும்; விரும்பாமை வெற்றியை ஆக்கும். 180

19. புறங்கூறாமை

அறம்கூறான் அல்ல செயினும், ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது. 181

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே,
புறனழீஇப் பொய்த்து நகை. 182

புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். 183

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க,
முன்னின்று பின்நோக்காச் சொல். 184

அறம்சொல்லும்நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையால் காணப் படும். 185

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். 186

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர், நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 187

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
எனைகொல் ஏதிலார் மாட்டு? 188

அறனோக்கி ஆற்றுங்கொல் வையம், புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 190

ஒருவர் இல்லாத இடத்தில் பழித்துச் சொல்லாமை

அறம் சொல்லாமல் தீமை செய்பவனும் கூட புறம் பேசான் என்பது இனிதாகும். 181

அறத்தை அழித்து அறம் அல்லாதவற்றைச் செய்வதினும் தீதாகும், புறத்தே பழித்துப் பொய்யாகச் சிரிப்பது. 182

புறஞ்சொல்லிப் பொய்யாக உயிர் வாழ்வதினும் இறப்பது அறவழியில் நடந்த நன்மையைத் தரும். 183

முன்னே நின்று இடித்துச் சொன்னாலும் முன்னே இல்லாமல் பழிச் சொல்லைச் சொல்லாதே. 184

ஒருவன் புறங்கூறும் இழிதன்மையால் அவன் அறங் கூறும் மனத்தான் அல்லன் என்பது விளங்கும். 185

பிறனைப் பழிப்பவனின் பழிகளினும் மிக்கவற்றைத் தேர்ந்து பிறர் அவனைப் பழிப்பதும் உறுதியாகும். 186

மகிழுமாறு பேசி நட்புக் கொள்ளத் தெரியாதவரே பிளவுபடுமாறு பேசி நண்பரைப் பிரித்துவிடுவர். 187

நெருங்கிய நட்பினர் குற்றத்தையும் பரப்பும் இயல்பினர் மற்றவரிடத்து எப்படி இருப்பர்? 188

புறத்தே பார்த்துப் பழி சொல்பவனை உலகம் அறம் கருதித்தான் சுமந்து கொண்டுள்ளதோ? 189

பிறர் குற்றங்களைக் காண்பது போல் தம் குற்றத்தையும் கண்டால் மக்களுக்கு தீமை வருதல் உண்டோ? 190

20. பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191

பயனில பல்லார்முன் சொல்லல். நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 192

நயனிலன் என்பது சொல்லும். பயனில
பாரித் துரைக்கும் உரை. 193

நயன்சாரா நன்மையின் நீக்கும். பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. 194

சீர்மை சிறப்பொடு நீங்கும். பயனில
நீர்மை யுடையார் சொலின். 195

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல். 196

நயனில சொல்லினும் சொல்லுக: சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 197

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்.
பெரும்பயன் இல்லாத சொல். 198

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார். மருள்தீர்த்த
மாசறு காட்சி யவர். 199

சொல்லுக சொல்லிற் பயனுடைய: சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 200

பயன்தராத சொற்களைச் சொல்லாதிருத்தல்

பலரும் வெறுக்குமாறு பயனில்லாத சொல்லைச் சொல்பவனை அனைவரும் இகழ்வர். 191

பயனில்லாதவற்றைப் பலர் முன் சொல்வது, நல்லதல்லாத வற்றை நண்பர்க்குச் செய்வதினும் தீமையானதாகும். 192

பயனில்லாதவற்றை விரித்துச் சொல்லும் சொல்லே, அவன் நல்லவன் அல்லாதவன் என்பதைச் சொல்லிவிடும். 193

பயனில்லாத பண்பற்ற சொல்லைப் பலரிடத்தும் சொல்லல் முறை கேடானதாகி நன்மையைக் கெடுக்கும். 194

பயனில்லாதவற்றைத் தக்கவர் எவர் சொல்லினும் அவர் சிறந்த தன்மை புகழுடன் நீங்கிப் போகும். 195

பயனில்லாத சொற்களைப் புகழ்ந்து சொல்பவரை மக்கட் பிறப்பு என்று சொல்லாதே; பதர் என்பாயாக. 196

சால்புடையவர் நல்ல தல்லாதவற்றைச் சொன்னால் கூட, பயனில்லாதவற்றைச் சொல்லாமை நல்லதாகும். 197

அரிய பயனை எண்ணும் அறிவாளர் பெரும் பயன் தராத சொற்களைச் சொல்ல மாட்டார். 198

மயக்கம் நீங்கிய குற்றமில்லாத அறிவினர் பொருளற்ற சொற்களை மறந்தும் கூறமாட்டார். 199

சொல்வதானால் பயனுடைய சொற்களைச் சொல்லுக; பயனற்ற சொற்களைச் சொல்லா திருக்க. 200

21. தீவினையச்சம்

தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. 201

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202

அறிவினுள் எல்லாம் தலையென்ப, தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 203

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. 204

இலனென்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 205

தீப்பால தான்பிறன்கண் செய்யற்க; நோய்ப் பால
தன்னை அடல்வேண்டா தான். 206

எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென் றடும். 207

தீயவை செய்தார் கெடுதல், நிழல்தன்னை
வீயா தடிஉறைந் தற்று. 208

தன்னைத்தான் காதல னாயின், எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். 209

அருங்கேடன் என்ப தறிக, மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். 210

தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல்

தீய செயல் என்னும் அழிவுக்குத் தீயவை செய்பவர் அஞ்ச மாட்டார்; ஆனால் சிறந்தோர் அஞ்சுவர். 201

தீய செயல் என்றும் தீமையே தருதலால் அத்தீய செயல் தீயினும் கொடியதாக அஞ்சக் கூடியது. 202

தீயவற்றைச் செய்யும் அழிவினர்க்கும் அதனைச் செய்யாமை அறிவிற் சிறந்த அறிவாகும். 203

மறந்தும் கூடப் பிறர்க்குத் தீமை கருத வேண்டா; கருதின் அவனுக்குக் கேடு செய்ய அறம் கருதும். 204

யான் இல்லாதவன் என்று தீமை செய்யாமை வேண்டும்; செய்தால் மேலும் இல்லாதவனே ஆவன். 205

துன்பமானவை தன்னை வருத்த விரும்பாதவன் பிறர்க்குத் தீமையானவற்றைச் செய்யா திருப்பானாக. 206

எந்தப் பகையைக் கொண்டவரும் தப்புவர்; ஆனால் தீச் செயலைப் பகையாகக் கொண்டால் தப்பார். 207

தீய செயல் செய்தவர் அழிவு, தன் நிழல் தன்னை விடாமல் தொடர்வது போல் தொடர்ந்து தங்கும். 208

ஒருவன் தன்னைத் தானே விரும்பினால், தீய செயல் எதனையும் நெருங்காதிருப்பானாக. 209

எல்லை கடந்து ஒருவன் தீயசெயல் செய்யான்என்றால், அவன் கேடற்றவன் என்பதை அறிந்து கொள்க. 210

22. ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு: மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு. 211

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 212

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 213

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214

ஊருணி நீர்நிறைந் தற்றே: உலகவாம்
பேரறி வாளன் திரு. 215

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்
நயனுடை யான்கண் படின். 216

மருந்தாகித் தப்பா மரத்தற்றால், செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 217

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்,
கடனறி காட்சி யவர். 218

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல், செயும்நீர
செய்யா தமைகலா வாறு. 219

ஒப்புரவி னால்வரும் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 220

பொதுநலம் அறிதல்

திரும்பப் பெறுதலை விரும்பாது கொடுக்கும் மழைக்கு உலகோர் என்னதான் கைம்மாறு செய்வரோ? 211

ஒருவர் முயற்சியால் தேடிய பொருளெல்லாம் தகுதியானவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும். 212

பிறர்க்கு உதவும் இயல்பினும் நல்லதொன்றை இங்கும் எங்கும் காணல் இயலாது. 213

உலகோர்க்கு ஒத்ததுஇது என வாழ்பவனே உயிர் வாழ் பவன்; மற்றவன் இறந்தவரோடு வைக்கத்தக்கவன். 214

உலகோரால் விரும்பப்படும் சிறந்த அறிவாளன் செல்வம் ஊருணி நீரால் நிறைந்தது போன்றதாம். 215

செல்வம் நல்லவனிடம் சேருமானால் அது பழமரம் ஊர்நடுவே பழுத்தது போன்றதாம். 216

செல்வம் பெருந்தன்மையாளனிடத்து உண்டானால் மருந்து மரம்போல் தவறாமல் நன்மை செய்யும் 217

ஒப்புரவு அறிந்த அறிவாளர் தமக்கு உதவமுடியாத நிலையிலும் உதவுதலில் தளரார். 218

ஒப்புரவு உடையவன் வறுமையடைதல், அவன் செய்யும் நலத்தைச் செய்ய முடியாமல் வருந்துவதேயாகும். 219

ஒப்புரவு செய்தலால் ஒருவனுக்கு வறுமை வருமானால், அதனைத் தன்னை விற்றும் கூட வாங்கலாம். 220

23. ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகை:மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 221

நல்லா றெனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 222

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்.
குலனுடையான் கண்ணே உள. 223

இன்னா திரக்கப் படுதல். இரந்தவர்
இன்முகம் காணும் அளவு. 224

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்: அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 225

அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 226

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. 227

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல். தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 228

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 229

சாதலின் இன்னாத தில்லை: இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 230

கொடை

இல்லாதவர்க்குக் கொடுப்பதே கொடையாகும்; இருப்பவர்க்குக் கொடுப்பது கைம்மாற்றுப் போன்றது ஆகும். 221

நல்வழியே என்றால் கூட கொடை பெறல் தீயதாகும்; புகழ் நிலை வாரா தெனினும் கொடுப்பதே நல்லதாகும். 222

யான் இல்லாதவன் என்னும் குறையைச் சொல்லு முன்னரே கொடுத்தல், உயர்குடிப் பிறப்பினரிடத்தில் உண்டு. 223

ஒன்றைக் கேட்டு நிற்பவரின் இனிய முகத்தைக் காணும் வரை, இரக்கப்படுதலும் கூடத் துன்பம் தருவதேயாம். 224

கொடையிற் சிறந்தது பசி நீக்கும் கொடை; அதனினும் அப்பசியை மாற்றும் கொடை உயர்ந்தது. 225

வறியவரின் கொடிய பசியைத் தீர்ப்பது; ஒருவன் பொருள் வைப்பகம் ஒன்றைப் பெற்றது போன்றதாம். 226

பகுத்துத்தந்து உண்பவனைப் பசி என்னும் தீயநோய் பற்றிக் கொள்ளுவது இல்லை. 227

தம் பொருளை வைத்து இழந்துபோகும் கொடியவர், கொடுத்து மகிழ அறிய மாட்டாரோ? 228

மிக நிரம்பிய உணவைத் தாங்களே தனித்து உண்பது, இல்லை என இரப்பதினும் கொடுமையானது. 229

சாவைப் போலத் துன்பமானது ஒன்றுமில்லை. ஆனால் கொடுக்க இயலாத பொழுதில் அதுவும் இன்பமாம். 230

24. புகழ்

ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு. 231

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். 232

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். 233

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 234

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 235

தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236

புகழ்பட வாழாதார் தம்நோவார். தம்மை
இகழ்வாரை நோவ தெவன்? 237

வசையென்ப வையத்தார்க் கெல்லாம். இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 238

வசையிலா வண்பயன் குன்றும், இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 239

வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 240

பெருமை

கொடுத்தலும் புகழோடு வாழ்தலும் போல உயிர்க்கு வருமானமாவது வேறொன்றும் இல்லை. 231

இல்லை என்பவர்க்குக் கொடுப்பவர்மேல் உண்டாகும் புகழே சொல்வார் சொல்லும் பெருமையாம். 232

ஒருநிலை இல்லாத உலகத்தில் உயர்ந்த புகழ் ஒன்று மட்டுமே அழியாதது ஆகும். 233

உலகம் பாராட்டும் புகழைச் செய்தால் உயர்ந்தவர் கூட்டம், வெற்றறிவினரைப் பாராட்டாது. 234

சுடச்சுட ஒளிவிடும் சங்குபோன்ற புகழ்வறுமையும், அழியாத சாவும் பெருந்தகையர்க்கே வாய்க்கும். 235

ஒரு செயலில் ஈடுபட்டால் புகழுண்டாக ஈடுபடுக; இல்லை யானால் ஈடுபடாது இருத்தல் நல்லது. 236

புகழுண்டாக வாழ முடியாதவர் தம்மைப் பற்றி வருந்தாமல் தம்மைப் பழிப்பார் மேல் வருந்துவது ஏன்? 237

புகழ் என்னும் வருமானத்தைப் பெறாவிட்டால் உலக வாழ்வினர் எல்லார்க்கும் பழியேயாம். 238

புகழில்லாத உடல்களைச் சுமந்த நிலம், தனக்குரிய குறை யில்லாக் கொடைப்பயனிலும் குறைந்து போகும். 239

உயிரோடு வாழ்பவர் என்பவர் பழியில்லாமல் வாழ்பவரே; பழியோடு வாழ்பவர் உயிரோடு வாழாதவர் ஆவர். 240

25. அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

நல்லாற்றான் நாடி அருளாள்க: பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை. 242

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை: இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 244

அல்லல் அருளாள்வார்க் கில்லை: வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர், அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 246

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை: பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247

பொருளற்றார் பூப்பார் ஒருகால்: அருளற்றார்
அற்றார்: மற் றாதல் அரிது. 248

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

வலியார்முன் தன்னை நினைக்க, தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவராதல்

செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம் அருட் செல்வமே; மற்றைப் பொருட் செல்வம் கீழோரிடத்தும் உண்டு. 241

நல்ல வகையில் எண்ணி இரக்கம் கொள்ள வேண்டும். பலவகையால் எண்ணினும் அவ்விரக்கமே துணை. 242

அருளமைந்த மனத்தினர் அறியாமை அமைந்த துன்ப உலகத்தில் புகுதல் இல்லை. 243

உயிர்களைப் பேணி இரக்கம் காட்டுபவனுக்குத் தன் உயிர்க்கு அஞ்சும் செயல் இல்லை. 244

அருளுடையவர்க்குத் துன்பம் இல்லை; அதற்குக் காற்று விசிறும் வளமான இப் பெரிய உலகமே சான்று. 245

இரக்கம் இல்லாது தீமை செய்து வாழ்பவர் பொருளும் புகழும் இல்லாதவர் ஆவர் என்று கூறுவர். 246

பொருளில்லாதவர்க்கு இவ்வுலக நலம் இல்லாதது போல அருளில்லாதவர்க்கு அருளுலக நலம் இல்லை. 247

பொருளை இழந்தவர் ஒருகால் அதனை அடைதல் கூடும். ஆனால் அருளை இழந்தவர் இழந்தவரே. 248

அருளில்லாதவன் செய்யும் அறச்செயல், தெளிவில்லாதவர் கண்ட மெய்ப்பொருள் போன்றது. 249

தன்னில் வலிமை குறைந்தவரைத் தாக்கச் செல்லும் போது தன்னின் வலியவர் முன் தான் நிற்பதை நினைக்க. 250

26. புலால் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்? 251

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 252

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை உண்டார் மனம். 253

அருளல்ல தியாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல். 254

உண்ணாமை உள்ள துயிர்நிலை; ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. 255

தினற்பொருட்டால் கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 256

உண்ணாமை வேண்டும் புலாஅல்; பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். 257

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்;
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 259

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260

பொருந்தா உணவை உண்ணாது விடுதல்

தன் உடலை வளர்க்கப் பிறிதொன்றின் உடலைத்தின் பவன் எப்படி அருளாளன் ஆவன்? 251

பொருள் வளம் அதனைப் போற்றிக் கொள்ளாதவர்க்கு இல்லை. அருள் வளமும் அவ்வாறே புலால் உண்பவர்க்கு இல்லை. 252

ஒருடலின் சுவையை உண்டவர் மனம். படைக்கருவியை எடுத்தவர் மனத்தைப் போல் நல்லதை நினையாது. 253

அருள் என்பது கொல்லாமை; அல்லது என்பது கொல்லல்; ஆதலால் புலால் உண்ணல் நல்லதன்றாம். 254

புலாலுண்ணாத உடலே உயிர் நிற்கும் உடல்; களர் நிலம் கூடப்புலால் உண்ணத் தானே வாயைத் திறவாது. 255

உண்பதற்காக எவரும் வாங்கமாட்டார் என்றால் புலாலை எவரும் விலைப் பொருளாகத் தரமாட்டார். 256

புலாலை உண்ணாதிருக்க வேண்டும்: அது மற்றோர் உயிரின் புண் என்பது உணர்வுடையவர்க்கு விளங்கும்.257

உயிரின் நீங்கிய உடலை. குற்றத்தில் இருந்து நீங்கிய அறிவினர் உண்ணமாட்டார். 258

அவித்துக் கொட்டி ஆயிரக்கணக்கான வேள்வி செய்வதினும் ஓர் உயிரைக் கொன்று உண்ணாமை நன்மை செய்யும். 259

கொல்லாதவனாகவும் புலால் உண்ணாதவனாகவும் இருப்பவனை. உலகத் துயிர்கள் எல்லாம் வணங்கும். 260

27. தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 261

தவமும் தவமுடையார்க் காகும்; அவம்அதனை
அஃதிலார் மேற்கோள் வது. 262

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்,
மற்றை யவர்கள் தவம்? 263

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 265

தவம்செய்வார் தங்கருமம் செய்வார்; மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு. 266

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 267

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். 268

கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 269

இலர்பல ராகிய காரணம், நோற்பார்
சிலர்;பலர் நோலா தவர். 270

துன்பம் பொறுத்தலும், துன்பம் செய்யாமையும்

தனக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவத்தின் வடிவாகும். 261

தவக் கோலம் கொள்ளலும் தவத்தன்மை உடை யவர்க்கே தகும். பிறர் மேற்கொள்வது இழிவாகும். 262

தவம் செய்பவர்க்கு வேண்டும் உதவிகளைச் செய்வதற்கே மற்றவர்கள் அதனைக் கொள்ளவில்லை போலும். 263

தவத்தன்மையினர் நினைத்தால் பகைவரை அழிக்கவும், நண்பரைக் காக்கவும் கூடும். 264

விரும்பியவை விரும்பியவாறு வருதலால் தவம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப் படுகின்றதாம். 265

தம் கடமையைச் சரியாகச் செய்பவர் தவம் செய்பவர்; அவ்வாறு செய்யாதார் இழிவு செய்பவர். 266

துன்பம் வருத்த வருத்த உறுதி குறையாதவர், சுடச்சுட ஒளியுறும் பொன்போல் ஒளியுறுவர். 267

தன்னுயிர்ப் பற்றையும் தன்னுடற் பற்றையும் விட்டவனை மற்றை உயிர்கள் எல்லாம் வணங்கும். 268

தவவலிமை மிக்கவரைக் கண்டு இறப்பும் அஞ்சி ஓடுதல் நிகழும். 269

தவம் செய்யார் பலராகக் காரணம், உறுதியுடையவர் சிலரும் அஃதில்லார் பலருமாக இருப்பதேயாம். 270

28. கூடா ஒழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271

வானுயர் தோற்றம் எவன்செய்யும், தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்? 272

வலியில் நிலைமையான் வல்லுருவம், பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 273

தவமறைந் தல்லவை செய்தல், புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 274

'பற்றற்றேம்' என்பார் படிற்றொழுக்கம் 'எற்றெற்-றென்
றேதம் பலவும் தரும். 275

நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 276

புறங்குன்றி கண்டனைய ரேனும், அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. 277

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 278

கணைகொடிது; யாழ்கோடு, செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 279

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின். 280

கைக்கொள்ளக் கூடாத ஒழுக்கம்

வஞ்ச உள்ளத்தவனது தீய நடத்தையைக் கொண்டு அவன் உள்ளே உ ள்ள பூதங்கள் ஐந்தும் சிரிக்கும். 271

தன்மனம் அறிந்து குற்றம் செய்தால், அவன் கொண்ட உயர்ந்த பெருமை யாதாகும்? 272

தவவலிமை இல்லாதவன் தவக்கோலம் கொள்ளல், புலித் தோலைப் போர்த்துப் பசு மேய்ந்தது போன்றது. 273

தவக்கோலத்தில் மறைந்து கொண்டு கேடு செய்தல், புதர்க்குள் மறைந்து பறவை பிடிப்பது போன்றது. 274

பற்று இல்லை என்று சொல்லிக் கரவாக நடத்தல், என்ன! என்ன! என்னும் துன்பம் பலவும் தரும். 275

மனத்தில் பற்றுடையவராய்ப் பற்று இல்லாதவர் போல் இருப்பவரினும் கொடியவர் இலர். 276

வெளியே குன்றிமணியைப் போல் சிவந்தவரும் உள்ளே குன்றிமணியின் கரியைக் கொள்ளல் உண்டு. 277

மனத்தில் களங்கம் வைத்து, உயர்ந்தவர் போல் தோன்றிக் கரவாக வாழ்பவர் பலர். 278

அம்பு நேரானாலும் கொடியது; யாழ்வளைவானாலும் இனியது; ஆதலால் செயலால் அவரவரை அறிய வேண்டும். 279

உயர்ந்தோர் பழிக்கும் செயலைச் செய்யாது விட்டால்; மயிர் மழிப்பதும் வளர்ப்பதும் வேண்டும் பெருமைகள் ஆகா. 280

29. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 281

உள்ளத்தால் உள்ளலும் தீதே: பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 282

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 283

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 284

அருள்கருதி அன்புடைய ராதல், பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 285

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார், களவின்கண்
கன்றிய காத லவர். 286

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 287

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 288

அளவல்ல செய்தாங்கே வீவர், களவல்ல
மற்றைய தேற்றா தவர். 289

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை: கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. 290

திருட நினையாமை

பிறரால் பழிக்கப்படுதலை விரும்பாதவன், தன்மனம் பிறர் பொருளை விரும்பாமல் காத்துக் கொள்வானாக. 281

பிறன் பொருளைக் கரவால் கவர்ந்து கொள்வேன் என்று மனத்தால் நினைத்தாலும் திருடியதேயாம். 282

திருட்டால் வரும் பொருள் அளவு இல்லாமல் பெருகுவது போல் காட்டி இல்லாமல் போய்விடும். 283

களவின் மேல் கொண்ட பேராசை, முடிவில் நீங்காத துன்பங்களைத் தரும். 284

பொருள் கவரப் பிறர் சோர்வை எண்ணுபவர்க்கு அருளை எண்ணி அன்புடையவராகும் தன்மை இல்லை. 285

களவு செய்வதில் மிகப் பற்றுடையவர், தம் தேவை என்னும் ஓர் அளவில் அமைந்து வாழமாட்டார். 286

கட்டுப்பாடு என்னும் தன்மையை உடையவரிடத்துக் களவு எனப்படும் களங்கம் இல்லை. 287

அளவான வாழ்வு வாழ்பவர் நெஞ்சில் அறம் தங்கும். களவே கருத்தானவர் நெஞ்சில் வஞ்சம் தங்கும். 288

களவு அல்லாமல் வேறு ஒன்றும் செய்தறியாதவர் அளவுக்கு மீறி அதனைச் செய்து அதனாலேயே அழிவர். 289

களவுத் தொழிலர்க்கு வாழ்வு குன்றும். களவைக் கருதாதவர்க்குப் புகழுலகம் கிட்டும். 290

30. வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292

தன்நெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293

உள்ளத்தால் பொய்யா தொழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 294

மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு
தானம்செய் வாரின் தலை. 295

பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும். 296

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 297

புறந்தூய்மை நீரான் அமையும்: அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 298

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 299

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300

தீமை தராத சொற்களைச் சொல்லுதல்

வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால், எந்த ஒரு தீமையும் இல்லாத சொல்லைச் சொல்வதாகும். 291

குற்றமில்லாத நன்மையைத் தருமானால் பொய்யும் கூட மெய்யின் இடத்தைப் பெறும். 292

தன் மனம் அறியப் பொய் சொல்லல் ஆகாது; ஏனெனில் பொய் சொன்னபின் தன் மனமே தன்னை வருத்தும். 293

உள்ளம் உரை செயல் ஒப்பவாழ்ந்தால் அவன் உலகோர் உள்ளத்தெல்லாம் உறைவான். 294

மனமார உண்மை உரைத்தால், அது தவமும் கொடையும் செய்பவரினும் உயர்வு ஆக்கும். 295

பொய் சொல்லாமை போன்ற புகழ்ப் பேறு எதுவும் இல்லை; அதில் குறையாமை எல்லா அறங்களையும் தரும். 296

பொய் சொல்லாமையைத் தவறாது கொள்ளல் அறம்; செய்யத் தகாததைச் செய்யாமை நலம். 297

உடல் தூய்மை நீரினால் உண்டாகும்; உளத் தூய்மை பொய்சொல்லாமையால் உண்டாகும். 298

ஒளி விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல; பொய் சொல்லாமை விளக்கே விளக்காகும். 299

நாம் ஆராய்ந்து கண்டவற்றுள் பொய் சொல்லாமை போன்ற நல்லது ஒன்றைக் கண்டதில்லை. 300

31. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்; அல்லிடத்துக்
காக்கின்என்? காவாக்கால் என்? 301

செல்லா இடத்துச் சினம்தீது; செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. 302

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும். 303

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற? 304

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 306

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு.
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 307

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

உள்ளிய எல்லாம் உடனெய்தும், உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 309

இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310

சினங் கொள்ளா திருத்தல்

தன்னின் மெலியரிடம் காப்பவனே சினங் காப்பவன் மற்ற வரிடம் காத்தால் என்ன? காவாவிட்டால் என்ன? 301

வலியவரிடத்துச் சினங் கொள்ளல் தீமையாம்; அதனினும் தீமை மெலியவரிடத்துச் சினமடைதல். 302

எவரிடத்தும் சினமில்லாமை வேண்டும்; ஏனெனில் தீமையெல்லாம் அதனாலேயே உண்டாவதால். 303

சிரிப்பையும் மகிழ்வையும் அழிக்கும் சினத்தைப் பார்க்கிலும் தனக்குப் பகையானவை எவையும் இல்லை. 304

ஒருவன் தன்னைத் தானே காத்தல் சினத்தைக் காத்தல். காவாவிடின் அச்சினமே கொன்றுவிடும். 305

சினம் என்பது அதனை உடையவரைக் கொல்லும் தீயாகும்; அது, அதன் சுற்றம் என்னும் பாதுகாப்பையும் எரிக்கும். 306

சினத்தையே கைப்பொருளாகக் கொண்டவன் கெட்டுப் போவது, நிலத்தை அடித்தவன் கை தப்பாதது போல் ஆகும். 307

மலரை வாட்டும் தீயைப்போல் தன்னை எரித்தவரும் உணர்ந்து கூடினால் சினங் கொள்ளாமை நலம். 308

மனத்தில் சிறிதும் சினத்தைக் கொள்ளாதவன் என்றால் அவன் மனத்தில் நினைத்தவை எல்லாம் நிறைவேறும். 309

சினத்தின் எல்லை கடந்தவர் இறந்தவரே; அச்சினத்தைக் கொள்ளாமல் விட்டவர் துறவியர் ஒப்பவரே. 310

32. இன்னா செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 311

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 313

இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 315

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்? 318

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 319

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

பிறர்க்குத் துன்பம் செய்யாமை

பெருமைதரும் பொருள் பெறுவதாயினும் பிறர்க்குத் தீமை செய்யாமையே குறையிலார் கொள்கை. 311

சினம் மிகுந்து தீமை செய்த போதும் அவர்க்குத் திருப்பித் தீமை செய்யாதிருத்தல் குற்றமில்லாதவர் கொள்கையாம். 312

தான் தீமை செய்யாதிருக்கவும் தனக்குத் தீமை செய்தவர்க்கும் தீமை செய்தல் தீராத் துயரே. 313

தீமை செய்தவரைத் தண்டிப்பது, அவர் வெட்குமாறு நல்லது செய்து அதனையும் மறந்து விடுவதாகும். 314

மற்றை உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதா விட்டால் அறிவைப் பெற்றதன் பயன் தான் என்ன? 315

தனக்குத் துன்பமானது என்று அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்வதைக் கருதாது இருத்தல் வேண்டும. 316

எவ்வளவாயினும் எப்பொழுதாயினும் எவர்க்கும் மனமறியத் தீமை செய்யாதிருத்தல் உயர்வாகும். 317

தனக்குத் துன்பமாவது இது என்பதை அறிபவன், அத் துன்பத்தைப் பிற உயிர்க்குச் செய்வது ஏன்? 318

பிறர்க்குத் துன்பத்தைக் காலையில் செய்தால் செய்த அவனுக்குத் துன்பம் அன்று மாலையிலேயே தேடி வந்து விடும். 319

துன்பம் என்பன துன்பம் செய்பவர்க்கே ஆதலால், துன்பம் வர வேண்டா என்பவர் துன்பம் செய்யார். 320

33. கொல்லாமை

அறவினை யாதெனில் கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாம் தரும். 321

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 322

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323

நல்லா றெனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 324

நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 325

கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று. 326

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 327

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும், சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. 328

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து. 329

உயிருடம்பின் நீக்கியார் என்ப, செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330

கொலை செய்யாமை

கொலை செய்யாமையே அறச் செயல் ஆகும்; கொல்லுதல் மற்றைத் தீவினைகளை யெல்லாம் தரும். 321

நூலவர் சொல்லியவற்றுள் தலைமையானது பகுத்துத் தந்து பலவுயிர்களையும் பேணிஉண்பதாம். 322

ஒரே ஒரு நல்லறம் கொலை செய்யாமையே; அடுத்துச் சொல்லத்தக்க அறம் பொய் சொல்லாமையே. 323

நல்வழி என்று சொல்லப்படுவது எது எனில், தனையும் கொலை செய்யாதிருத்தலைக் கருதும் வழியாகும். 324

உலக நிலைக்கு அஞ்சித் துறந்தவருள் உயர்ந்தவன், கொலை செய்யாதிருக்க நினைப்பவனே. 325

கொலை செய்யாமையைக் கைக் கொண்டு நடப்பவன் வாழ்நாளைக் குறைக்கக் கூற்றமும் செல்லாது. 326

தன் உயிர் இழக்கும் நிலை நேருமாயினும் பிற உயிர் களைக் கொல்லும் செயலைச் செய்தலாகாது. 327

கொல்லுதலால் பெரு நன்மை உண்டாகும் என்றாலும், அக் கொலையால் வரும் நன்மை இழிந்ததேயாகும். 328

கொலையின் இழிவை அறிந்தவர்க்குக், கொலை செய்வார் இழிதொழில் செய்பவரே ஆவர். 329

துன்புறும் உடலொடு நல்வழியில் செல்லாத கொடுமையர் என்பர், ஓர் உயிரை அதன் உடலில் இருந்து நீக்கியவர். 330

34. நிலையாமை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 331

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;
போக்கும் அதுவிளிந் தற்று. 332

அற்கா இயல்பிற்றுச் செல்வம்: அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். 334

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335

நெருநல் உளனொருவன் இன்றில்லை. என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 336

ஒருபொழுதும் வாழ்வ தறியார்: கருதுப
கோடியும் அல்ல பல. 337

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே.
உடம்போ டுயிரிடை நட்பு. 338

உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 339

புக்கில் அமைந்தின்று கொல்லோ. உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 340

நிலை பெறாதவற்றை அறிதல்

நிலைபெறாதவற்றை நிலைபெறுவன என்று முடிவு செய்யும் சிற்றறிவு கீழானதாகும். 331

கூத்து நிகழ்ச்சிக்குக் கூட்டம். வருவது போல வந்து மொத்தமாகப் போகும் இயல்பினது செல்வம். 332

செல்வம் நிலைபெறா இயல்பினது; அது வரப் பெற்றால் நிலை பேறானவற்றைச் செய்து விடுக. 333

நாள் என்பது ஒன்று போலத் தோன்றி உயிரை அறுக்கும் வாள் என்பதை உணர்வாளர் அறிவர். 334

நாவொடுங்கி விக்கல் வருமுன் செய்யத்தக்க நல்ல செயல்களைச் செய்துவிடுதல் வேண்டும். 335

நேற்று இருந்தான் ஒருவன் இன்று இல்லை என்னும் பெரிய இயல்பை உடையது இவ்வுலகமாகும். 336

வாழ்வு என்பதை அறியாதவரும் எண்ணுவன கோடி மட்டுமல்ல; அதனினும் மிகுதியாம். 337

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு, கூட்டுக்கும் பறந்து போகும் பறவைக்கும் உள்ள உறவு போன்றதாம். 338

சாவு என்பது உறங்குவது போன்ற இயல்பினது. பிறப்பு என்பது உறங்கியவர் விழிப்பது போன்ற இயல்பினது. 339

உடலுள் சிறிது காலம் தங்கியிருந்த உயிர் நிலைபேறாகத் தங்குவதற்குரிய இடம் ஒன்றும் இல்லையோ? 340

35. துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341

வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்
ஈண்டியற் பால பல. 342

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 343

இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை; உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 344

மற்றும் தொடர்ப்பா டெவன்கொல்? பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை. 345

யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். 346

பற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 348

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும். 349

பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 350

பற்றுகளை விடுதல்

ஒருவன் எவற்றை வேண்டா என்று விடுகின்றானோ அவற்றால் அவன் துன்பப்படுதல் இல்லை. 341

எல்லா வாய்ப்புகளும் உள்ள போதே அவற்றைவிடுதல் வேண்டும்; அவ்வாறு விட்டபின் அவை இயல்பாகி விடும்.342

ஐம்புலன்களையும் அடக்கிக் காக்க; விட வேண்டியவை எல்லாவற்றையும் மொத்தமாக விடுக. 343

ஒரு பற்றும் இல்லாமையே துறவாகும்; ஒன்றன் மேலேனும் பற்று உண்டாயின் தெளிவில்லாமையே ஆகும். 344

பிறவித் தொடர்பையும் விட நினைத்தவர்க்கு வேறு தொடர்பு ஏது. அவர் உடம்பும் அவர்க்கு மிகைப்ப்ய! 345

யான் என்றும் எனது என்றும் உண்டாகும் தற்பெருமை அற்றவன், புகழுடம்பாளர்க்குள் உயர்ந்த புகழுடம்பாள னாவான். 346

எந்த ஓர் ஆசையையும் பற்றிக் கொள்ளாதவர்க்குத் துன்பமும் பற்றிக் கொள்வதில்லை. 347

முழுமையாகப் பற்று அற்றவரே துறவில் உயர்ந்தோர்; மற்றவர்கள் ஆசைவலைக்குள் அகப்பட்டவர். 348

பற்றுகள் ஒழிந்தபோதே பிறவித் துன்பம் ஒழியும்; பின்னர் உலக நிலையாமை உண்மையாய் விளங்கும். 349

பற்றே இல்லாத துறவோனைப் பற்றிக் கொள்க; அதனைக் கொள்ளல் தன்பற்றை முழுமையாக விடுவதற்கேயாகும்.350

36. மெய்யுணர்தல்

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 351

இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. 353

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே,
மெய்யுணர் வில்லா தவர்க்கு. 354

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 355

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி. 356

ஓர்த்துள்ளம் உள்ள துணரின், ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 357

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. 358

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். 359

காமம் வெகுளி மயக்கம், இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360

உண்மைப் பொருள் இதுவென அறிதல்

நிலையில்லாதவற்றை நிலையானது என்று உணரும் மயக்கத்தால் அறிவுக் குறைப்பிறப்பு உண்டாகும். 351

மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவினர்க்கு அறியாமை என்னும் இருள் விலகி இன்பம் உண்டாகும். 352

ஐயமில்லாது தெளிந்த அறிவுடையவர்க்கு மண்ணு லகினும் விண்ணுலகம் மிக அருகில் உள்ளதாகும். 353

மெய்யறிவு இல்லாதவர்க்கு மற்றைக் கண், காது, மூக்கு, வாய், தோல் அறிவுகள் வாய்த்திருந்தாலும் பயனில்லை.354

எப் பொருள் எத்தன்மையுடையதாக இருப்பினும் அப் பொருளின் உண்மையைக் கண்டு கொள்வதே அறிவு. 355

உலகில் பலர்க்கும் தெரியாத வழிகளையும், கற்பன கற்று அவற்றின் உண்மை உணர்ந்தவர் கண்டு கொள்வர். 356

ஒருமுகப்பட்டு உண்மையைக் கண்டு கொண்டால் அறியாமை மீண்டும் உறுதியாக வரவே வராது. 357

பிறப்பு என்னும் அறியாமை விலகுவதற்குச சிறப்பு ஏன்னும் மெய்ப்பொருளைக் காணல் அறிவாகும். 358

மெய்ப் பொருளை உணர்ந்து பொய்ப் பொருள் விலகு மாறு நடந்தால் மீண்டும் அடையும் துன்பம் அடையா. 359

விருப்பு வெறுப்பு தெளிவில்லாமை என்னும் மூன்றன் அச்சமும் இல்லையானால் துன்பமும் இல்லையாகும். 360

37. அவா அறுத்தல்

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 361

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்ப தில். 363

தூஉய்மை என்ப தவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 364

அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்,
அற்றாக அற்ற திலர். 365

அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 366

அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். 367

அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 368

இன்பம் இடையறா தீண்டும், அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 369

ஆரா இயற்கை அவாநீப்பின், அந்நிலையே
பேரா இயற்கை தரும். 370

ஆசையை நீக்குதல்

ஆசையே, என்றும், உயிர்களுக்கு அறியாமை நீங்காமைக்கு அடிப்படையானது. 361

விருப்பம் உண்டாம் காலத்தே விரும்பாமை வேண்டும்; அது, விரும்பாமையை விரும்ப உண்டாகும். 362

ஆசை இல்லாமை போன்ற சிறந்த செல்வம் இங்கே இல்லை; எங்கேயும் அதனைப் போன்றது இல்லை. 363

தூய தன்மை என்பது ஆசை இல்லாமையே; அது, அகத் தூய்மையாம் வாய்மையை விரும்புவதால் வரும். 364

துன்பம் இல்லாதவர் என்பவர் ஆசை இல்லாதவர்; துன்பமுற்ற மற்றவர் ஆசை நீங்கினவர் அல்லர். 365

ஒருவனை ஏமாற்றுவது ஆசையேயாகும். ஆதலால் ஆசை பற்றிக் கொள்ளாதவாறு அஞ்சியிருப்பதே அறமாகும். 366

ஆசையை ஒருவன் இல்லாமல் ஆக்கிவிட்டால், அழியாச் செயல்கள் அவன் விரும்பியவாறு வரும். 367

ஆசை இல்லாதவர்க்குத் துன்பமும் இல்லாமல் போகும்; அவ்வாசை இருந்தால் துன்பம் நீங்காமல் தொடரும். 368

ஆசை எனப்படும் பெருந்துன்பம் இல்லாவிடின், இன்பம் தொடர்ந்து உண்டாகும். 369

அளவுக்கு உட்படாத இயல்புடைய ஆசையை அகற்றினால் அவ்வளவில் அசையா உறுதிநிலையை அது தரும். 370

38. ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 371

பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 372

நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 373

இருவே றுலகத் தியற்கை: திருவேறு.
தெள்ளிய ராதலும் வேறு. 374

நல்லவை எல்லாஅம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375

பரியினும் ஆகாவாம் பால்அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம. 376

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

துறப்பார்மன் துப்புர வில்லார், உறற்பால
ஊட்டா கழியும் எனின். 378

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவ தெவன்? 379

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். 380

உலகத்து இயற்கை

பெருகும் இயற்கையால் சோர்விலாத் தன்மை உண்டாகும்; உள்ள பொருளும் போகும் இயற்கையால் சோர்வு உண்டாகும். 371

இழப்பாகும் இயற்கை உண்டானால் அறியாமை ஏற்படும்; ஆக்க மாகும் இயற்கை உண்டானால் அறிவு விரிவடையும். 372

எத்தகைய நுட்பமான நூல்களைக் கற்ற போதிலும் தம் பிறப் பின் வழிமுறைப்படி வந்த அறிவே மேற்பட்டு நிற்கும். 373

உலகம் இரு வேறான இயல்பினது. அதனால் செல் வராவதும் அறிவராவதும் வேறு வேறானவை. 374

செல்வ ஆக்கத்திற்கு நல்லவை தீயவை யாகவும் தீயவை நல்லவையாகவும் ஆகி விடக் கூடும். 375

தம்மை விட்டுச் செல்வதைக் காத்தல் இயலாது. போகாததை எவ்வளவு போக்கினும் போகாது. 376

முறையாக வந்த ஆட்சி முறைப்படி அல்லாமல் கோடி யளவாகச் சேர்த்தாலும் அதனை நுகர இயலாது. 377

கிடைக்க வேண்டுவன கிடையாது ஒழிந்தால்தான், நுகர்ச்சி வாய்ப்பு இல்லாதவர் பற்றுவிடுவர் போலும்! 378

நன்மை உண்டாகும் போது இன்பம் என மகிழ்பவர் தீமை உண்டாகும் போது துன்பப்படுவது ஏன்? 379

இயற்கை இயக்கத்தினும் வலியவை எவை உண்டு? வேறொன்று முந்த நினையுமுன் அது முந்திவிடும். 380

திருக்குறள் கருத்துரை

பொருள்

செவ்விய பொருளியக்கமே

நல்லரசின் ஆளுமை

39. இறைமாட்சி

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 382

தூங்காமை கல்வி துணிவுடைமை, இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 383

அறனிழுக்கா தல்லவை நீக்கி, மறனிழுக்கா
மானம் உடைய தரசு. 384

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. 385

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன், அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 387

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 388

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. 390

அரசியற் சிறப்பு

படை, குடி, உணவு, அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறும் அமைந்தான் சிறந்த ஆட்சியன். 381

அச்சமில்லாமை, கொடை, அறிவுடைமை, ஊக்க முடைமை என்பவை குறையாதிருத்தல் ஆட்சியாளன் இயல்பு. 382

காலந்தாழாமை, கல்வியறிவு, செயல் துணிவு என்பவை ஆட்சியாளர்க்கு நீங்காதிருக்க வேண்டும் பண்புகள். 383

அறநெறி தவறாமல் அறமல்லாதவற்றை விலக்கி, வீரம் மாறாத பெருமையதே சிறந்த அரசாகும். 384

நெறிகளைத் திட்டப்படுத்தலும் பொருள் பெருக்கலும் அதனைக் காத்தலும் தக்கவாறு பகுத்தளித்தலும் சிறந்தது அரசு. 385

காண்பதற்கு எளிதாக வாய்ப்பளித்துக் காணுங்கால் கடுஞ் சொல் சொல்லாத ஆட்சியனை உலகு பாராட்டும். 386

இனியவை கூறிக் கொடை வழங்கும் வளமுடையவனுக்கு அவன் சொற்படியும் நினைவுப்படியும் மக்கள் அமைவர். 387

நடுநிலைப்படி ஆட்சி செய்பவனே அவன் நாட்டு மக்களால் கண்காணும் இறைவனென எண்ணப் படுவான். 388

வெறுக்கும் சொல்லையும் பொறுக்கும் ஆட்சியாளனின் கீழ், மக்கள் இனிது வாழ்வர். 389

ஈகை, இரக்கம், நேர்மை, குடிநலம், காத்தல் என்பவற்றை உடைய ஆட்சியாளன் ஒளிமிக்கான். 390

40. கல்வி

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 391

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 392

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 393

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394

உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றுங் கற்றார்;
கடையரே கல்லா தவர். 395

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 396

யாதானும் நாடாமால் ஊராமால்; என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 397

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து. 398

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 399

கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 400

வாழ்வுக் கல்வி பெறுதல்

கற்க விரும்புபவற்றைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபின் அதற்குத் தக்கவாறு வாழ வேண்டும். 391

மக்கட் பிறவிக்கு அறிவியல் கலையியல் என்று சொல்லப்படும் இரண்டும் கண்கள் ஆகும். 392

கண்ணுடையவர் என்று சொல்லப்படுபவர் கற்றவர். கல்லாதவர், முகத்தில் இரண்டு புண்ணுடையவரே. 393

மகிழுமாறு கூடியிருந்து பிரிவுத்துயர் வருத்துமாறு பிரிவதே புலமையுடையவர் இயல்பாகும். 394

வலிமையுடையவர்முன் வலிமை இல்லாதவர் போல் செருக்கற்றுக் கற்றவரே கற்றவர்; பிறர் கல்லாதவர். 395

தோண்டிய அளவுக்கு மணல் ஊற்றில் நீர் சுரக்கும்; அதுபோல் கற்ற அளவுக்கு அறிவு சுரக்கும். 396

கற்றவனுக்கு எல்லா நாடும் தன் நாடு; எல்லா ஊரும் தன் னூர்; அவ்வாறாகவும் காலமெல்லாம் கல்லாமை ஏன்? 397

ஒருமுகப்பட்டுக் கற்கும் கல்வி, ஒருவனுக்குப் பின்வரும் காலமெல்லாம் சிறந்த பாதுகாப்பாக அமையும். 398

தாம் பெற்ற கல்வி அறிவால் உலகத்தாரும் மகிழக் கண்ட அறிவாளர் அக்கல்வியின் மேல், மேலும் ஆவலுடைவர். 399

கெடுதி தராத சிறந்த செல்வமாவது கல்வியே. மற்றைச் செல்வங்கள் அதுபோல் செல்வமாகமாட்டா. 400

41. கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே; நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 401

கல்லாதான் சொற்கா முறுதல், முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

கல்லா தவரும் நனிநல்லர், கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 403

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405

உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்
களரனையர் கல்லா தவர். 406

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்,
மண்மாண் புனைபாவை யற்று. 407

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே,
கல்லார்கண் பட்ட திரு. 408

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. 409

விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 410

கல்வியறிவு பெறாதிருத்தல்

மிகுந்த நூலறிவு இல்லாமல் அவையில் பேச விரும்புதல் சதுரங்கக் கட்டம் இல்லாமலே சூதாட்டம் ஆடுவது போன்றது. 401

கல்வியறிவில்லாதவன் கற்றவன் போல் சொல்ல விரும்புவது மார்பகம் இல்லாதவள் இன்புற விரும்புவது போன்ற தாம். 402

கல்வியறிவாளர் முன் சொல்லாடாமல் இருப்பாரானால் அவரும் கற்றவர் போல் மிக நல்லவரே ஆவர். 403

கல்வியறிவில்லாதவன் சிறந்த அறிவுடையவன் எனினும் கற்றோர் அவனைக் கற்றவனாகக் கருதார். 404

கல்லாத ஒருவனின் அறிவு இல்லாமை, அவன் உரை யாடத் தொடங்கிய அளவில் புலப்பட்டுவிடும். 405

கல்லாதவர் உயிரோடு இருப்பவர் என்பதைஅல்லாமல், பயன் செய்யாத உவர் நிலம் ஒப்பவரே ஆவர். 406

நுண்மையும் விரிவும் ஆழமும் அமைந்த அறிவிலான் அழகு, மண் பொம்மை அழகு போன்றதாம். 407

நல்லவர்களிடத்தில் அமைந்த வறுமையைப் பார்க்கிலும் கல்லாதவர்களிடத்துள்ள செல்வம் தீமை செய்யும். 408

கல்லாதவர் சிறந்த குடிப்பிறப்பினர் எனினும், தாழ்ந்த குடிப் பிறந்த கற்றவரின் அளவுக்குப் பெருமையடையார். 409

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடாம். 410

42. கேள்வி

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 411

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 412

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 413

கற்றில னாயினும் கேட்க; அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாம் துணை. 414

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே.
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். 415

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 416

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 417

கேட்பினும் கேளாத் தகையவே. கேள்வியால்
தோட்கப் படாத செவி. 418

நுணங்கிய கேள்விய ரல்லார். வணங்கிய
வாயின ராதல் அரிது. 419

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? 420

கற்றவர் உரையைக் கேட்டலால் பெறும் பயன்

ஒருவன் பெற வேண்டும் செல்வங்களிலெல்லாம் உயர்ந்தது கேள்வியே! அது போன்ற செல்வம் வேறு இல்லை. 411

கேட்டறியும் அறிவுச் செல்வம் கிடையாத பொழுதில் சிறிதளவு வயிற்றுணவும் கொள்ளலாம். 412

காதிற்கு இனிய கேள்வியர் சுவையான உணவுகளைத் தேடிப் பெறும் பெருந்தீனியர்க்கு ஒப்பாவர். 413

ஒருவன் கற்க வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கேட்டறிதல். வறட்சியின் போதில் ஊற்று நீரைப் போல் உதவும். 414

ஒழுக்கம் உடையவர் சொல்லும் சொல், வழுக்கல் உள்ள இடத்தில் ஊன்று கோல் போல் உதவும். 415

எவ்வளவு சிறிதளவாயினும் நல்லதைக்கேட்டல் அவ்வள வாலும் மிகுந்த நன்மையைத் தரும். 416

நுட்பமாக அறிந்து நிரம்பிய கேள்வியறிவுடையவர் ஒன்றைத் தவறாக உணர்ந்து அறிவில்லாமல் சொல்ல மாட்டார். 417

சிறந்த செய்தியைக் கேட்காத காது, கேட்பதே எனினும் கேளாச் செவிட்டுக் காது போன்றதேயாம். 418

நுட்பமான கேள்வி யறிவில்லாதவர் பணிவுடைய சொற்களைச் சொல்பவராக இருத்தல் அரிதாகும். 419

கேள்வியின்பம் அறியாமல் நாவின்பம் மட்டுமே யுடையவர் இறப்பினும் இருப்பினும் என்ன பயன்? 420

43. அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 421

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 422

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 423

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 424

உலகம் தழீஇய தொட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு. 425

எவ்வ துறைவ துலகம், உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 426

அறிவுடையார் ஆவ தறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 427

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். 428

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை,
அதிர வருவதோர் நோய். 429

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 430

அறிவுடையவராக இருத்தல்

அழிவு நேராமல் காக்கும் படைக்கலம் அறிவாகும்; அது உட்புகுந்து அழிக்க முடியாத கோட்டையு மாகும். 421

போன போக்கில் போகவிடாமல், தீமையில் இருந்து விலக்கி நல்ல வழிகளில் போக வைப்பதே அறிவாகும். 422

எப் பொருளை எவர் எவர் சொன்னாலும் அப்பொருளின் உண்மை காண்பதே அறிவாகும். 423

பிறர் எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு சொல்லி, பிறர் நுட்பமாகச் சொல்வதையும் தான் புரிந்து கொள்ளுவது அறிவாகும். 424

விரிதலும் சுருங்குதலும் இல்லாதது அறிவு; அதுவும் உயர்ந் தோரைத் தழுவிச் செல்லுதல் ஒளியுடையது. 425

உயர்ந்தோர் எவ்வகையில் வாழ்கின்றனரோ அவ்வகையில் அவரைத் தழுவி வாழ்வதே அறிவாகும். 426

அறிவுடையவர் எனப்படுபவர் வருவது அறிபவர்; அறிவில்லாதவர் என்பார் அவ்வாறு அறியாதவர். 427

அஞ்சுவதற்கு அஞ்சாதிருத்தல் அறிவில்லாமை. அஞ்சுவதற்கு அஞ்சுதல் அறிவாளர் இயல்பு. 428

வர இருப்பதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள வல்லவர்க்கு அதிர்ச்சியுண்டாக்கும் துன்பம் வராது. 429

எல்லாமும் உடையவர் என்பவர் அறிவுடையவரே; அறிவில்லாதவர் எவற்றையும் உடையவர் ஆகார். 430

44. குற்றங்கடிதல்

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 431

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 432

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. 434

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு? 436

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 437

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 438

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. 439

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 440

தம்மிடம் குறை உண்டாகாதவாறு நீக்குதல்

தற்பெருமை சினம் இழிதன்மை ஆகியவற்றைக் கொள்ளாதவர் உயர்வே உயர்வுடையதாகும். 431

கருமித்தனம், பெருமைதராத மானம், இழி மகிழ்ச்சி என்பவை தலைவனுக்குக் குற்றமாகும். 432

இழிவுக்கு வெட்கப்படுபவர், சிறிதளவு குறை வந்தாலும் அதனை மிகப் பெரியஅளவாகக் கருதுவர். 433

தன் குற்றமே அழிவு செய்யும் பகை; அதனால் பொருளைக் காப்பதுபோல் குற்றம் வராமல் காக்க. 434

அழிவு வருமுன்னரே தடுத்துக் கொள்ளாதவர் வாழ்வு, தீயின் முன் வைக்கோற் போரெனெ அழியும். 435

தன் குறையை முதற்கண் நீக்கிவிட்டுப் பிறர் குற்றத்தை அறிய வல்ல தலைவன் எனின், அவனுக்கு எக் குற்றமும் இல்லை.436

செய்ய வேண்டியதற்கும் செலவிடாத கருமியின் செல்வம், காக்கவும் இயலாமல் அழிந்து போகும். 437

கருமித்தனம் என்னும் குற்றம் எக்குற்றத் தொடும் ஒப்பிட்டு எண்ணத் தக்கதில்லை. அது பெருங்குற்றமாகும். 438

ஒருவன் தன்னைப் பெரிதாகப் பாராட்டாதிருப்பானாக அவ்வாறே நன்மை தராத செயலைச் செய்யாதும் இருப்பானாக. 439

தான் விரும்புவதைப் பிறர் அறியாமல் நுகரக்கூடியவ னானால் பகைவர் சூழ்ச்சி எதுவும் பயன்படாது. 440

45. பெரியாரைத் துணைக் கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 441

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 442

அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 443

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 444

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 445

தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 446

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்? 447

இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும். 448

முதலிலார்க் ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை. 449

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே.
நல்லார் தொடர்கை விடல். 450

பெரியவரைத் துணையாகக் கொள்ளல்

அறத்தை அறிந்து முதிர்ந்த அறிவினை உடையவர் நட்பைப் பெறுகின்ற முறையால் பெற்றுக் கொள்ள வேண்டும். 441

வந்த துயர் நீக்கித் துயர் வராமல் முன்னே காக்கவல்ல பெரியவர் நட்பைப் பேணிக் கொள்ள வேண்டும். 442

பெரியவர்கள் நட்பை நல்ல வகையால் பெற்றுக் கொள்ளுதல் அரியதில் எல்லாம் அரியதாகும். 443

தம்மைப் பார்க்கினும் பெரியவர் தமக்கு நட்பாக அமையப் பெறுதல், வலிமைகளில் எல்லாம் வலிமையானது. 444

அறிவறிந்த பெரியவர் கண்போல் காட்டுபவர். ஆதலால், அவரை ஆராய்ந்து துணையாகக் கொள்ள வேண்டும். 445

பெரியவர் கூட்டத்தொடு வாழ வல்ல ஒருவனைப் பகைவர் செய்யக் கூடிய கேடொன்றும் இல்லை. 446

கண்டித்துச் சொல்லத்தக்க பெரியவரைத் துணையாகக் கொண்டவரைக் கெடுக்கவல்லார் எவரும் இல்லை. 447

கண்டித்துச் சொல்லும் பெரியவர் பாதுகாப்பு இல்லாத தலைவன் பகைவர் இல்லாமலே கெட்டுப் போவான். 448

வைப்புப் பொருள் இல்லாதவர்க்கு மேல் வருவாய் இல்லை; அது போல், பெரியவர் துணை இலார்க்கு நிலை இல்லை. 449

பெரியவர் தொடர்பு வாய்த்தும் அதனைவிட்டு விடுதல், பலபேர் பகையைத் தேடிக் கொள்வதினும் கேடாகும். 450

46. சிற்றினம் சேராமை

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 451

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. 452

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல். 453

மனத்து ளதுபோலக் காட்டி, ஒருவற்
கினத்துள தாகும் அறிவு. 454

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். 455

மனம்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனம்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 456

மனநலம் மன்னுயிர்க் காக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும். 457

மனநலம் நன்குடைய ராயினும், சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து. 458

மனநலத்தி னாகும் மறுமை;மற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து. 459

நல்லினத்தி னூங்குந் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். 460

இழிகுணத்தவரொடு சேராதிருத்தல்

பெரியவர் இழிகுணத்தவர்க்கு அஞ்சி ஒதுங்குவர்; சிறியவர் அவரை உறவாகக் கொண்டு கெடுவர். 451

நிலத்தின் தன்மைபோல் நீர்மாறும். அது போல் மக்களும் சேர்ந்தவர் இயல்பினர் ஆவர். 452

மக்கள் உணர்ச்சி மனத்தைப் பொறுத்தது: ஒருவன் இத்தகையன் என்பது சேர்ந்தவரைப் பொறுத்தது. 453

மனத்தின் தன்மை போன்றது எனத் தோன்றித் தான் சேர்ந்த இனத்தின் தன்மையாக அமைவது அறிவாகும். 454

மனநலம் செயல் நலம் என்னும் இரண்டும், தான் சேர்ந்த இனநலம் தருவதால் வருவனவாகும். 455

மனநலத்தர்க்கு உள்ளவை எல்லாம் நல்லனவே. இன நலமும் சேர்ந்தவர்க்கு எல்லாமும் நற்செயலே. 456

மக்களுயிர்க்கு மனநலமே வளமாகும்: அதனோடு இன நலமும் அமைதல் எல்லாப் பெருமையுமாம். 457

மனவளம் மிக்க சான்றோரே எனினும் அவர்க்கும் இனவளமும் அமைதல் பெரும் பாதுகாப்பாகும். 458

மனநலம், ஒருவன் மறைந்த பின்னரும் புகழுண்டாக்கும்; அது இனநலமும் உடையதாயின் அழியவே அழியாது. 459

நல்லவர் துணையிலும் சிறந்த துணையுமில்லை; அது போல் தீயவர் துணையிலும் தீமையாக்குவது இல்லை. 460

47. தெரிந்து செயல்வகை

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். 461

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல். 462

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 463

தெளிவி லதனைத் தொடங்கார், இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். 464

வகையறச் சூழா தெழுதல், பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. 465

செய்தக்க அல்ல செயக்கெடும்: செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 466

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 467

ஆற்றின் வருந்தா வருத்தம், பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 468

நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 469

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்: தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. 470

ஆராய்ந்து செயலாற்றும் வகை

ஒரு செயலைச் செய்யும் போது, வரும் கேடு நன்மை வருவாய் என்பவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும். 461

ஒரு செயலைச் செய்யும் முறை தெரிந்தவரோடு ஆழ்ந்து செய்பவர்க்குச் செய்தற்கரியது எதுவும் இல்லை. 462

அறிவுடையவர் வருவாயை எண்ணி, உள்ளதையும் இழக்கும் செயலைச் செய்ய விரும்பார். 463

இழிவு ஏற்படும் என்னும் அச்சம் உடையவர் தமக்குத் தெளிவுண்டாகாத செயலைச் செய்யமாட்டார். 464

ஆராயாமல் ஒரு செயலைச் செய்வது பகை என்னும் பயிரைப் பாத்தி கட்டி வளர்க்கும் வழியாகும். 465

செய்யக் கூடாதவற்றைச் செய்தலும் கேடு ஆக்கும்; செய்யத் தக்கவற்றைச் செய்யாதிருத்தலும் கேடு ஆக்கும். 466

ஒரு செயலைத் தொடங்குமுன் ஆராய்தல் வேண்டும்; தொடங்கியபின் ஆராய்வது இழிவு தரும். 467

ஒரு செயலைச் செய்யும் போதே முயலாது பின்னர்ப் பலர் உதவி கிடைப்பினும் நிறைவேறுதல் அரிதாகும். 468

ஒவ்வொருவர் பண்பையும் அறிந்து கொள்ளாமல் அவர்க்குச் செய்யும் நன்மையும் தீமையாகி விடுதலுண்டு. 469

இயல்பொடு பொருந்தாத செயலைச் செய்வதை உலகம் கொள்ளாது. ஆதலால், பழிவராச் செயலைச் செய்க. 470

48. வலியறிதல்

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். 471

ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 472

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 473

அமைந்தாங் கொழுகான், அளவறியான், தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474

பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 475

நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 476

ஆற்றின் அளவறிந் தீக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 477

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை.
போகா றகலாக் கடை. 478

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 479

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 480

வலிமையை அறிந்து செயலாற்றல்

செயல் வலிமை, தன் வலிமை, பகைவன் வலிமை, துணையா வார் வலிமை ஆகியவற்றை ஆய்ந்து செய்தல் வேண்டும். 471

தக்கதை அறிந்து அதில் உறுதிப்பட்டு நின்று செய்வார்க்குச் செய்ய முடியாதது இல்லை. 472

தன் வலிமையை அறியாமல் செய்யத் தொடங்கிவிட்டு இடையே முடியாமல் அதனைக் கைவிட்டவர் பலராவர். 473

பொருந்த நடவாமை, அளவு கருதாமை, தற்பெருமை என்பவற்றை உடையவன் தானே விரைவில் கெடுவான். 474

மயில் தோகை ஏற்றப்பட்ட வண்டியின் வலிய அச்சும், அத் தோகையை அளவுக்கு மிஞ்சி ஏற்றினால் ஒடிந்து போகும். 475

மரத்தின் உச்சிக் கிளையின் மேல் ஏறி மேலும் சென்றால் உயிரிழக்கும் செயலாகி விடும். 476

தம்மிடத்துள்ள பொருளின் அளவறிந்து கொடுத்தால் அதுவே பொருளைப் பேணிக் கொடுக்கும் வழியாகும். 477

வருமானம் குறைவாக இருப்பினும் அதனால் கெடுதி இல்லை. ஆனால் செலவு அவ்வருவாயினும் மிகுதல் கூடாது. 478

அளவறிந்து வாழமாட்டாதவன் வாழ்வு, நன்றாக இருப்பது போல் தோன்றி இல்லாமல் கெட்டுப் போகும். 479

தம்மிடம் உள்ள அளவினை எண்ணாமல் கொடுக்கும் கொடை, தம் பொருள் அளவினை விரைவில் கெடுமாறு செய்யும். 480

49. காலம் அறிதல்

பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

பருவத்தோ டொட்ட ஒழுகல், திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 482

அருவினை என்ப உளவோ, கருவியான்
காலம் அறிந்து செயின்? 483

ஞாலம் கருதினுங் கைகூடும், காலம்
கருதி இடத்தாற் செயின். 484

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர். 485

ஊக்க முடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 486

பொள்ளென ஆங்கே புறம்வேரார், காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487

செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்காம் தலை. 488

எய்தற் கரிய தியைந்தக்கால்; அந்நிலையே
செய்தற் கரிய செயல். 489

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 490

தக்க பொழுதறிந்து செயலாற்றல்

பகலில் காக்கை ஆந்தையை வென்றுவிடும்; வெற்றி கொள்ள விரும்புவார் காலம் அறிந்து கடமை புரிக. 481

காலம் அறிந்து நடத்தல், வளத்தை நீங்காமல் கட்டி வைக்கும் கயிறு போல்வதாம். 482

உரிய கருவியுடன் காலம் அறிந்து செயலாற்றினால் செயற்கரிய செயல் எதுவும் இல்லை. 483

காலம் அறிந்து உரிய இடத்தில் செய்தால் உலகெல்லாம் அடைய வேண்டும் எனினும் நிறைவேறும். 484

உலகையெல்லாம் பெற விரும்புபவர், அசைவு இல்லாமல் தக்க காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பர். 485

வலிமையமைந்தவர், செயலில் அமைந்து இருப்பது, போர்க்கடாமுட்டுதற்குப் பின் வாங்குவது போன்றது. 486

ஒளியுடையவர் வெளிப்படத் தம் உணர்வைக் காட்டாமல், காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பர். 487

வலிமையுடையவரைக் கண்டால் பொறுத்து இருக்க, பின்னர் அந்நிலை தலைகீழாக மாறிவிடும். 488

கிடைப்பதற்கு அரிய ஒரு வாய்ப்புக் கிட்டினால், அப்பொழுதே செய்வதற்கு அரிய செயலைச் செய்து விடுக. 489

நிறைவேறாப் பொழுதில் கொக்குப் போல் இருந்து நிறை வேறும் பொழுதில் அதன் குத்துப் போல் முடித்துவிடுக. 490

50. இடன் அறிதல்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடம்கண்ட பின்னல் லது. 491

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். 492

ஆற்றாரும் ஆற்றி அடுப. இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 493

எண்ணியார் எண்ணம் இழப்பர். இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 494

நெடும்புனலுள் வெல்லும் முதலை. அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. 496

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா. எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 497

சிறுபடையான் செல்லிடம் சேரின். உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்டல் அரிது. 499

காலாழ் களரில் நரியடும்; கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு. 500

இடத்தை அறிந்து செயலாற்றல்

எச் செயலையும் எளிதாகத் தொடங்குதல் ஆகாது. முடிக்கும் வரை எளிதென நினைத்தலும் ஆகாது. 491

வெற்றி கொள்ளும் வலிமையமைந்தவர்க்கும், தக்க இடமும் அமையுமானால் நல்ல பலவுமாம். 492

வலிமை குறைந்தவரும், தக்க இடமறிந்து தம்மைக் காத்துக் கொண்டு பகையழிக்கச் சென்றால் வெற்றி யடைவர். 493

தக்க இடத்தை அறிந்து முனைப்பாகச் செயல் புரிந்தால் அழிக்க வந்தவரும் தம் எண்ணம் அழிந்து போவர். 494

பெரிய நீர் நிலையில் முதலை வெல்லும். ஆனால் அந்நீரை நீங்கினால் மற்றவையே வெல்லும். 495

கடலிலே செல்லும் கப்பல் நிலத்தில் செல்லாது; அதே போல் வலிய உருளுடைய தேர் கடலிலே செல்லாது. 496

குறையாமல் ஆராய்ந்து ஏற்ற இடத்தால் செயலாற்றினார் துணிவே அன்றி வேறு துணை வேண்டியது இல்லை. 497

சிறிய படையுடையவன் சென்றிருக்குமிடத்தைச் சேர்ந்தால் பெரிய படையுடையவன் ஊக்கமும் கெட்டுப் போகும். 498

பாதுகாப்பும் படைச்சிறப்பும் இல்லாதவர் என்றாலும், அவர் தங்கியிருக்கும் இடத்தை வலியவரும் அடைதல் அரிது. 499

துணிவும் வேல்பட்ட முகமும் உடைய யானையும், சேற்றுள் சிக்கினால் நரியும் கொன்றுவிடும். 500

51. தெரிந்து தெளிதல்

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். 501

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 502

அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503

குணம்நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 504

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505

அற்றாரைத் தேறுதல் ஓம்புக: மற்றவர்
பற்றிலர்: நாணார் பழி. 506

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 507

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 508

தேறற்க யாரையும் தேராது: தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 509

தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510

தக்காரை ஆராய்ந்து தெளிவு கொள்ளுதல்

அறம் பொருள் இன்பம் உயிருக்கு அஞ்சுதல் என்னும் நான்கு வகையாலும் தெரிந்து தக்கவர் எனின் ஏற்கலாம். 501

நல்ல குடியில் பிறந்து குற்றம் செய்யாமல் விலகிப் பழிக்கு அஞ்சி நாணுபவனையே தக்கான் எனத் தெளிவு கொள்க. 502

அரிய நூல்களைக் கற்ற குற்றமில்லாதவரிடத்தும் ஆராய்ந்து பார்த்தால் அறியாமை இல்லாதிருத்தல் இல்லை. 503

ஒருவரின் நல்ல தன்மையை ஆய்ந்து, அவரின் தீய தன்மையையும் ஆய்ந்து மிக்கதனால் முடிவு செய்க. 504

அவரவர் செய்யும் செயல்களே, அவருடைய பெருமை சிறுமைகளுக்கு உரை கல்லாகும். 505

ஒழுக்கம் இலாரைத் தெளிதல் ஆகாது. அவர் பற்றுதலும் கொள்ளார்; பழிக்கும் நாணார். 506

அறிய வேண்டியவற்றை அறியாதவரை அன்பு காரணமாகத் தெரிந்தெடுத்தல் முழுமையான அறியாமையாகும். 507

ஆராயாமல் ஒருவனைத் தேர்ந்தெடுத்தல் அவனுக்கே அன்றி அவன் மரபினர்க்கும் நீங்காத் துயராகும். 508

ஆராயாமல் ஒருவரையும் தெளிதல் கூடாது;தெளிந்த பின்னரும் அவரைத் தெளிந்த துறைக்கே பயன்படுத்த வேண்டும். 509

ஆராயாமல் ஒருவனைத் தெளிவதும்; பின்னர்த்தெளிந் தவன்மேல் ஐயப்படுவதும் நீங்காத் துன்பம் தரும். 510

52. தெரிந்து வினையாடல்

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 511

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

அன்பறிவு தேற்றம் அவாவின்மை, இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 513

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. 515

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல். 516

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல். 517

வினைக்குரிமை நாடிய பின்றை. அவனை
அதற்குரிய னாகச் செயல். 518

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. 519

நாடோறும் நாடுக மன்னன்: வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 520

அலுவல் புரிவாரை ஆராய்ந்து ஆளும் தன்மை

நல்லதன்மை அல்லதன்மை ஆகிய இரண்டையும் எண்ணி நல்ல தன்மைக்குரியவனைக் கொள்ளல் வேண்டும். 511

வருவாயைப் பெருக்கி வளஞ்சேர்த்துப் பின் விளைவை யும் எண்ண வல்லவன் செயலாற்றத் தக்கவன். 512

அன்பும் அறிவும் தெளிவும் ஆசை இல்லாமையும் ஆகிய இவை நன்கமைந்தவனையே தெளிதல் வேண்டும். 513

எத்தனை வழிகளால் ஆராய்ந்தாலும் செயல்நிலையில் வேறுபடும் மாந்தர் பலராவர். 514

நன்றாக எண்ணிச் சிறப்பாகச் செய்பவரை அல்லாமல் பிறரைச் சிறந்தாரெனச் செயலுக்கு ஏற்றல் ஆகாது. 515

செய்பவனையும் ஆய்ந்து, அவன் செயலையும் ஆய்ந்து, காலத் தொடு பொருந்துமாறு எண்ணிச் செய்தல் வேண்டும். 516

இச் செயலை இவ்வகையால் இவன் செய்து முடிப்பான் என்பதை எண்ணி அவனை அச்செயலுக்கு ஆக்குக. 517

செயலுக்குரிய தகுதியை ஆய்ந்த பின்னர், அதற்குத் தக்கவனை அதற்கு உரியவனாக்குதல் வேண்டும். 518

செயலிலே கருத்தாக இருப்பவனை, வேறுபட நினைப்பவனை விட்டு வளமை நீங்கும். 519

ஆள்பவன் நாள்தோறும் செயலாற்றுவாரை ஆராய்க. அவர் தவறாமையே உலகத் தவறாமையாம். 520

53. சுற்றந் தழால்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 521

விருப்பறாச் சுற்றம் இயையின், அருப்பறா
ஆக்கம் பலவும் தரும். 522

அளவளா வில்லாதான் வாழ்க்கை, குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. 523

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 524

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின், அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். 525

பெருங்கொடையான் பேணான் வெகுளி, அவனின்
மருங்குடையார் மாநிலத் தில். 526

காக்கை கரவா கரைந்துண்ணும்: ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 527

பொதுநோக்கான் வேந்தன், வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 528

தமராகித் தற்றுறந்தார் சுற்றம், அமராமைக்
காரணம் இன்றி வரும். 529

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். 530

சுற்றத்தாரைப் பேணிக் கொள்ளுதல்

பலரும் தொடர்பை விட்ட பொழுதிலும் பழந்தொடர்பை மறவாமை சுற்றத்தாரிடத்தே தான் உண்டு. 521

விருப்பம் நீங்காத சுற்றம் அமைந்தால், நீங்குதல் இல்லாத நன்மைகள் பலவும் உண்டாம். 522

சுற்றத்தோடு கலந்து பழகாதவன் வாழ்வு, குளத்தைச் சுற்றி யமைந்த கரையில்லாமல் நீர் நிறைந்தது போலாம். 523

ஒருவன் செல்வம் பெற்ற பயன், சுற்றத்தினர் அவனைச் சுற்றியிருந்து வாழ்தலாகும். 524

கொடையும் இனியன கூறலும் ஒருவன் கொண்டிருந் தால் பெருஞ்சுற்றத்தாரும் சூழ்ந்திருக்கப் பெறுவர். 525

பெருங் கொடையாளனாகவும், சினங்கொள்ளாதவனாக வும் இருந்தால் அவனைப் போல் சுற்றமுடையார் இரார். 526

காகம் கிடைத்த உணவை மறைக்காமல் கூடியுண்பது போல் பயன்படவே, செல்வர்க்குச் செல்வம் உள்ளது. 527

ஆள்வோன் பொதுவாகக் கருதாமல் ஒருவர் சிறப்பு நிலை யைக் கருதினால் அதனைக் கருதி வாழ்வாரும் பலர். 528

தம் உறவினராக இருந்து தம்மை நீங்கியவர், நீங்கியதற் குரிய காரணம் நீங்கியபின் சுற்றமாக வருதல் கூடும். 529

நெருங்கியிருந்து பிரிந்து ஒரு காரணத்தால் மீளவும் வந்தவனைத் தலைவன் பொறுத்திருந்து ஆராய்ந்து ஏற்க வேண்டும். 530

54. பொச்சாவாமை

இறந்த வெகுளியின் தீதே, சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. 531

பொச்சாப்புக் கொல்லும் புகழை, அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 532

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை; அதுவுலகத்
தெப்பால்நூ லோர்க்கும் துணிவு. 533

அச்ச முடையார்க் கரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 534

முன்னுறக் காவா திழுக்கியான், தன்பிழை
பின்னூ றிரங்கி விடும். 535

இழுக்காமை யார்மாட்டும் என்றும், வழுக்காமை
வாயின் அதுவொப்ப தில். 536

அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். 537

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல். 538

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக, தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 539

உள்ளிய தெய்தல் எளிதுமன், மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின். 540

மறதி இல்லாமை

அளவுகடந்த சினத்திலும், மிகுந்த உவகைப் பெருக்கி னால் சோர்வடைந்து கிடத்தல் தீமையாகும். 531

அறிவை நிலைபெற்ற வறுமை அழிப்பது போல, மறதி புகழை அழித்து விடும். 532

மறதியாளர்க்குப் புகழ்ப் பேறு இல்லை; அது உலகத் துள்ள நூலாசிரியர் அனைவர் முடிபுமாகும். 533

அஞ்சுபவர்க்கு எப் பாதுகாப்பும் இல்லை. அதுபோல் மறதியாளர்க்கு எந் நன்மையும் இல்லை. 534

வருமுன்னர்த் தீமையைக் காக்கத் தவறினால் அது பின்னே நூறு மடங்கு வருந்தத்தக்க தாகி விடும். 535

மறதி இல்லாமை எவரிடத்தும் எப்பொழுதும் தவறாது உண்டானால் அதற்கு இணையான நலம் இல்லை. 536

மறவாமை என்னும் கருவியைக் கொண்டு பேணிச்செய் தால் செய்தற்கு அரியது என்பது எதுவும் இல்லை. 537

பாராட்டுக் குரியவற்றைக் கருத்துடன் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறியவர்க்குப் பின்நலம் இல்லை. 538

தாம் தமக்குண்டாகிய மகிழ்ச்சிப் பெருமையின் பொழுதில், கடமையைப் புறக்கணித்துக் கெட்ட வரை நினைக்க. 539

நினைத்தது எளிதாக நிறைவேறும்; ஆனால் நினைக்கத் தக்கதை நினைப்பதாக இருத்தல் வேண்டும். 540

55. செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 541

வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 542

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட.
பெயலும் விளையுளும் தொக்கு. 545

வேலன்று வென்றி தருவது. மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். 546

இறைகாக்கும் வையக மெல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 547

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும். 548

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 549

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல். பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 550

செம்மையாக ஆளும் தன்மை

ஒரு பக்கம் சாராமல் ஆராய்ந்து எவரிடத்தும் நடுவு நிலையுடன் செய்யப்படுவதே செங்கோல் ஆகும். 541

உலகம் வான் மழையை நோக்கியே வாழும்; அதுபோல் குடிமக்கள், ஆட்சியை நோக்கியே வாழ்வர். 542

அருளாளர் நூலுக்கும், அறநெறிக்கும் அடிப்படையாய் அமைந்தது ஆட்சியேயாகும். 543

குடிமக்களைத் தழுவி ஆளும் தலைவனின், அடியைத் தழுவி உலகமக்கள் வாழ்வர். 544

இயற்கையைக் காத்து ஆட்சி நடத்தும் தலைவனின் நாட்டில் மழையும் விளைவும் கூடியமையும். 545

ஆள்வோன் ஆட்சி தவறற்றது என்றால், அவன் படையால் அன்றி ஆட்சியே வெற்றி தந்துவிடும். 546

நாட்டைக் காப்பவன் ஆள்பவனே; அவன் அதனைத் தவறின்றிக் காத்தால் அதுவே அவனைக் காக்கும். 547

எளிமையாக இருந்து ஆய்ந்து ஆட்சி செய்யாதவன் இரங்கத்தக்க தன்மையால்தானே கெட்டுப் போவான். 548

குடிகளைத் துயரில்லாமல் காத்து, குற்றமுண்டாயின் தண்டித்தல் குற்றமில்லை; ஆட்சி முறையாம். 549

கொடியவர்களைக் கொலை வகையால் தண்டித்தல்.பயன் பயிர்க்கு உண்டாகிய களையை வெட்டுவது போன்றது. 550

56. கொடுங்கோன்மை

கொலை மேற்கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. 551

வேலொடு நின்றான் 'இடு' என் றதுபோலும்,
கோலொடு நின்றான் இரவு. 552

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும். 553

கூழும் குடியும் ஒருங்கிழக்கும், கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555

மன்னவர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி. 556

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. 557

இன்மையின் இன்னா துடைமை, முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 558

முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559

ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 560

கொடுமையாக ஆட்சி செய்யும் தன்மை

துன்புறுத்துதலைக் கைக்கொண்டு முறை கேடு செய்யும் ஆட்சி, கொலைத் தொழிற் கொடியரினும் கொடியது ஆகும். 551

ஆளும் அதிகாரம் உடையவன் முறைகேடாக வரி வாங்கல் கொள்ளையன் வழிப்பறி செய்வது போன்றதாம். 553

ஒவ்வொரு நாளும் எண்ணி நல்லதைச் செய்யாத ஆட்சி யனின் ஆட்சியில் நாடு, நாள்தோறும் கேடு அடையும். 553

முறை தவறும் அரசு தன் உணவு முதலாம் வருவாயை யும், மக்கள் நல்லெண்ணத்தையும் இழந்து விடும். 554

மக்கள் துன்புற்று அதனைப் பொறுக்கமுடியாமல் விடும் கண்ணீர் அரசையே அழிக்கும் படையாகும். 555

ஆட்சிக்கு நிலைபேறு செம்மையே ஆகும்; அச் செம்மை இல்லை எனில் ஆட்சிக்குப் புகழ் உண்டாகாது. 556

ஆட்சியரின் இரக்கமில்லாமை, மழை இல்லாமையால் உலகுக்கு ஏற்படும் துன்பம் போல் துன்பமாம். 557

செம்மையில்லாத ஆட்சியின் கீழ்ப்படும் போது, செல்வ முடைமை வறுமையினும் துன்பம் தருவதாகும். 558

முறைகேடாக, ஆட்சி நடத்தினால், வாழ்வும் கெட்டு மழை வளமும் இல்லாமல் ஒழியும். 559

செவ்விய ஆட்சி நடைபெறாவிடில் வருவாய் குறைவதுடன், உழவர் முதல் அறுதொழிலரும் கடமை புரியார். 560

57. வெருவந்த செய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து. 561

கடிதோச்சி மெல்ல எறிக. நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 562

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 564

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. 565

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின். நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். 566

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 567

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 569

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல். அதுவல்லை
தில்லை நிலக்குப் பொறை. 570

அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை

தக்க வழியால் ஆராய்ந்து, சாயாமல் சமனிலைப் பட்டு இருந்து, உரிய தண்டனை தருவது முறையாகும். 561

நன்மை விரும்புபவர், கடுந்தண்டம் தருவது போல் காட்டி மெலிதாகத் தருதல் வேண்டும். 562

அஞ்சத் தக்கவற்றைச் செய்யும் கொடிய ஆட்சியன் என்றால் அவன் முழுவதாக விரைவில் கெடுவான். 563

ஆள்பவன் கொடியவன் என்று மக்கள் சொல்லும் சொல்லால் அவன் வாழ்நாள் குறைந்து கெடுவான். 564

காணற்கு இடம் தராதவனாகவும் கடுமுகத்தனாகவும் இருப்பவன் பெருவளம், பேய் கண்ட வளமாம். 565

வன்சொல் சொல்வபனாகவும், அருள் இல்லாத வனாகவும் இருப்பவன் நெடிய வளமும் நீளாமல் கெடும். 566

வலிய சொல்லும், வரம்பில்லாத் தண்டனையும் ஆள்வோன் பெரு வலிமை என்னும் இரும்பைத் தேய்க்கும் அரமாகும். 567

தக்கவர்களோடு அமைந்து ஆராயாது சினத்தொடு செயல் புரிந்தால் அவன் நலங்கள் சிறிதாகிவிடும். 568

முன்னரே பாதுகாப்பைத் தேடாத ஆட்சியன், பகை யழிக்க வரும் போது அஞ்சிக் கொடுமையாக அழிவான். 569

கடுமையான ஆட்சி அறிவில்லாரைச் சார்ந்ததாக இருக்கும். அது அல்லாது நிலத்திற்குப் பாரமாவது வேறொன்றில்லை. 570

58. கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு. 571

கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். 573

உளபோல் முகத்தெவன் செய்யும். அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்? 574

கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம். அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். 575

மண்ணோ டியைந்த மரத்தனையர், கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். 576

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் உலகு. 578

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 579

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர். நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580

பழந்தொடர்பால் இசைந்து போகும் இயல்பு

கண்ணோட்டம் என்று சொல்லப்படும் மிகப் பெரிய நன்மை உள்ளதால் இந்த உலகம் வாழ்கின்றது. 571

கண்ணோட்டத்தால் தான் உலகத்து இயக்கம் உள்ளது. அதனைக் கொள்ளாதவர் உலகுக்குச் சுமை ஆவர். 572

பாடலோடு இசையாத இசை இசையாகாது; அதுபோல் கண்ணோட்டம் இல்லாத கண்ணும் கண் ஆகாது. 573

வேண்டும் அளவால் கண்ணோட்டம் இல்லாத கண், இருப்பதுபோல் முகத்தில் தெரிந்தாலும் பயன் என்ன? 574

கண்ணிற்குத் தக்க அணிகலமாவது கண்ணோட்டமே; அதனை இல்லாவிட்டால் 'கண்' 'புண்' என்றே கருதப்படும். 575

கண் இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர் மண் ணோடு பொருந்தி நிற்கும் மரத்தைப் போன்றவர். 576

கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணும் இல்லாதவரே. கண்ணுடையவர் என்றால் கண்ணோட்டம் இருக்கும். 577

எடுத்த செயல் அழியாமல் கண்ணோட்டம் செய்ய வல்ல வர்க்கே இவ்வுலகப் பேறு உரிமை உடையதாம். 578

தண்டித்தலே உடையவரிடத்தும் கண்ணோட்டத் தோடு பொறுத்துக் கொளலே சிறந்தது. 579

விரும்பத்தக்க கண்ணோட்டம் உடையவர், ஒவ்வாத ஒன்றை உண்ணத்தரினும் அதனை ஏற்று நிறைவு கொள்வர். 580

59. ஒற்றாடல்

ஒற்றும் உரைசான்ற நூலும், இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். 581

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை, எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். 582

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில். 583

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று. 584

கடாஅ உருவொடு கண்அஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 585

துறந்தார் படிவத்த ராகி, இறந்தாராய்ந்
தென்செயினும் சோர்விலா தொற்று. 586

மறைந்தவை கேட்கவற் றாகி, அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று. 587

ஒற்றொற்றித் தந்த பொருளையும், மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588

ஒற்றொற் றுணராமை ஆள்க. உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். 589

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின் -
புறப்படுத்தா னாகும் மறை. 590

ஒற்றர்களை ஆளும் தன்மை

ஆளுபவர்க்கு ஒற்றரும் தகுதி வாய்ந்த அறநூலும் ஆகிய இரண்டும் கண்கள் என்பது தெளிவாகும். 581

நாட்டினர் எவர்க்கும் எதுவும் நிகழலாம். ஆதலால் ஆள்வோன் உடனுக்குடன் எப்பொழுதும் அறிதல் கடன். 582

ஒற்றரைக் கொண்டு ஆய்ந்து கடமை புரியாதவன் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லவே இல்லை. 583

தொழிலர், சுற்றத்தார், பகைவர் என்னும் எவரையும் ஆய்ந்து அறிவதே ஒற்றர் பணியாம். 584

ஐயுறாத தோற்றமும் அஞ்சாமையும் கொண்டு அறிந்ததை வெளிப்படுத்தாமையும் வாய்ந்ததே ஒற்றாகும். 585

துறவோர் தோற்றம் கொண்டு ஆழமாக ஆராய்ந்து எது செய்தாலும் அறிந்ததை வெளியிடாததே ஒற்றாகும். 586

மறைவாகச் சொல்வதையும் கேட்கும் திறமையோடு அறிந்தவற்றில் ஐயமில்லாத் தெளிவினது ஒற்றாகும். 587

ஓர் ஒற்றன் சொல்லிய சொல்லையும் மற்றோர் ஒற்றினால் ஆய்ந்து கொள்ளுதல் வேண்டும். 588

ஓர் ஒற்றனும் மற்றோர் ஒற்றனும் அறியாவகையில் ஆய்ந்து மூவர் சொல் ஒன்று போல் இருப்பின் ஒப்பத் தக்கதாம். 589

ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியச் செய்தால் அதுவே அவனைக் காட்டிக் கொடுக்கும். அது கூடாது. 590

60. ஊக்கமுடைமை

உடைய ரெனப்படுவ தூக்கம்; அஃதிலார்
உடைய துடையரோ மற்று? 591

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 592

'ஆக்கம் இழந்தே'மென் றல்லாவார், ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 593

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவிலா
ஊக்க முடையா னுழை. 594

வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 595

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 596

சிதைவிடத் தொல்கார் உரவோர்; புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. 597

உள்ளம் இலாதவர் எய்தார், உலகத்து
'வள்ளியம்' என்னும் செருக்கு. 598

பரியது கூர்ங்கோட்ட தாயினும், யானை
வெரூஉம் புலிதாக் குறின் 599

உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம்;மக்க ளாதலே வேறு. 600

செயலில் மனஎழுச்சி உடையவராக இருத்தல்

ஒன்றை உடையவர் என்றால் ஊக்கம் உடையவரே அதனை இன்றி மற்றவற்றை உடையவர் உடையவர் ஆகார். 591

ஊக்கம் உடைமையே உடைமையாகும்; பொருள் உடைமையோ நிலைபெறாது நீங்கிப் போகும். 592

ஊக்கத்தை உறுதியாக உடையவர், எங்கள் நலங்களை இழந்துவிட்டோம் என்று ஏங்கமாட்டார். 593

உறுதியான ஊக்கம் உடையவனிடத்து, நலமே வழி கேட்டுச் சென்று அடையும். 594

நீரின் உயரத் தளவு நீர்ப்பூ உயரமாகும்; அது போல் ஊக்கத்தின் அளவுக்கு உயர்வு உண்டாம். 595

நினைப்பது எல்லாம் உயர்வையே நினைத்தல் வேண்டும். அது நிறைவேறாவிடினும் அதனைக் கொள்ளல் வேண்டும். 596

அம்பு ஆழமாகத் தைத்தாலும் உறுதி குறையாது யானை. அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவிலும் தளரார். 597

உலகோர் புகழும் கொடைஞர் என்ற [illegible] ஊக்கமில்லாதவர் அடைய மாட்டார். 598

பரியதும் கூர்மையான கொம்புடையதும் ஆகிய யானை யும் புலி தாக்கினால் அஞ்சும்; ஊக்கச் சிறப்பு அது. 599

மனவூக்கமே அழியாச் செல்வம்: அதனை இல்லாதவர் மரம் போன்றவர்; மக்கள் உருவம் என்பதே வேறுபாடு 600

61. மடி இன்மை

குடியென்னும் குன்றா விளக்கம், மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 601

மடியை மடியா ஒழுகல், குடியைக்
குடியா வேண்டு பவர். 602

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603

குடிமடிந்து குற்றம் பெருகும், மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. 604

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 606

இடிபுரிந் தெள்ளும்சொல் கேட்பர், மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். 607

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும். 608

குடியாண்மை யுள்வந்த குற்றம், ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 609

மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 610

சோம்பல் இல்லாமை

குடும்பம் என்று சொல்லப்படும் குறையா விளக்கு, சோம்பல் என்னும் கருக்குஏற ஒளிகுறைந்து அழியும். 601

குடும்பத்தை உயர் குடும்பமாக்க விரும்புபவர், சோம்பலை சோம்புமாறு சுறுசுறுப்பாக வாழவேண்டும். 602

அழிக்கும் சோம்பலைக் கொண்டிருக்கும் அறிவிலி பிறந்த குடி அவனுக்கும் முன்னாக அழிந்துவிடும். 603

சோம்பலில் ஆழ்ந்து சிறப்பாகச் செயல்புரியாதவர் குடும்பம் அழிந்து பழியும் பெருகும். 604

காலநீட்டிப்பு, மறதி, சோம்பல், பேருறக்கம் என்னும் நான்கும் கெட்டுப் போபவர் அணியும் அணிகள். 605

உலகாள்பவர் உறவு கிடைத்தாலும் சோம்பலுடையவர் பெரும் பயன் கொள்ளற்கு இயலாது. 606

சோம்பிக்கிடந்து சிறந்தன செய்யாதவர், அழிசெயல் செய்து இழிசொல் சொலக்கேட்பர். 607

சோம்பல் ஒரு குடும்பத்தில் நிலைபெற்றால் அது அக் குடும்பத்தையே பகைவர்க்கு அடிமையாக்கிவிடும். 608

குடும்ப ஆளுமையில் ஏற்பட்ட குற்றத்தையும் கூட, ஒருவன் சுறுசுறுப்பால் மாற்றியமைக்க முடியும். 609

உலகளந்தவன் என்னும் நிலையைக் கூட, ஒருவன் சோம்பல் இல்லாமல் முயன்றால் அடைய முடியும். 610

62. ஆள்வினையுடைமை

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்:
பெருமை முயற்சி தரும். 611

வினைக்கண் வினைகெடல் ஓம்பல்: வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு. 612

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. 613

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 614

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். 615

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616

மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 617

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி. 618

தெய்வத்தான் ஆகா தெனினும், முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 619

ஊழையும் உப்பக்கம் காண்பர். உலைவின்றித்
தாழா துஞற்று பவர். 620

முயற்சியுடைமை

செய்தற்கு அரியது எனச் சோர்வடையாமை வேண்டும்: முயன்று செய்தால் அது வெற்றியைத்தரும். 611

எடுத்த செயலை முடியாதவரை உலகம் மதியாது: ஆதலால் அதனை இடைத் தடையின்றி முடித்தல் வேண்டும். 612

உதவி என்னும் பெருமிதம், முயற்சி எனப்படும் பெருமை யிலேயே அடங்கியுள்ளது. 613

முயற்சி இல்லாதவன் செய்யவிரும்பும் உதவி, பயிற்சி இல்லாதவன் கருவிபோல் பயன்படாது. 614

இன்பத்தை விரும்பாமல் செயலையே விரும்புபவன் தன் உறவினர் துயரைத் துடைக்கும் வலிய தூணாவன். 615

முயற்சி, நலங்களை எல்லாம் தரும்; முயற்சி இல்லாமை, கேடுகளை எல்லாம் தரும். 616

சோம்பல் இல்லாதவன் முயற்சியில் திருவுள்ளது; சோம்பல் உள்ளவனிடம் உறங்கு மூஞ்சி உள்ளது. 617

உறுப்புக்குறை எவர்க்கும் குறையாகாது; உறுப்பிருந்தும் அறிவுடன் முயற்சி செய்யாமையே குறையாகும். 618

இயற்கையால் ஒரு செயல்நிறைவேறாது எனினும் முயற்சி பட்டபாட்டளவுக்குப் பயன் தரவே செய்யும். 619

இயற்கைத் தடையையும், உறுதியான முயற்சியாளர் வெற்றி காண்பது உறுதியாகும். 620

63. இடுக்கண் அழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 621

வெள்ளத் தனைய இடும்பை. அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

இடும்பைக் கிடும்பை படுப்பர். இடும்பைக்
கிடும்பை படாஅ தவர். 623

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. 624

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும். 625

'அற்றே'மென் றல்லற் படுபவோ. பெற்றேமென்
றோம்புதல் தேற்றா தவர். 626

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல் 627

இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 628

இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

துன்பம் கண்டு துவளாமை

துன்பம் வரும்போது வெற்றிச் சிரிப்புச் சிரிக்க. அதனைப் போல வெற்றிகொள்வது இல்லை. 621

வெள்ளப் பெருக்குப் போலத் துன்பம் வந்தாலும் அறிவாளன் மனத்தில் நினைத்த அளவிலேயே அழிந்து விடும். 622

துன்பத்திற்குத் துன்பம் அடையாதவர், அத் துன்பத்திற்கே துன்பத்தை ஆக்குவர். 623

தடையுண்டாகிய இடத்தெல்லாம், வெல்லும் எருதைப் போன்றவனை நெருங்கிய துன்பமே துன்புறும். 624

தொடுத்து வந்தாலும் அசையாத உறுதியாளனை வருத்த வரும் துன்பமே துன்பப்படும். 625

'பெற்றேம்' என்று கருமித்தனமாக வைத்தலை எண்ணாதவர் 'இழந்தேம்' என்று துன்பப் படார். 626

உடல் துன்பத்திற்கே உறைவிடமானது என்று உயர்ந்தோர் கலக்கத்தை ஒழுக்கமாகக் கொண்டு வருந்தார். 627

இன்பத்தை விரும்பாது துன்பத்தை இயல்பானது என்பவன் துன்பம் அடையான். 628

இனியதில் மிக இனியதை விரும்பாதவன், துயரில் மிகுதுயரை அடையான். 629

துன்பமே இன்பம் எனக் கொண்டால் அவனுக்கு அவன் பகைவரும் பாராட்டும் சிறப்பு உண்டாகும். 630

64. அமைச்சு

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. 631

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. 632

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. 633

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 634

அறனறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. 635

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை. 636

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். 637

அறிகொன் றறியான் எனினும், உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 638

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். 639

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்.
திறப்பா டிலாஅ தவர். 640

மந்திரியின் இயல்பு

செய்யும் கருவி, உரியகாலம், செயல், செயல்திறம் என்ப வற்றில் சிறந்து விளங்குவது அமைச்சு ஆகும். 631

உறுதி, குடிகளைக் காத்தல், கல்வி, அறிவுடைமை, முயற்சி என்னும் ஐந்தும் சிறந்தது அமைச்சு ஆகும். 632

பிரிக்க உரியவரைப் பிரித்தல், தக்காரைப் பேணல், பிரித்தவரைக் கூட்டல் என்பனவும் அமைச்சே. 633

தக்கதைத் தெரிதல், தெளிந்து செய்தல், உறுதியாகச் சொல்லல் ஆகியவற்றில் வல்லதும் அமைச்சு ஆகும். 634

அறத்தை அறிந்து, நிறைந்தமைந்த சொல்லையுடைய வன், எப்பொழுதும் ஆராயத்தக்க துணை ஆவன். 635

நுண்ணறிவும் நூலறிவும் உடையவனுக்கு முடியாத மிக நுண்ணியது என்பவை எவையும் இல்லை. 636

அமைச்சனாவான், செயற்கை அறிந்தாலும் உலகத்தின் இயற்கை நிலையையும் அறிந்து செய்தல் வேண்டும். 637

ஆள்பவன் அறிய வேண்டியதை அறியானாய் இருப்பினும் அமைச்சன் உண்மையை உரைத்தல் கடமையாம். 638

பக்கத்தே இருந்து தீமையைக் கருதும் அமைச்சன் ஒருவன், பகைவர் எழுபது கோடிப்பேர்க்கு ஒப்பாவான். 639

செயல் திறம் இல்லாதவர், முறையாக ஆராய்ந்தாலும் நிறைவேறாத வகையிலேயே செயலாற்றுவர். 640

65. சொல்வன்மை

நாநலம் என்னும் நலனுடைமை, அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. 641

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 642

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643

திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனினூஉங் கில். 644

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. 645

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 647

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். 649

இணருழ்த்தும் நாறா மலரனையர், கற்ற
துணர விரித்துரையா தார். 650

பிறர் உளங்கொள்ளுமாறு சொல்லும் திறமை

சொல்வன்மை என்னும். நன்மை பெருநன்மை. அது வேறு எந்த நலத்திலும் உள்ளது இல்லை. 641

நலமும் தீமையும் சொல்லால் வருதலால். அச்சொல்லில் குறையில்லாமல் சொல்லுதல் வேண்டும். 642

கேட்டவர்களை வயப்படுத்திக் கேளாதவரையும் கேட்க விரும்புமாறு சொல்ல வல்லதே சொல்வன்மையாகும். 643

ஒன்றைச் சொல்லும் திறத்தோடு சொல்ல வேண்டும்; ஏனெனில், அதைப்போன்ற அறமும் பொருளும் இல்லை. 644

தன் சொல்லை வெற்றி கொள்ளும் சொல் இல்லா வகை யில் ஒருவர் சொல்லைச் சொல்லுதல் வேண்டும். 645

பிறர் விரும்புமாறு சொல்லி அவர் சொல்லும்சொல்லின் பயனைக் கொள்வது குற்றமற்ற பெரியவர் கொள்கை யாகும். 646

சொல்வன்மையும் சோர்வு இல்லாமையும் அஞ்சாமையும் உடையவரை எதிரிட்டு எவரும் வெல்லல் இயலாது. 647

கேட்பவர் உளத்தொடு கலந்து இனிமையாகச் சொல்லும் திறம் இருப்பினும் இவர் ஏவலை உலகமும் உடனே ஏற்கும். 648

குற்றமற்ற சிலவற்றைச் சொல்லத் திறமில்லாதவரே பலவற்றைச் சொல்ல விருப்பப்படுவர். 649

தாம் கற்றதை அறியச் சொல்லும் திறமை இல்லாதவர் மலர்ந்தும் மணம் பரப்பா மலரைப் போன்றவர். 650

66. வினைத் தூய்மை

துணைநலம் ஆக்கம் தரூஉம்; வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651

என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு
நன்றி பயவா வினை. 652

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை,
'ஆஅதும்' என்னு மவர். 653

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்,
நடுக்கற்ற காட்சி யவர். 654

எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. 655

ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க,
சான்றோர் பழிக்கும் வினை. 656

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 657

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 659

சலத்தால் பொருள்செய் தேமார்த்தல், பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. 660

செய்யும் செயல் தூயதாக இருத்தல்

துணையின் நல்லதன்மை வளத்தைத் தரும்; ஆனால் எடுத்த செயலின் நல்ல தன்மையோ விரும்பும் எல்லாம் தரும். 651

பெருமையும் நன்மையும் தராத செயல்களை என்றும் செய்யாமல் நீக்கிவிட வேண்டும். 652

பெருமை பெறவேண்டும் என்று நினைப்பவர், அதனைக் குறைக்கும் செயலைச் செய்யாது ஒதுக்குதல் வேண்டும். 653

உறுதியான அறிவுடையவர் எவ்வளவு துன்பம் வரினும் இழிவான செயலைச் செய்யமாட்டார். 654

தானே வருந்தும் செயலைச் செய்தல் ஆகாது. அப்படிச் செய்யின் மீளவும் அதனைச் செய்யாமை நல்லது. 655

பெற்றவள் பசித்துக் கிடக்கக் கண்டாலும் பெரியவர் பழிக்கும் செயலைச் செய்தல் ஆகாது. 656

பழியைக் கொண்டு அடையும் நன்மையிலும் உயர்ந்தோர்க்கு மிகுவறுமையே உயர்வாம். 657

உயர்ந்தோர் விலக்கியவற்றை விலக்காமல் செய்தவர்க்கு அவர் மனம் போல் முடிந்தாலும் முடிவிலாத் துயரே தரும். 658

பிறர் அழுமாறு பறித்தவையும் தான் அழுமாறே பறி போம்; நல்வழியில் வந்தவை என்றும் நலம்தரும். 659

வஞ்சத்தால் பொருளைத் தேடிக் காப்பது சுடாத பச்சை மண் பானையில் நீர்விட்டு வைப்பது போன்றதாம். 660

67. வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்:
மற்றைய எல்லாம் பிற. 661

ஊறொரால் உற்றபின் ஒல்காமை. இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். 662

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும். 663

சொல்லுதல் யார்க்கும் எளிய: அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம். வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும். 665

எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 666

உருவுகண் டெள்ளாமை வேண்டும்: உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து. 667

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

துன்பம் உறவரினும் செய்க. துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 670

செயலாற்றும் உறுதி

செயல் உறுதி என்பது ஒருவன் மனஉறுதியே; மற்றைய உறுதிகள் எல்லாம் உறுதிகள் ஆகா. 661

ஆராய்ந்தவர் கொள்கை செயல்தடையை நீக்குதல், நீங்கிய பின் தளராது முடித்தல் என்னும் இரண்டுமாம். 662

செயல் முடியும் வரை செய்துவிடுவதே ஆண்மையாகும்; இடையே விட்டால் நீங்காத துன்பம் உண்டாகும். 663

சொல்லுவது எவர்க்கும் எளியதேயாம்; ஆனால் சொன்னபடி செய்து நிறைவேற்றல் அரிதாகும். 664

சிறப்பாகச் செயலாற்றிப் பெருமை பெற்றவர் செயல்திறம், ஆள்வோரை அடைந்து அவரால் பாராட்டப்படும். 665

எண்ணுகின்றவர் உறுதியுடையவரானால், தாம் எண்ணியதை எண்ணியவாறு அடைவர். 666

எவரையும் அவர் உருவம் கண்டு இகழாமை வேண்டும்; தேரின் அச்சாணி போன்றவரும் உளர். 667

உறுதியாகத் தேர்ந்து கொண்ட செயலை, அசையாமல் சோர்வு நீங்கிச் செய்தல் வேண்டும். 668

துன்பம் பலவாக வந்தாலும் துணிவுடன் இன்பம் தரும் செயலையே செய்தல் வேண்டும். 669

எத்தனை வகை உறுதிகளை உடையவராக இருப்பினும் செயலுறுதி இல்லாதவரை உலகம் விரும்பாது. 670

68. வினை செயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்: அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

தூங்குக தூங்கிச் செயற்பால: தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 672

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 673

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 674

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675

முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 676

செய்வினை செய்வான் செயல்முறை, அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். 677

வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று. 678

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

செயல்களைச் செய்யும் வகை

ஓர் ஆராய்ச்சியின் முடிவு தெளிந்த உறுதியாகும்: அது, செயல்தாழ்ச்சியால் நின்றுவிட்டால் கேடாகும். 671

காலந்தாழ்த்துச் செய்வதை அவ்வாறே செய்ய வேண்டும்; சுறுசுறுப்பாகச் செய்வதை அவ்வாறே செய்ய வேண்டும். 672

எல்லாவகையாலும் செயலாற்றல் நல்லதே; அஃது ஆகாத போது, நிறைவேறத் தக்கவகை ஆய்ந்து செய்க. 673

செயல்முடியாமை, பகையழியாமை என்னும் குறைகள் தீயை அணையாது விட்ட குறைபோல் அழிக்கும். 674

பொருள், கருவி, காலம், செயல், இடம் என்னும் ஐந்தையும் தெளிவாக எண்ணிச் செயலாற்றல் வேண்டும். 675

செயல் முடிவு, செயல் நடை, முடிவின் பயன் என்பவற்றை எண்ணிப் பார்த்தே எச்செயலையும் செய்தல் வேண்டும்.676

ஒரு செயலைச் செய்பவன், செய்யும் முறையாவது, அதன் நுட்பம் அறிந்தவன் உட்கருத்தைக் கொள்வதாகும். 677

ஒரு செயலை மற்றொரு செயலால் நிறைவேற்றல் மதயானையை மதயானையால் பிடிப்பதாம். 678

பகைவரை இணக்கமாக்கிக் கொள்ளுதல், நண்பர்க்கு நல்லது செய்தலினும் விரைந்து செய்யத் தக்கதாகும். 679

உறுதி குறைந்தோர் அஞ்சும் குறையை முடிப்பதற்குப் பெரியவரைப் பணிந்து உதவி பெறுதலும் தக்கதே. 680

69. தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 681

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. 682

நூலாருள் நூல்வல்ல னாகுதல். வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 683

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 684

தொகச்சொல்லித் தூவாத நீக்கி. நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 685

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது. 686

கடனறிந்து காலம் கருதி இடனறிந்
தெண்ணி உரைப்பான் தலை. 687

தூய்மை துணைமை துணிவுடைமை. இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 688

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான். வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். 689

இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது. 690

தூது செல்பவர் இயல்பு

அன்பு, நற்குடிப் பிறப்பு, தலையாய பண்பு ஆகியவை தூதுரைப்பானுக்கு வேண்டிய இயல்புகள் ஆகும். 681

அன்பும், அறிவும், தெளிவான சொலவன்மையும் ஆகியவை தூதுரைப்பானுக்கு மிகத் தேவையானவை. 682

பகைவரிடத்து வெற்றியுண்டாக்க வல்ல தூதன் இயல்பு, நூல் தேர்ச்சியாளருள்ளும் தேர்ச்சியாளனாக இருப்பதே. 683

அறிவும் தோற்றமும் ஆய்வுடைய கல்வியும் என்பவை நிரம்பியவன் தூது சொல்லுதற்குச் செல்வானாக. 684

சொல்ல வேண்டியவற்றைத் தொகுத்துரைத்துத் தகாதவற்றை விலக்கி மகிழவுரைத்து நலம் புரிவது தூதன் இயல்பாம். 685

கல்வியும் அஞ்சாமையும் பதியச் சொல்வதும் உரிய பொழு தில் அறிய வேண்டியதை அறிவதும் தூது ஆகும். 686

மேற்கொண்ட கடமையை அறிந்து, காலத்தை எண்ணி, தக்க இடத்தையும் ஆய்ந்து உரைப்பவன் சிறந்த தூதனாவான். 687

தூய்மை, துணைத்தன்மை, துணிவு கொள்ளல் என்பவை வாய்மை நெறி நீங்காமல் உரைக்க வேண்டும் தூதனியல்பாம். 688

ஆள்வோர் சொல்லிய சொல்லை உரைக்கும் தூதன், குற்றமான சொல்லை மறந்து கூடச் சொல்லாத வலிய வனாவன். 689

அழிவே ஏற்படும் எனினும் தன் நாட்டுக்கு நன்மை தருவதைச் சொல்வதே தூதின் மாண்பாகும். 690

70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 691

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கம் தரும். 692

போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 693

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்,
ஆன்ற பெரியா ரகத்து. 694

எப்பொருளும் ஓரார். தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 695

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 696

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். 697

இளையர் இனமுறையர்; என்றிகழார். நின்ற
ஒளியோ டொழுகப் படும். 698

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 699

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 700

ஆட்சியாளரொடு பழகும் வகை

வலிய ஆட்சியரை நெருங்கிப் பழகுபவர், மிக விலகாதும் நெருங்காதும் தீக்காய்வார்போல் அமைவாராக. 691

ஆட்சியர் துய்க்க விரும்பும் ஒன்றைத் தாம் விரும்பா திருந்தால் அதனால் பெருநலம் உண்டாகும். 692

காக்க அரியவற்றைக் காத்தல் வேண்டும்; அவ்வாறின்றி முதிரவிட்டால், அதன் விளைவைத் தடுத்தல் அரிதாகும். 693

மிகப் பெரியவரின்முன் காதொடு பேசுதல், கூடிச்சிரித்தல், ஆகியவை இல்லாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். 694

ஆள்வோர் கமுக்கத்தைத் தாமே ஆராயாதும் அதனைப் பற்றித் தொடர்ந்து எண்ணாதும் அவரே கூறுங்கால் அறிவாராக. 695

ஆள்வோரிடம் பழகுபவர் அவர் குறிப்பு, காலம் ஆகிய வற்றையறிந்து விரும்பும் வகையில் சொல்வாராக. 696

ஆள்வோர் விரும்புவனவற்றைக் கூறி பயனற்றவற்றை அவர் கேட்டாலும் கூறாது விடுதல் வேண்டும். 697

ஆள்பவரை இளையர் என்றும் உறவினர் என்றும் இகழாமல் அவர் பதவிக்குத் தக நடந்து கொள்ளல் வேண்டும். 698

அசைவில்லாத அறிவாளர், யாம் ஆள்பவர் விருப்புக்கு உரியம் என்று கருதி அவர் விரும்பாதவற்றைச் செய்யார். 699

யாம் ஆள்பவர்க்குப் பழைய தொடர்புடையோம் என்று எண்ணிப் பண்பற்றவற்றைச் செய்தல் கேடாகும். 700

71. குறிப்பறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. 701

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 702

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 703

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. 704

குறிப்பிற் குறிப்புணரா வாயின், உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்? 705

அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 707

முகம்நோக்கி நிற்க அமையும். அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். 708

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் 709

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற. 710

பிறர் கருத்தை அவர் சொல்லாமலே அறிதல்

ஒன்றைச் சொல்லாமலே குறிப்பால் அறியவல்லவன், வற்றாத நீர்சூழ்ந்த உலகுக்கு அணிகலம் போன்றவன். 701

உள்ளத்து இருப்பதை ஐயமின்றி அறிய வல்லவனைத் தெய்வத்துக்கு ஒப்பாகக் கொள்ள வேண்டும். 702

நுண்ணியதில் நுண்ணிய உட்கருத்தையும் அறிய வல்ல வனை எதனைக் கொடுத்தும் உறவாகக் கொள்ள வேண்டும். 703

உட்கருத்தைச் சொல்லாமலே அறிய வல்லவரோடு மற்றவர் உறுப்பால் ஒத்தவர் எனினும் வேறானவர். 704

கண்ட அளவில் உட்கருத்தை அறிய முடியாது ஆயின், அவன் உறுப்புகளுள் கண் என்ன பயனுடையது? 705

தன்னை நெருங்கியதைக் காட்டும் கண்ணாடிபோல் நெஞ்சில் மிகுந்துள்ள உணர்வை முகம் வெளிப்படுத்தி விடும். 706

முகத்தினும் அறிவுடைய ஒன்று இல்லை; அது உள்ளத்து விருப்புவெறுப்புகளை முன்னரே காட்டிவிடும். 707

உள்ளத்தைப் பார்த்து ஆங்குள்ளதை உணர்வாரைப் பெற்றால் அவர் முகத்தைப் பார்த்த அளவானே புலனாம்.708

கண்காட்டும் குறிப்பு வகையை அறிவாரைப் பெற்றால் பகைநட்பு என்பவற்றைக் கண்களே காட்டிவிடும். 709

குறிப்பறிதலில் தேர்ந்தவர் என்பதை அளக்கும் அளவு கருவி கண்ணைப் போலப் பிறிதொன்று இல்லை. 710

72. அவை அறிதல்

அவையறிந் தாராய்ந்து சொல்லுக: சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 711

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக. சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 712

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர். சொல்லின்
வகையறிவார் வல்லதூஉம் இல். 713

ஒளியார்முன் ஒள்ளிய ராதல்: வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 714

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே. முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 715

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே. வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. 716

கற்றறிந்தார் கல்வி விளங்கும். கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. 717

உணர்வ துடையார்முன் சொல்லல். வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 718

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க. நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 719

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால். தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 720

அவையறிதல் தன்மை அறிந்து உரையாற்றல்

சொல்தொகுதியை அறிந்தோர் தாம் சொல்லும் அவையின் தன்மையை ஆராய்ந்து சொல்வாராக. 711

சொல்லின் ஒழுங்கினைத் தெரிந்த நல்லவர், தாம் சொல்லும் இடத்தினை நன்றாக ஆராய்ந்து சொல்வாராக. 712

அவையை அறியாமல் சொல்பவர் சொல்லின் கூறுபாடு அறியார்; அவர் தெளிந்தது ஒன்றும் இல்லை. 713

அறிவாளர் முன் அறிவாளராக இருக்க, அறிவிலார் முன் சுண்ணாம்பு நிறம்போல் வெள்ளையாக இருக்க. 714

நல்லது என்று பாராட்டுவனவற்றுள்ளும் நல்லதாவது, அறிவுடையார் முன் முந்திப் பேசா அடக்கம். 715

மிகுந்த அறிவுடையார் முன்னர்க் குற்றமுண்டாகப் பேசுதல் வெள்ளத்தில் நீந்துவார் உறுதி தளர்தலாம். 716

குற்றமற்ற சொல்லாய்வாளரிடத்துக் கல்வி வல்லார் கூறும்போது அக்கல்வி மேலும் விளக்கமுறும். 717

பேசுவார் உணர்வோடு ஒத்தவர் முன் பேசுதல் வளரும் பயிர் உள்ள விளைநிலத்தில் மழை பெய்வது போன்றதாம். 718

சான்றோர் அவையில் பதியச் சொல்ல வல்லவர் சால்பில் லார் அவையில் மறந்தும் கூடச் சொல்லாதிருப்பாராக. 719

தம் இயல்பொடு பொருந்தார் அவையில் பேசுதல் சாய்க் கடையில் கொட்டப்பட்ட பால் போன்றதாம். 720

73. அவை அஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார், சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 721

கற்றாருள் கற்றார் எனப்படுவர், கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 722

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத் தஞ்சா தவர். 723

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724

ஆற்றின் அளவறிந்து கற்க. அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு? நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு? 726

பகையகத்துப் பேடிகை ஒள்வாள், அவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். 727

பல்லவை கற்றும் பயமிலரே, நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 728

கல்லா தவரின் கடையென்ப, கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார். 729

உளரெனினும் இல்லாரொ டொப்பர், களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 730

கூட்டத்தில் உரையாற்ற அச்சம் கொள்ளாமை

சொல் தொகுதியை அறிந்தமேலோர், சொல் வகையைத் தெரிந்து வன்மையானவற்றைச் சொல்லார் 721

கற்றவரிற் சிறந்த கற்றவர் என்பவர், கற்றவர்முன் தாம் கற்றதைப் பதியுமாறு சொல்பவர் ஆவர். 722

போரில் துணிந்து போரிட்டுச் சாகின்றவர் பலர். ஆனால், கற்போர் அவையில் பேச வல்லவர் மிகச் சிலர். 723

அறிவாளர் முன் கற்றவற்றைப் பதியச் சொல்லித் தம்மினும் கற்றவரிடத்துச் சிறந்துள்ளஅறிவைப் பெற வேண்டும். 724

கற்றோர் கூட்டத்தில் அஞ்சாமல் மறுமொழி தருவதற்காகக் கற்கும் வகையில் முறையோடு கற்றல் வேண்டும். 725

வீரர் அல்லார்க்குக் கருவியோடு என்ன தொடர்பு? அஞ்சுவார்க்கு நூலொடு என்ன தொடர்பு? 726

அவையில் பேச அஞ்சுவோன் கற்ற நூல் கோழையின் கையில் உள்ள படைக்கருவி போன்றது. 727

நல்ல அவையில் பேச வல்லமை இல்லாதவர் எவ்வளவு கற்றாலும் பயனற்றவரே. 728

படித்தும் அறிஞர் அவையில் பேச அஞ்சுபவர் படியாத வரினும் கீழானவர் ஆவர். 729

அவைக்கு அஞ்சிப் படித்ததைச் சொல்ல முடியாதவர் கல்வி அறிவுள்ளவர் எனினும் இல்லாதவரொடு சேர்ந்தவரே. 730

74. நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 731

பெரும்பொருளால் பெட்டக்க தாகி, அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 732

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. 733

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. 734

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735

கேடறியாக் கெட்ட விடத்தும், வளம்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. 736

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு. 737

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 738

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளம்தரும் நாடு. 739

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே,
வேந்தமை வில்லாத நாடு. 740

நாட்டின் சிறப்பியல்பு

குறையாவிளைவு, குணமிக்க பெரியவர், பெருநலச் செல்வர் ஆகியோர் சேர்ந்துறைவதே நாடாகும். 731

பெரும் வளத்தால் விரும்பத்தக்கதாய், வறட்சியிலும் மிக விளையத் தக்கதாய் அமைந்ததே நாடாகும். 732

எவ்வளவு சுமை உண்டாயினும் ஏற்று, அரசுக்கு வரியை முழுவதும் செலுத்துவதே நாடாகும். 733

மிகுந்த பசியும், நீங்கா நோயும், கெடுபகையும் இல்லாமல் இயங்குவதே நாடாகும். 734

ஒன்றுபடாப் பலபிரிவும், கெடுக்கும் உட்பகையும், அரசை அழிக்கும் கொலைகுரும் இல்லாததே நாடாகும். 735

வறுமை அடையாததாய், அப்படி வறுமை அடையினும் கெழுமை குறையாததாய் உள்ளநாடே உயர்நாடு. 736

மேல்நீர் கீழ்நீர் ஆகிய நீரும் வளமான மலையும் ஆறும் காவலும் ஆகியவை நாட்டின் உறுப்புகள் 737

நோயில்லாமை செல்வவளம் விளைவு நலம் பாதுகாப்பு என்பவை நாட்டிற்கு அணிகலம் போன்றவை. 738

தன் நாட்டில் வளப் பெருக்குடையதே நாடாகும். பிற நாடு தேடி வளம் பெறும்நாடு வளநாடு ஆகாது. 739

எல்லாவளங்களும் உடையதாயினும் சிறந்த ஆட்சி முறைமை இல்லாதநாடு பயனற்ற நாடே. 740

75. அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொருள்: அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண். 742

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். 743

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி, உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண். 744

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி, அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண். 745

எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்துதவும்
நல்லாள் உடைய தரண். 746

முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். 747

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். 748

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். 749

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண். 750

பாதுகாப்பு

வலியவர்க்கும் அரண் பயனாகும். அவ்வாறே அச்சத்தால் தம்மைக் காக்க விரும்புபவார்க்கும் பயனாகும். 741

தூய நீரும் நிலமும் மலையும் அடர்ந்தகாடும் ஆகியவை அரண்களாம். 742

உயரம் அகலம் வலிமை பற்றுதற்கு அருமை என்னும் நான்கும் அரணின் சிறப்பென்று கூறும் அரண நூல். 743

எளிய காவலால் பெரிய இடம் அமைந்து பகைவர் வலிமைமைய அழிப்பது அரணாகும். 744

பகைவர் பற்ற அரியதாகி, வேண்டும் உணவைக் கொண்டு, உள்ளிருப்பார்க்கு வாய்ப்பாவது அரணாகும். 745

எல்லா நலங்களும் கொண்டு, உரிய வகையில் உதவும் வீரர் உடையது அரணாகும். 746

முற்றுகையிட்டும், முற்றுகையிடாது அழித்தும், வஞ்சித்தும் பிடிக்க முடியாதது அரணாகும். 747

பெரும் போரிட்டு முற்றுகையிட்டவரையும் பற்றிப் பிடித்து வெற்றி கொளச் செய்வது அரணாகும். 748

போரில் பகைவர் அழியுமாறு செயல்திறம் வல்ல கருவிகளைக் கொண்டது அரணாகும். 749

எவ்வளவு பெருமையுடையதாயினும் செயல்திறம் இல்லா ரிடத்து அரணம் சிறப்படைதல் இல்லை. 750

76. பொருள் செயல் வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் 751

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்: செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 752

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 753

அறனீனும்: இன்பமும் ஈனும்: திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 754

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 755

உறுபொருளும் உலகு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

அருளென்னும் அன்பீன் குழவி, பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 757

குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. 758

செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 759

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 760

பொருளை ஆக்கும் வழி

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்க வைக்கும் பொருள். சிறந்த பொருளேயாம். 751

பொருள் இல்லாதவரை எவரும் இகழ்வர். பொருள் உள்ளவரை எவரும் சிறப்பிப்பர். 752

பொருள் எனப்படும் அணையாவிளக்கு எண்ணிய இடத்தெல்லாம் ஒளி செய்யும். 753

முறையாயும் தீமையில்லாதும் தேடியபொருள் அறமும் தரும்; இன்பமும் தரும். 754

அன்பும் அருளும் நீங்கி வந்த பொருளைத் தொடாமல் போக விடுதல் வேண்டும். 755

விளை பொருளும் வரிப்பொருளும் தண்டப் பொருளும் ஆகியவை அரசின் பொருள்களாம். 756

அன்புத்தாய் பெற்ற அருட் குழந்தை பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் வளரும். 757

கைப் பொருளோடு ஒரு செயலைச் செய்தல் மலைமேல் ஏறி நின்று, யானைப் போரைக் காண்பது போன்றது. 758

பொருளை ஆக்குக; அது போல், பகைவர் பெருமையை அழிக்கும் கூர்மையான கருவி இல்லை. 759

பொருளை மிகத் தேடிக் கொண்டவர்க்கு அறமும் இன்பமும் எளிதில் கிடைக்கும் பொருள்களாம். 760

77. படை மாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை, வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. 761

உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது. 762

ஒலித்தக்கால் என்னாம் உவரி? எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 764

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

தார்தாங்கிச் செல்வது தானை, தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. 767

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 768

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 769

நிலைமக்கள் சால உடைத்தெனினும், தானை
தலைமக்கள் இல்வழி இல். 770

படையின் பெருமை

பலபகுதிகளைக் கொண்ட வலிய வெற்றிப்படை நாட்டுச் செல்வங்களுள் எல்லாம் தலைமையானது. 761

அயலான இடத்தில் அஞ்சத்தக்க நிலையினும் அஞ்சாமை, பரம்பரை வீரப்படைக்கே உண்டு. 762

எலிகள் கடல்போல் கூடி ஒலித்தாலும் என்ன, பாம்பு மூச்சுவிட்ட அளவில் ஓடிப்போகும். 763

தளராதும் வஞ்சத்துக்கு ஆட்படாதும் பரம்பரையாய் வலிமையுடையதே படையாம். 764

உயிரைப் பிரிக்கும் கூற்றமே தாக்கவந்தாலும் துணிந்து நிற்கும் வலியதே படையாகும். 765

வீரம் மானம் பெருமித நடை தெளிவு என்னும் நான்கும் படைக்குப் பாதுகாப்பாகும். 766

தாக்க வந்த போரைத் தடுக்கும் வகையறிந்து முற்பட்டு நிற்பதே படையாகும். 767

அழிக்கும் திறமும் ஆற்றலும் இல்லையானாலும் படை, தன் பொலிவாலும் வெற்றி பெறலுண்டு. 768

இழிவை, நீங்கா வெறுப்பு, வறுமை, ஆகியவை இல்லாப் படை வெற்றிப் படையாம். 769

பரம்பரை வீரர்களை மிகக் கொண்டிருந்தாலும் தக்க தலைமை இல்லையானால் படை சிறப்புறாது. 77C

78. படைச் செருக்கு

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர்: பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர். 771

கான முயல்எய்த அம்பினில், யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

பேராண்மை என்ப தறுகண்: ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 773

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

விழித்தகண் வேல்கொண் டெறிய, அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 775

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

சுழலும் இசைவேண்டி, வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

உறின்உயிர் அஞ்சா மறவர், இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

இழைத்த திகவாமைச் சாவாரை, யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். 779

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து. 780

படையின் பெருமிதம்

பகைவரே, எம் தலைவன்முன் நில்லாதீர்! பலர் அவன் முன்னே நின்று நடுகல்லாகிப் போயினர். 771

காட்டு முயலை எய்த கணையைப் பார்க்கினும் யானை மேல் குறிவைத்துத் தப்பிய வேல் சிறந்தது. 772

பேராண்மை என்பது வீரமாகும். ஆனால் போரில் வீழ்ந்தவர் மேல் காட்டும் இரக்கம் அதனிற் சிறந்தது. 773

கையில் இருந்த வேலை யானைமேல் எய்தவன் தன் மேல்பட்ட வேலைப் பறித்து மகிழ்வான். 774

வேல் தாக்க வரும்போது அச்சத்தால் கண்மூடினால் அது வீரர்க்குப் பழியாகும். 775

போர்ப்புண் படாத நாள்களை யெல்லாம் புகழிலா நாள்கள் என எண்ணுவான் வீரன். 776

பரவும் புகழை விரும்பி உயிரை விரும்பாத வீரர் போர்க் கோலம் கொள்வதும் ஓர் அழகாம். 777

போரில் தம் உயிர்க்கும் அஞ்சாத வீரர், தலைவன் தடுப்பினும் தளர மாட்டார். 778

சொன்ன சொல் மாறாமல் சாகின்றவரைத் தவறு செய்தாரெனத் தண்டிப்பவர் எவர்? 779

காத்தவர் கண்ணீர் விடுமாறு சாகும்பேறு உண்டானால், அச்சாவு வேண்டிப் பெறத் தக்கதாகும். 780

79. நட்பு

செயற்கரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு? 781

நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. 782

நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 783

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. 784

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785

முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகம்நக நட்பது நட்பு. 786

அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 787

உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 788

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில், கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789

'இனையர் இவரெமக் கின்னம்யாம்' என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. 790

தோழமைச் சிறப்பு

நட்புச் செய்தலினும் சிறந்த செயல் இல்லை; அதுபோல் காவல் கடமைக்குச் சிறந்த உதவியாவதும் இல்லை. 781

பண்புடையவர் நட்பு வளர்பிறை போன்றது; பண்பற்ற அறிவிலியர் நட்பு தேய்பிறை போன்றது. 782

சொல்லும் போதெல்லாம் நூற்சுவை பெருகுவது போன்றது பழகும் போதெல்லாம் பண்புடையவர் நட்பு. 783

நட்பு என்பது சிரித்து மகிழ்தற்கு உரியது இல்லை; வரம்பு மீறிய இடத்தில் இடித்துரைப்பதற்கும் ஆகும். 784

தொட்டுப் பழகுதல் என்பது வேண்டுவது இல்லை; ஒத்த எண்ணத்தால் பழகுவதே நட்புரிமை ஆகும். 785

முகமரை நட்புச் செய்வது நட்பு ஆகாது; உளம் மரை நட்புச் செ ய்வதே நட்பு ஆகும். 786

கேடானவற்றை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் உண்டாயின் தானும் துன்புறுவதே ஒத்த நட்பாகும். 787

உடையை இழந்தவன் கை, மானம் காப்பது போல், நண்பன் துயரை உடனே நீக்குவதே நட்பாகும். 788

நட்பின் உயர்ந்த இருக்கை எது வென்றால், அசைவு இல்லாமல் உறுதியாக இருப்பதாகும். 789

'இவர் எமக்கு இத்தகையர்: யாம் அவர்க்கு இத்தகையம்' என்று சொல்வதும் கீழானது எனப்படும் நட்பாகும். 790

80. நட்பாராய்தல்

நாடாது நட்டலின் கேடில்லை: நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 791

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை. கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 792

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு. 793

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 794

அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 795

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். 796

ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 797

உள்ளற்க உள்ளம் சிறுகுவ: கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 798

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799

மருவுக மாசற்றார் கேண்மை ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 800

தோழமைக்கு உரியவரை ஆராய்தல்

ஆராயாமல் நட்புச் செய்தலினும் கேடாவது இல்லை; ஏனெனில் நட்புச் செய்தபின் அவரை விடுவது அரிதாகும். 791

பல்கால் எண்ணிப்பாராமல் நட்புச் செய்யின் இறுதியில் தான் அழிந்து போகும் துன்பத்தையே அது உண்டாக்கும். 792

நற்குணம் நற்குடி குற்றம் குறையிலாத் தொடர்பினர் இவற்றை யெல்லாம் அறிந்தே நட்புச் செய்தல் வேண்டும். 793

நற்குடியில் பிறந்து பழிக்கு நாணம் கொள்பவனொடு அவன் வேண்டுவன தந்தும் நட்பாதல் வேண்டும். 794

தவறும்போது அழும்படி சொல்லியும், தீயதை இடித் துரைத் தும் திருத்துவார் நட்பைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.795

வறுமையினும் ஒருநன்மையுண்டு: அது நட்பாக இருப் பவரை அளந்து கொள்ளும் அளவு கோலாகும். 796

ஒருவனுக்கு மேலாக வருமானமாவது அறிவிலார் நட்பை அகற்றி விடுவதேயாகும். 797

உள்ளத்தைச் சிறிதாக்குவதை எண்ணாமை வேண்டும் அது போல் துன்பத்தில் கைவிடுவாரைக் கொள்ளாமை வேண்டும்.798

அழிவுப் பொழுதில் கைவிட்டுச் செல்வாரைப், போர்க் களத்தில் பகைவன் அழிக்கும் போது நினைப்பினும் மனத்தைச் சுடும். 799

குற்றமில்லாப் பண்பினர் நட்பைக் கொள்க தகவில்லாதவரை அவர் விரும்பும் ஒன்றைத் தந்தும் விலக்கி விடுக. 800

81. பழைமை

பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை; மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். 802

பழகிய நட்பெவன் செய்யும். கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை? 803

விழைதகையான் வேண்டி இருப்பர். கெழுதகையான்
கேளாது நட்டார் செயின். 804

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 805

எல்லைக்கண் நின்றார் துறவார். தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806

அழிவந்த செய்யினும் அன்பறார். அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807

கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். 808

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 809

விழையார் விழையப் படுப. பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். 810

வழிவழியாகத் தொடரும் நட்பு

பழந்தொடர்பு எனப்படுவது எது என்றால், அது உரிமை யால் செய்வனவற்றை அழித்திடாத நட்பாகும். 801

நட்பு என்பதன் உறுப்பாவது ஒத்து இயல்வதாகும்; அதற்கு மேலும் சுவையாக்கல் உயர்ந்தோர் கடமையாகும். 802

ஒத்த இயல்போடு பொருந்தியிரா விட்டால், தொடர்ந்து வந்த நட்பு என்னதான் செய்தற்குரியது? 803

ஒத்த இயல்பால் கேளாமல் ஒன்றைச் செய்தாலும், அதனைத் தாமும் விரும்பியதாகவே கொள்வர் பழநட்பாளர். 804

வருந்தத் தக்கவற்றை நண்பர் செய்தால், அறியாமையால் அன்று; உரிமையால், என உணர்தல் வேண்டும். 805

தொலைவில் தொல்லைப்படும்போது துணையானவர் நட்பை, நட்பின் உயர்நிலையில் நிற்பவர் நீங்கார். 806

அன்பு வழிப்பட்ட நண்பினர், தமக்கு அழிவானவற்றை நண்பர் செய்தாலும் அவ்வன்பில் நீங்கார். 807

நண்பர் குறையைக் கூறவும் கேளாத உரிமை நண்பினர்க்குக் கேடு செய்தல் பழகிய காலத்திற் கெல்லாம் இழிவாம். 808

இடையீடு இல்லாமல் தொடரும் நண்பினரின் நட்பை உயர்ந்தோரும் மிகவிரும்பிப் போற்றுவர். 809

பழந்தொடர்பினைப் பிரியாத நண்பினர், பகைவராலும் கூட விரும்பப்படுவர். 810

82. தீ நட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. 811

உறின்நட் டறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? 812

உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது
கொள்வாரும், கள்வரும் நேர். 813

அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 814

செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 815

பேதை பெருங்கெழீஇ நட்பின், அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். 816

நகைவகைய ராகிய நட்பின், பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். 817

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 818

கனவினும் இன்னாது மன்னோ, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819

எனைத்தும் குறுகுதல் ஓம்பல், மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. 820

தீயவர்களுடன் கொண்ட நட்பு

பருகத் தக்க சுவைநீர் போன்றவர் எனினும் பண்பாடு இல்லார் நட்பு, வளர்வதிலும் தேய்வதே நல்லது. 811

வாய்ப்புள்ள போது நண்பாகி, இல்லாத போது நீங்குபவர் நட்பைப், பெற்றாலும் இழந்தாலும் என்ன பயன்? 812

என்ன கிடைக்கும் என்று கருதும் நண்பரும் பெறுவதே நோக்காயினாரும் திருடரும் ஒப்பானவர். 813

போரில் அஞ்சி கூடறுத்தோடும் விலங்கு போன்றவர் தொடர்பினும், தனித்திருத்தல் சிறந்தது. 814

நட்பாகியும் பாதுகாப்பு இல்லாத சிறுமையினர் இழிந்த நட்பை அடைவதிலும் அடையாமை நல்லதாம். 815

அறிவிலானொடு கொண்ட நட்பினும், அறிவுடையவ ரொடு கொண்ட பகைமை கோடிப்பங்கு நலமாம். 816

சிரித்து மகிழ்வார் நட்பினும், பகைவரால் பத்துக்கோடி மடங்கு நலமுண்டாகும். 817

செய்ய முடிந்த செயலையும் செய்ய விடாதவர் நட்பைச் சொல்லாமலே ஒழித்து விடவேண்டும். 818

செயல் வேறாகவும் சொல்வேறாகவும் உடையவர் நட்பு கனவில் காணினும் துன்பம் தருவதேயாம். 819

வீட்டில் உறவாடிக் கூட்டத்தில் பழிப்பவர் தொடர்பைச் சிறிதும் நெருங்குதல் வேண்டா. 820

83. கூடா நட்பு

சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 821

இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர்
மனம்போல வேறு படும். 822

பலநல்ல கற்றக் கடைத்தும், மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது. 823

முகத்தின் இனிய நகாஅ, அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824

மனத்தின் அமையா தவரை, எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று. 825

நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826

சொல்வணக்கம் ஒன்னார்க்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும், ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 828

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 829

பகைநட்பாம் காலம் வருங்கால், முகநட்
டகநட் பொரீஇ விடல். 830

பொருந்தாதவர் நட்பு

கூடாமல் கூடியவர் நட்பு, தக்க பொழுது வாய்ப்பின் கொல்ஸர்பட்டடைக் கல்போல் வருத்தவே உதவும். 821

ஒத்தவர் போல் இருந்து ஒவ்வாதவர் நட்பு, பொருட் பெண்டின் மனத்தைப் போல் இருவேறுபட்ட தாகும். 822

நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றாலும் நன்மனத்தராக நட்புக் கொள்ளல், இழிந்தவர்க்கு இல்லையாகும். 823

முகம் மலரச் சிரித்து, மனத்தில் மாறான வஞ்சம் உடையவரை அஞ்சி நடத்தல் நன்மையாம். 824

மனத்தில் பொருந்தா நண்பினரை அவர் சொல்லால் சிறிதும் நம்புதல் ஆகாது. 825

நண்பர் போல் நல்லவற்றைச் சொன்னாலும் பொருந்தார் சொல் விரைவில் வெளிப்பட்டு விடும். 826

வில்லின் வளைவு தீமை விளைப்பதை அறிதலால், பகைவர் பணிவுச் சொல்லைப் பணிவாகக் கொள்ளல் ஆகாது. 827

கும்பிட்ட கையுள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும்; பகைவர் அழுத கண்ணீரும் அக்கருவியாம். 828

மிகுந்த நட்பினராகித் தம்மை இகழ்பவரை, மகிழச் செய்து நட்பை ஒழிந்து போக விடுதல் முறை. 829

பகையாயினார் நண்பராகும் காலம் வருமானால் முகத்தால் நண்பராய் மனநட்பை ஒழித்து விடுக. 830

84. பேதைமை

பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல். 831

பேதைமை யுள்ளெல்லாம் பேதைமை: காதன்மை
கையல்ல தன்கண் செயல். 832

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 833

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். 834

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு. 835

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 836

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர், பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837

மையல் ஒருவன் களித்தற்றால், பேதைதன்
கையொன் றுடைமை பெறின். 838

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். 839

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 840

அறியாமைத் தன்மை

அறியாமை என்பது எது என்றால் கேடானதைக் கொண்டு நல்லதை விட்டுவிடுவதாகும். 831

அறியாமையுள் எல்லாம் அறியாமையாவது, ஒழுக்க மற்றதன் மேல் விருப்பம் வைக்கும் செயலாகும். 832

நாணமில்லாமை, ஆராயாமை, அன்பு இல்லாமை, எதனையும் போற்றாமை அறிவிலியின் தொழிலாகும். 833

கற்பனகற்றறிந்தும் அவற்றைப் பிறர்க்கு உரைத்தும் தன்னடக்கம் இல்லாத அறிவிலியில் அறிவிலி இல்லை. 834

அறியாமையில் ஒருப்பட்டுச் செயல்புரியும் அறிவிலி பின் வரும் காலமெல்லாம் துன்பச் சேற்றுள் அழுந்துவன். 835

திறமில்லா அறிவிலி செயலாற்றப் புகுந்தால் செயலை யும் கெடுத்துப் பொய்ப் பழியும் கூறுவான். 836

அறிவிலான் பெருஞ்செல்வம் அடைந்தான் எனின் அயலார் பசியின்றி நுகர, உறவினர் பசித்துக் கிடப்பார். 837

அறிவிலான் கையில் பெருஞ்செல்வம் பெற்றால் அது செருக்கன் ஒருவன் மதுவுண்டது போலாம். 838

அறிவிலியின் நட்பு மிக இனியதாகும்; ஏனெனில், அவனைப் பிரியும் போது துன்பம் இல்லை. 839

பண்பாளர் கூட்டத்தில் அறிவிலான் புகுதல், கழுவாத காலைத் தூய்மையான இடத்தில் வைப்பது போன்றதாம். 840

85. புல்லறிவாண்மை

அறிவின்மை இன்மையுள் இன்மை, பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 841

அறிவிலான் நெஞ்சுவந் தீதல், பிறிதியாதும்
இல்லை; பெறுவான் தவம். 842

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

வெண்மை எனப்படுவ தியாதெனின், 'ஒண்மை
உடையம்யாம்' என்னும் செருக்கு. 844

கல்லாத மேற்கொண் டொழுகல், கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். 845

அற்றம் மறைத்தலோ புல்லறிவு. தம்வயின்
குற்றம் மறையா வழி. 846

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 847

ஏவவும் செய்கலான்; தான்தேறான்; அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 848

காணாதாற் காட்டுவான் தான்காணான்; காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. 849

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான், வையத்
தலகையா வைக்கப் படும். 850

அற்ப அறிவினர் தன்மை

இல்லாமையுள் இல்லாமை அறிவில்லாமை: மற்றை இல்லாமையை இல்லாமையாக உலகம் பழியாது. 841

அறிவிலி மனம் மகிழ்ந்து கொடுப்பதற்கு வேறு காரண மில்லை; அதனைப் பெறுபவன் பொய்வடிவே ஆகும். 842

அறிவிலி தனக்குத் தானே உண்டாக்கும் துன்பம் பகைவராலும் செய்தற்கு இயலாது. 843

அறியாமை எனப்படுவது எது என்றால் யாம் அறிவாளர் என்று எண்ணும் பெருமிதமே யாகும். 844

அறியாதவற்றை அறிநததாகக் காட்டல். குற்றமறக் கற்றதையும் ஐயத்திற்கு இடமாக்கிவிடும். 845

தமக்குள்ள குற்றத்தை மறையாத இடத்தில். மானத்தை மறைத்தலும் கூட இழிந்த அறிவேயாம். 846

மறைக்க வேண்டியவற்றை மறையாமல் சொல்லுபவன் தனக்குப் பெருங்கேட்டைச் செய்பவன் தானே யாவன். 847

பிறர் சொல்லவும் செய்யாதவன், தானே தெளியாதவன் இறக்கும் அளவும் அனைவர்க்கும் நோயே ஆவன். 848

அறிவில்லானுக்கு அறிவிக்க முயல்பவனும் அறிவிலியே. அறிவிலான் தான் அறிந்தவாறு அன்றி. அறியான். 849

உயர்ந்தோர் 'உண்டு' என்பதை 'இல்லை' என்பவன் உலகில் பேயன் என்று கொள்ளப் படுவான். 850

86. இகல்

இகலென்ப எல்லா உயிர்க்கும், பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். 851

பகல்கருதிப் பற்றா செயினும், இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. 852

இகலென்னும் எவ்வநோய் நீக்கின், தவவில்லாத்
தாவில் விளக்கம் தரும். 853

இன்பத்துள் இன்பம் பயக்கும், இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 854

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்? 855

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார், இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 857

இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம்; அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. 858

இகல்காணான் ஆக்கம் வருங்கால், அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. 859

இகலானாம் இன்னாத வெல்லாம்; நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு. 860

மாறுபாட்டின் தன்மை

பிரிவினை எனும் பண்பில்லா நோயை எல்லா உயிர் களுக்கும் பெருக்கும் தன்மையை 'இகல்' என்பர். 851

பிரிதலை விரும்பி விரும்பாச் செயலைச் செய்தாலும் மாறாகத் தீமை செய்யாமை சிறந்தது. 852

மாறுபாடு என்னும் துன்பநோய் ஒழிந்தால், கெடுதல் இல்லாத கு ற்றமற்ற புகழ் ஒளி உண்டாகும். 853

மாறுபாடு என்னும் கொடிய துன்பம் ஒழிந்தால், மிகச் சிறந்த இன்பம் உண்டாகும். 854

மாறுபாட்டுக்கு எதிராக நடக்கும் திறமை அமைந்தவரை எவரும் அம்மாறுபாட்டில் மிகப்படுத்த இயலாது. 855

மாறுபாட்டில் மிகுதல் இனியது என்பவன் வாழ்வுக்கு அழிவும் கேடும் மிக விரைவில் உண்டாகும். 856

மாறுபாட்டைக் கொண்ட தீய அறிவுடையவர் மேன்மை அடைதலோ மெய்ப்பொருள் அறிதலோ கொள்ளார். 857

மாறுபாட்டுக்கு எதிராக இருத்தல் நலமாம். அம்மாறு பாட்டை மிகக் கொள்ளின் அது கேட்டை மிகுவிக்கும். 858

நன்மை வரும் போதில் மாறுபாட்டைக் காணாதவன் கேடுதருங்கால் மாறுபாட்டை மிகக் காண்பான். 859

தீமைகள் எல்லாம் மாறுபாட்டால் உண்டாவனவே; மாறுபாடற்ற மகிழ்வால் நலப்பேறு உண்டாம். 860

87. பகை மாட்சி

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக: ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

அன்பிலன்: ஆன்ற துணையிலன்: தான்துவ்வான்:
என்பரியும் ஏதிலான் துப்பு? 862

அஞ்சும்: அறியான்: அமைவிலன்: ஈகலான்;
தஞ்சம் எளியன் பகைக்கு. 863

நீங்கான் வெகுளி; நிறையிலன்; எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 864

வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழிநோக்கான்;
பண்பிலன்; பற்றார்க் கினிது. 865

காணாச் சினத்தான்; கழிபெருங் காமத்தான்;
பேணாமை பேணப் படும். 866

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற, அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 867

குணனிலனாய்க் குற்றம் பலவாயின், மாற்றார்க்
கினனிலனாம் ஏமாப் புடைத்து. 868

செறுவார்க்குச் சேணிகவா இன்பம், அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி. 870

பகையின் சிறப்பு

தம்மில் வலியவரைப் பகைத்தல் தவிர்க; தம்மைக் காக்க இயலா மெலியவர் மேல் பகை கொள்ளுக. 861

அன்பிலான்; சிறந்த துணை இலான்; தன் வலி இலான்; பகை வலிமையை எப்படி அழிப்பான்? 862

அச்சம் அறியாமை அடக்கம் இல்லாமை கருமித்தனம் ஆகியவை உடையவன் பகைவர்க்கு மிக எளியவன். 863

சீற்றம் உடையவனாய் உறுதி இல்லாதவனாய் இருப்பவன் எப்பொழுதும் எங்கும் எவர்க்கும் எளியனாவன். 864

செயல்வழி அறியாதவன், திறம் அற்றவன், பழி கருதாதவன், பண்பில்லாதவன் பகைவர்க்கு இனியன். 865

பின்வருவதை அறியாச் சினத்தினனும், மிகப் பெருங் காமத்தனும் பகைவரால் விரும்பப் படுவன். 866

மிக நெருங்கியிருந்து சிறுமை செய்வான் பகையை மிகக் கொடுத்தாவது வைத்துக் கொள்ளல் வேண்டும். 867

பண்பற்றவனாய்க் குறைநிரம்பியவனாய் இருப்பவன் பகைவர்க்கு இணையில்லாப் பாதுகாவலன் ஆவான். 868

அறிவில்லாதவரும் அஞ்சுபவரும் ஆகியவரைப் பெற்றால் பகைவர்க்கு நீங்காத இன்பமாகும். 869

போர்த்திறம் கல்லாமல் சீறும் எளியவன் பகையை அழியாதவனைப் புகழ் என்றும் அடையாது. 870

88. பகைத்திறம் தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 871

வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 872

ஏமுற் றவரினும் ஏழை, தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 873

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு. 874

தன்துணை இன்றால், பகையிரண்டால், தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. 875

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 876

நோவற்க நொந்த தறியார்க்கு; மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 877

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 878

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து. 879

உயிர்ப்ப உளரல்லர் மன்ற, செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880

பகையின் இயல்பை ஆராய்தல்

பகை எனப்படும் பண்பற்ற ஒன்றை ஒருவன் விளையாட்டுக் காகக் கூட விரும்புதல் ஆகாது. 871

விற்போர் வீரர் பகையை ஒருவர் கொண்டாலும் சொற்போர் வீரர் பகையைக் கொள்ளுதல் ஆகாது. 872

தனித்திருந்து பலர் பகையைத் தேடிக் கொள்பவன் பித்துக்கொண்டவரினும் அறிவிலான் ஆவன். 873

பகையாக இருப்பாரையும் நட்பாகக் கொள்ள வல்லான் பெருந்தன்மையில் உலகம் உய்யும். 874

தனக்குத் துணையில்லாமல் பகை இரண்டு உடையவன் அப்பகையுள் ஒன்றை இனிய துணையாகக் கொள்வானாக.875

முன்னே தெளிந்தாலும் தெளியாவிட்டாலும் அழிவுள்ள போதில் பகையைத் தெளியாமலும் பிரியாமலும் விடுக. 876

துன்புற்றது அறியார்க்கு அதனைச் சொல்லாதே; அது போல், பகைவரிடத்து மென்மையைக் காட்டாதே. 877

வழியறிந்து தன்னை உறுதியாக்கிக் காத்துக் கொண்டால் பகைவரிடத்து உண்டாம் பெருமிதம் ஒழியும். 878

இளமையாய் இருக்கும் போதே முள்மரத்தை வெட்டுக; இன்றேல், வெட்டுபவர் கை வருந்த முற்றிவிடும். 879

பகைவர் வலிமையை அழிக்க இயலாதவர் உறுதியாக, உயிரோடு இருப்பவர் ஆகார். 680

89. உட்பகை

நிழல்நீரும் இன்னாத இன்னா: தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 881

வாள்போல் பகைவரை அஞ்சற்க: அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

உட்பகை அஞ்சித்தற் காக்க; உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

மனமாணா உட்பகை தோன்றின். இனமாணா
ஏதம் பலவும் தரும். 884

உறல்முறையான் உட்பகை தோன்றின். இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். 885

ஒன்றாமை ஒன்றியார் கட்படின். எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. 887

அரம்பொருத பொன்போலத் தேயும். உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 888

எட்டக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. 889

உடம்பா டிலாதவர் வாழ்க்கை. குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. 890

கூடியிருந்து அழிக்கும் பகை

நிழலினுள்ள நீரும் தீமை செய்யின், தீயதே; அதுபோல், தம்மவர் எனினும் தீமை செய்வார் தீயரே. 881

வாள்போல் தாக்கும் பகைக்கு அஞ்ச வேண்டா; ஆனால் உறவாடிக் கெடுக்கும் பகைக்கு அஞ்சுக. 882

உறவாக இருந்து கெடுப்பவர்க்கு அஞ்சிக்காக்க, காவாக் கால் சோர்வு உண்டாகும் போதில் புதைமண்போல் அழிப்பர். 883

கெடுமனத்தால் உட்பகை உண்டானால், இனத்தோடும் கெடும் துயரம் பலவும் உண்டாக்கும். 884

மிகநெருங்கியவரிடத்து உட்பகை உண்டானால் அது, அழிந்துபடும் துயரம் பலவற்றையும் ஆக்கும். 885

பொருந்தாத் தன்மை பொருந்தியவர்களிடத்து உண்டா னால் எப்பொழுதும் அழியாமை இருத்தல் இல்லை. 886

உட்பகை உள்ள குடும்பம் செப்பும் மூடியும் போலப் பொருந்தினாலும் பொருந்தியது ஆகாது. 887

வலிமையை அழிக்கும் உட்பகை அமைந்த குடும்பம் அராவும் கருவியால் அராவப்படும் இரும்புபோல்தேயும். 888

எள்ளின் பிளவு போன்ற சிறிதளவே ஆனாலும் கூட, உட்பகை உண்டாகுமானால் கெடுவது உறுதியாம். 889

ஒன்றுபட்டு வாழாதவர் வாழ்க்கை குடிசைக்குள் பாம்போடு வாழ்வது போன்றதாம். 890

90. பெரியாரைப் பிழையாமை

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை, போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. 891

பெரியாரைப் பேணா தொழுகின், பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892

கெடல்வேண்டின் கேளாது செய்க. அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 893

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல். 894

யாண்டுச்சென்று யாண்டும் உளராகார், வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 895

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்: உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்.
தகைமாண்ட தக்கார் செறின்? 897

குன்றன்னார் குன்ற மதிப்பின், குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 898

ஏந்திய கொள்கையார் சீறின், இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 899

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்.
சிறந்தமைந்த சீரார் செறின். 900

பெரியவரை மதித்து நடத்தல்

செயல் வல்லாரை இகழாமை, தம்மைப்பேணுவதில் எல்லாம் தலையாயது. 891

பெரியவர்களை மதியாமல் நடந்தால், அவரால், நீங்காத தொல்லை உண்டாதற்கு இடமாகும். 892

கெட்டுப்போக விரும்பினால், எதனையும் செய்யவல்ல பெரியவர் சொல்லைக் கேளாமல் சிறுமையைச் செய்க. 893

செயல் வல்லவர்க்கு அஃதில்லாதார் தீமைபுரிவது அழிவைக் கைதட்டி அழைப்பது போன்றதாம். 894

வலிய ஆள்வோர் சீற்றத்திற்கு ஆட்பட்டவர் எங்குச் சென்றும் எங்குத் தப்பவும் மாட்டார். 895

எரிநெருப்புக்குத் தப்பினும் தப்புவர்; பெரியவர்க்கு மாறாக நடப்பவர் தப்பமாட்டார். 896

பண்பால் உயர்ந்த பெரியவர் சினத்துக்கு ஆட்பட்டால் சிறந்த வாழ்வும் பெரும் பொருளும் கூடப் பயன்படா. 897

மலைபோன்ற பெரியவர் குறைவாக நினைத்தால் தாமே யன்றித் தம்குடி யொடும் அழிந்து படுவர். 898

உயர்ந்த கொள்கையுடைய பெரியவர் சினத்துக்கு ஆட் படின் ஆட்சியரும் அதனை இழந்து கெட்டுப் போவர். 899

சிறப்புடைய பெரியவர் சினத்திற்கு ஆட்படின் அளவு கடந்த துணை வலிமையுடையவரும் தப்பமாட்டார். 900

91. பெண் வழிச்சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 901

பேணாது பெண்விழைவான் ஆக்கம், பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 902

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை, எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. 904

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905

இமையாரின் வாழினும் பாடிலரே, இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 906

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின், நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 907

நட்டார் குறைமுடியார்: நன்றாற்றார்; நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். 908

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல். 909

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 910

தகவிலாப் பெண்ணின் சொல்வழி நடத்தல்

பாலுணர்விலே பெரும் பற்றுடையார் சிறப்பு அடையார்: செயலாற்றலில் சிறந்தவர் விரும்பாப் பொருளும் அதுவாகும். 901

வாழ்வை எண்ணாமல் பாலியலிலேயே பற்று வைப் பவன் உயர்வு, நாணத்திற்கு இடமாகித் தலைக் குனிவாம். 902

பாலியலுக்கு அடிமைப்பட்டு நிற்கும் இயல்பு எப்பொழு தும் பண்பாளர்முன் வெட்கமுறச் செய்யும். 903

பாலுணர்வால் அடிமைப்பட்ட புகழில்லாதவன் செய்யும் செயலில் சிறப்படைதல் இல்லை. 904

மனைவியிடம் அச்சம் உடையவன் எப்பொழுதும் தக்கவர்க்குத் தக்கவை செய்தற்கும் அஞ்சுவன். 905

தோள் தழுவும் இன்பத்திற்காக அவளுக்கு அஞ்சுபவர், மேம்பட்டவர் எனினும் பெருமையர் அல்லர். 906

தீய பெண்வழி நிற்கும் ஆண் பிறப்பினும் இயல்பான நாணம் அமைந்த பெண்பிறப்பே பெருமையானது. 907

பெண்ணின் அழகுக்காக அவளுக்கு அடிமைப்பட்டவர் நண்பர்க்கு வேண்டும் உதவி புரியார்: எந் நல்லதும் செய்யார். 908

தீய பெண்ணின் ஏவலுக்கு ஆட்பட்டுச் செய்பவர் அறமோ, சிறந்த பொருளோ, நல்ல இன்பமோ பெறார். 909

மதிப்புமிக்க மனவலிமையுடையவர்க்கு எப்பொழுதும் மதி கெட்ட பெண்வழி நடக்கும் அறிவில்லாமை இல்லை. 910

92. வரைவின் மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912

பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்கம், இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று. 913

பொருட்பொருளார் புன்னலம் தோயார், அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914

பொதுநலத்தார் புன்னலம் தோயார், மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர் 915

தந்நலம் பாரிப்பார் தோயார், தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 916

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர், பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். 917

ஆயும் அறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 918

வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920

வரம்புக்குள் நில்லாத பெண்டிர்

அன்பால் விரும்பாமல் பொருளுக்கு விரும்புவார் இனிய சொல்இழிவு உண்டாக்கும். 911

பயன்கருதிப் பசப்பிப் பேசும் பண்பிலாரை அறவே நெருங்காது விடல் வேண்டும். 912

பொருளுக்காக விரும்புவாரைப் பொய்யாகத் தழுவுதல் இருட்டில் அயலார் பிணத்தைத் தழுவுவது போன்றது 913

அருளாகிய பொருளை ஆராயும் அறிவாளர். பொருளை விரும்பிக் கூடுவாரைக் கூடார். 914

அறிவுமிக்க பெரியவர் பொதுமகளாக இருப்பாரின் இழிந்த கூட்டத்தைக் கொள்ளார். 915

தமது நலத்தைக் கருதுபவர். பகட்டித் திரியும் பொது மகளிர் இழிந்த இன்பத்தை அடையார். 916

பிறரை வயப்படுத்தித் தழுவும் மகளிரை உறுதிப்பாடு இல்லாரே தழுவுவர். 917

மயக்கும் மகளிர் இன்பம். ஆராயும் அறிவில்லா அவரையே வாட்டும் என்பர். 918

கட்டில்லாத அழகினர் மெத்தென்றதோள். உயர்விலா இழிஞர் அழுந்தும் சேறாகும். 919

பொதுமகளிரும் மதுவும் சூதும் நலங்களால் விலக்கப் பட்டவர் தொடர் பினவாகும். 920

93. கள்ளுண்ணாமை

உட்கப் படாஅர்; ஒளியிழப்பர், எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 921

உண்ணற்க கள்ளை; உணில் உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். 922

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி? 923

நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும், கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924

கையறி யாமை உடைத்தே, பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 925

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 926

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர், எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். 927

'களித்தறியேன்' என்பது கைவிடுக, நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். 928

களித்தானைக் காரணம் காட்டுதல், கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929

கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930

மயக்கும் குடிகளைக் குடியாமை

எப்பொழுதும் மதுமயக்கில் இருப்பவர் வீரத்தையும் மதிப்பையும் இழந்து விடுவார். 921

மதுவை விரும்ப வேண்டா; விரும்பினும் விரும்புக; உயர்ந் தோர் மதிக்கும் மதிப்பை இழக்க வேண்டுமானால். 922

பெற்றவளுக்கும் வெறுப்புத் தரும் குடி, உயர்ந்தோர்க்கு எத்தகையதாக இருக்கும்? 923

மதுக்குடியர் என்னும் குற்றத்தினர் முன், நாணம் என்னும் நல்ல பெண் முகம் காட்டவே மாட்டாள். 924

பொருளைக் கொடுத்து மயக்கத்தை வாங்குதல் செயலறியாச் செயலாகும். 925

உறங்குவார் இறந்தவர் போன்றவரே; அவ்வாறே மதுவுண்பவர் நஞ்சுண்பவர் போன்றவரே. 926

எப்பொழுதும் மதுமயக்கில் கிடப்பவர் தாம் உளறுவதை எல்லாம் ஊரவர் கேட்டுச் சிரிக்கக் காண்பர். 927

"குடிக்கவில்லை" என்று கூறுவதை விடுக; அதனை எப்படி உள்ளே மறைத்தாலும் வெளிப்பட்டுவிடும். 928

குடித்திருப்பவனிடம் அறிவுரை கூறுதல், நீருக்குள் முழுகியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவதாம். 929

தான் குடியாப் பொழுதில், குடித்து மயங்கிக் கிடப்ப வனைக் கண்டாவது குடியன் உண்மை உணர மாட்டானோ? 930

94. சூது

வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 931

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு? 932

உருளாயம் ஓவாது கூறின், பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 933

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். 934

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

அகடாரார்; அல்லல் உழப்பர்; சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார். 936

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்.
கழகத்துக் காலை புகின். 937

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ, அருள்கெடுத்
தல்லல் உழப்பிக்கும் சூது. 938

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல், துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர். 940

வஞ்சத்தால் பொருள் பறித்தல்

வெற்றியே வருமானாலும் சூதாட வேண்டா; சூதின் வெற்றி தூண்டில் புழுவை மீன்கவ்வுதல் போன்றது. 931

சூதாடி என்னும் ஒன்றைப் பெற்றுப் பலவற்றை இழக்கும் சூதாடிக்கு நல்வாழ்வு வாழ வழியுண்டோ? 932

ஓயாமல் சூதாடினால் பொருள் வருவாய் எல்லாம் போயேதொலையும். 933

சிறுமையாக்கிச் சீர் கெடுக்கும் சூதினைக் காட்டிலும் வறுமைப் படுத்துவது எது? 934

சூதாட்டு சூதாடுமிடம் சூதுத்திறம் என்றே இருப்பவர், இருப்பவை எல்லாம் இழந்தவரே. 935

சூது எனப்படும் மூத்தவளால் மூடப்பட்டவர் வயிற்றுக்கும் வழியில்லாமல் துன்புறுவர். 936

சூதாடு களத்திற்கு நாளும் போனால் வழிவழிச் செல்வமும் பண்பாடும் ஒழியும். 937

சூது பொருளை அழித்துப் பொய் சொல்லச் செய்து அருளையும் கெடுத்து அல்லையும் தரும். 938

சூதினைக் கொண்டால் உடை செல்வம் உணவு புகழ் கல்வியாகிய எல்லாம் தொலையும். 939

துன்பம் மிகுந்தோறும் உயிர்மேல் ஆசையாம். அது போல். பொரு ள் இழக்கும்தோறும் சூதில் ஆசையாம். 940

95. மருந்து

மிகினும் குறையினும் நோய்செய்யும். நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின். 942

அற்றால் அளவறிந் துண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 943

அற்ற தறிந்து. கடைப்பிடித்து. மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 944

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. 945

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்.
கழிபேர் இரையான்கண் நோய். 946

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்.
நோயள வின்றிப் படும். 947

நோய்நாடி. நோய்முதல் நாடி. அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 948

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949

உற்றவன்; தீர்ப்பான்; மருந்துழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து. 950

நோய்தீர்க்கும் வழி

மருத்துவ நூலோர் ஊதை பித்தம் கோழை என்று கூறிய மூன்றும், மிகுந்தாலும் குறைந்தாலும் நோயாக்கும். 941

உண்டது செரித்ததை அறிந்து உண்டால் உடலுக்கு மருந்து எனஒன்று வேண்டியதில்லை. 942

நீடித்து வாழவிரும்புபவன் தன் செரிமானம் அறிந்து அளவோடு உண்பானாக. 943

செரித்ததை அறிந்து உறுதிப்பாட்டோடு மாறுபாடில்லா உணவைப் பசித்த பின் உண்க. 944

ஆசையை அடக்கி மாறுபாடு செய்யாத உணவை உண்டால் எத்தீமையும் இல்லை. 945

செரித்ததை அறிந்து உண்பவனுக்கு உள்ள இன்பம் போல் பெருந்தீனியனுக்குத் துன்பம் உண்டாம். 946

பசித்தீயின் அளவறியாமல் மிக உண்பவனுக்கு, நோய் அளவில்லாமல் உண்டாகும். 947

நோயை ஆராய்ந்து அது வந்தவகையை ஆராய்ந்து நீக்கும் வகையை ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். 948

மருத்துவ வல்லான் நோயன் நிலை, நோய்நிலை, நோய்க் காலம் என்பவற்றை எண்ணிச் செய்ய வேண்டும். 949

மருத்துவம் என்பது நோயன் மருத்துவன் மருந்து உதவியாள் என்னும் நால்வகைப் பட்டதாகும். 950

96. குடிமை

இற்பிறந்தார் கண்அல்ல தில்லை, இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

அடுக்கிய கோடி பெறினும், குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 954

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும், பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று. 955

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார். 956

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 958

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 959

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்; குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960

நல்ல குடிவழியினர் தன்மை

நடுவு நிலைமை நாணம் என்பவை நற்குடிப் பிறந்தவர் அன்றிப் பிறர்க்கு இல்லை. 951

நற்குடிப் பிறப்பினர் ஒழுக்கம் வாய்மை நாணம் என்பவற்றை நீங்கார். 952

நற்குடிப்பிறப்பாளர்க்கு மகிழ்வு கொடை இனியவை கூறல் இகழாமை என்பவை இயல்பானவை. 953

பலகோடி பெறுவதாயினும் நற்குடிப்பிறந்தவர் மதிப்புக் குறைவானவற்றைச் செய்யார். 954

உள்ளவற்றை எல்லாம் இழந்தாலும் பழமையான குடியினர் பண்பாட்டில் நீங்கமாட்டார். 955

நற்குடியாய் வாழ்வோம் என்பவர் வஞ்சங் கொண்டு பண்பிலாதவற்றைச் செய்யமாட்டார். 956

நற்குடிப்பிறந்தாரின் சிறுகுற்றம் முழுநிலவில் தோன்றும் கறைபோல் தெரியும். 957

நல்லவற்றின்மேல் பற்றுதல் இல்லையானால் அவன் குடிப் பெருமை ஐயப்படத்தக்கதாம். 958

நிலத்தின் வளம், முளையில் தெரியும்; அதுபோல் நற்குடிப் பிறப்பு அவர் சொல்லில் தெரியும். 959

நன்மை வேண்டுமானால் நாணுதல் வேண்டும். குடிமை வேண்டுமானால் எவரிடமும் பணிவு வேண்டும். 960

97. மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல். 961

சீரினும் சீரல்ல செய்யாரே, சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964

குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின். 965

புகழின்றால்; புத்தேள்நாட் டுய்யாதால்; என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை? 966

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 968

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு. 970

தன் மதிப்புக் குறையாமை

செய்தே ஆகவேண்டும் என்னும் சிறப்புடைய தானாலும் மானக் குறைவானதைச் செய்தல் ஆகாது. 961

சிறப்பொடு பேராற்றலை விரும்புபவர், எத்தகைய சிறந்த பொழுதிலும் சிறப்பில்லாததைச் செய்யார். 962

வளமை மிகும் பொழுதில் பணிவு வரவேண்டும் வறுமை மிகும் பொழுதில் பெருமிதம் வரவேண்டும். 963

மக்கள் தம் பெருமை நிலையில் தாழ்ந்தபோது தலையில் இருந்து உதிர்ந்த மயிர் போன்றவராவர். 964

மானக் குறைவானதைக் குன்றி மணியளவு செய்தாலும் குன்றுபோன்றவரும் குறைந்தவராவர். 965

புகழும் வாராது: அழியா நிலையும் வாராது: அவ்வாறாக மதியாதவரை மதித்துச் செல்வது எதற்கு? 966

பொருந்தாதவர் பின்சென்று உயிர்வாழ்வதினும் அப்பொழுதே இறந்தான் என்பதும் நல்லதே. 967

சிறப்பெல்லாம் நிலைகுலையும் போது, உடலைக் காப்பது என்ன சாவுதாரா மருந்தாகி விடுமோ? 968

மயிரெல்லாம் இழப்பின் இறந்துபோகும் கவரிமான் போன்றவர், மானம் கெடவரின் இறந்து போவர். 969

இழிவு வரும்போதில் வாழாத பெருமையினர் அழியாப் புகழை உலகோர் பாராட்டுவர். 970

98. பெருமை

ஒளிவருவற் குள்ள வெறுக்கை: இளிஒருவற்
கஃதிறந்து வாழ்தும் எனல். 971

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்: சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 972

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 973

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 974

பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின்
அருமை உடைய செயல். 975

சிறியார் உணர்ச்சியுள் இல்லை, 'பெரியாரைப்
பேணிக்கொள்வேம்' என்னும் நோக்கு. 976

இறப்பே புரிந்த தொழிற்றாம், சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின். 977

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 978

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 979

அற்றம் மறைக்கும் பெருமை: சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980

பெருமைக்குரிய நிலை

ஒருவற்குப் பெருமை அழியாச் செல்வமாம். அப்பெருமை யின்றி வாழ்வோம் என்பது இழிவாம். 971

எல்லா உயிர்களும் பிறப்பால் ஒப்பானவையே. ஆனால் ஒரு செயலைச் செய்யும் வகையால் ஒப்பாகா. 972

உயர்வில் இருந்தாலும் உயர்வில்லார் உயர்வில்லாரே. தாழ்வில் இருந்தாலும் தாழ்வில்லார் தாழ்வில்லாரே. 973

கற்புள்ள பெண்களைப் போல ஆண்களும் கற்புடையவராக இருந்தால் பெருமையுண்டு. 974

பிறர்செய்தற்கு அரிய செயலைப் பெருமையுடையவர், செய்யும் வழியால் எளிதாகச் செய்வர். 975

பெரியவர்களைப் போற்றுவோம் என்னும் எண்ணம் சிறியவர் அறிவுக்குத் தோன்றுவது இல்லை. 976

தகுதியில்லார்க்குக் கொடுக்கும் சிறப்பு இறுமாப்புக் கொள்வதற்கே இடமாகும். 977

பெருமை என்றும் பணிவு கொள்ளும்; சிறுமை தற் பெருமையால் இறுமாப்புறும். 978

தற்பெருமை கொள்ளாமை பெருமை இயல்பு. தற் பெருமை மேல் ஊர்ந்துபோதல் சிறுமை இயல்பு. 979

பிறர் குற்றத்தை மறைப்பது பெருமைத் தன்மை. பிறர் குற்றத்தையே கூறுவது சிறுமைத் தன்மை. 980

99. சான்றாண்மை

கடனென்ப நல்லவை எல்லாம், கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 981

குணநலம் சான்றோர் நலனே: பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. 982

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். 983

கொல்லா நலத்தது நோன்மை: பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984

ஆற்றுவார் ஆற்றல் பணிதல்: அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். 986

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ சால்பு? 987

இன்மை ஒருவற் கிளிவன்று, சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988

ஊழி பெயரினும் தாம்பெயரார், சான்றாண்மைக்
காழி எனப்படு வார். 989

சான்றவர் சான்றாண்மை குன்றின், இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 990

பண்புகளால் ஆளும் தன்மை

பிறவிநோக்கம் அறிந்த சால்புடையவர்க்கு, நலமானவை எல்லாம் செய்வதே கடமையாம். 981

சான்றோர் நலம் என்பது அவர் குண நலமாம்; மற்றை நலங்கள் எந்த நலத்தொடும் சேரா. 982

அன்பு, நாணம், ஒப்புரவு, அருள், வாய்மை என்பவை சால்பென்னும் மாடத்தின் தூண்களாம். 983

நோன்பு என்பது உயிர்க்கொலை செய்யாமை, சால்பு என்பது பிறர்குறை சொல்லா நன்மை. 984

வலியவர்க்கு வலிமை பணிவு; அது சால்புடையவர் பகைவரைத் திருத்தும் போர்முறை. 985

தம்மின் தாழ்ந்தவரிடத்தும் தோல்வியை ஒப்புக் கொள்வதே சால்பிற்கு அளவு ஆகும். 986

தீமை செய்தவர்க்கும் நன்மை செய்யாவிடில் அது சால்பு ஆகாது. 987

சால்பு எனப்படும் உறுதி உண்டானால் வறுமை ஒருவனுக்கு இழிவாகாது. 988

சான்றாண்மைக் கடலாக இருப்பவர் மாறாத இயற்கை மாறினாலும் தாம் மாறார். 989

சால்புடையவர் சால்பு குறைந்தால் உலகம் தன் சுமையையும் தான் தாங்காது. 990

100. பண்புடைமை

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப, யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல், இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 992

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்: வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 995

பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996

அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 997

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. 998

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 999

பண்பிலான் பெற்றபெருஞ் செல்வம், நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

நற்குணங்களைக் கொள்ளல்

எவரிடத்தும் பண்பாடு என்று வழங்கப்படுவதை. எளிமையாய் இருப்பதால் அடைதல் எளிதாம். 991

பண்பாடு என்று உலகவர் வழங்குவது அன்புடைமையும் சிறந்தகுடிப் பிறப்புமாம். 992

உறுப்புகள் ஒத்திருத்தல் மாந்தர் ஒப்புமை ஆகாது. விரும்பத்தக்க பண்பு ஒத்திருப்பதே ஒப்பாகும். 993

நல்லுள்ளத்தோடு நன்மை செய்யும் நல்லோர் பண்பை உலகோர் பாராட்டுவர். 994

விளையாட்டிலும் பிறரை இகழ்தல் ஆகாது.பகையிலும் பண்பாடுடையார் பண்பாட்டில் மாறார். 995

பண்பாளர் இருப்பதால் தான் உலகப் பொதுநலம் உள்ளது. இல்லையானால் அது எப்போதோ அழிந்திருக்கும். 996

மக்களியல்பு இல்லாதவர் கூர்மையான அறிவு உடையவர் என்றாலும் கூர்மை இல்லாதவரே. 997

நட்புக் கருதாது நலக்கேடு செய்பவரிடத்தும் பண்பாக நடவாமை இழிவே. 998

மகிழும் இயல்பு இல்லாதவர்க்கு ஒளியுடைய பகற் பொழுதும் இருட்டுப் பொழுதேயாம். 999

பண்பில்லாதவன் பெற்ற பெரிய செல்வம், நல்லபால் தீய ஏனத்தால் கெடுவதுபோல் கெடும். 1000

101. நன்றியில் செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள். அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். 1001

பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 1002

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 1003

எச்சமென் றென்எண்ணும் கொல்லோ, ஒருவரால்
நச்சப் படாஅ தவன்? 1004

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 1005

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான், தக்கார்க்கொன்
றீதல் இயல்பிலா தான். 1006

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம், மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007

நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 1008

அன்பொரீஇத் தற்செற் றறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 1009

சீருடைச் செல்வர் சிறுதுனி, மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. 1010

நன்மை இல்லாத செல்வம்

அளவில்லாமல் தேடி அதை உண்ணாமல் மடிந்த வனுக்க அப் பொருளால் ஆகிய பயனென்ன? 1001

எல்லாமும் பொருளால் ஆகும் என்னும் கருமித்தனம் பெரிய அறியாத் தனமாம். 1002

தேடுவதை விரும்பிப் புகழ்விரும்பாத முயற்சியாளர், நிலத்துக்குச் சுமையானவர். 1003

எவராலும் விரும்பும் செயல் புரியாதவன் இறுதியில் வைத்துப் போவதுதான் என்னவோ? 1004

கொடுத்தலும் நுகர்தலும் இல்லாதவர்க்குப் பலகோடி இருந்தாலும் அவை இல்லாதவையே. 1005

தானும் நுகராமல் தக்கவர்க்கும் தராமல் இருப்பவன் செல்வம் அவனுக்கே கேடாம். 1006

எல்லா நலமும் பெற்றவள் மணமாகாமலே மூத்தது போன்றது பயன்படாத செல்வம். 1007

விரும்பப் படாதவன் செல்வம் ஊர்நடுவே நஞ்சுமரம் பழுத்திருப்பது போன்றது. 1008

அன்பு இன்றித் தன்னையும் அழித்து அறத்தையும் பாராது தேடிய பொருள் கொள்ளையில் போகும். 1009

நல்லவர் அடைந்த சிறுவறுமை, மழை பெய்யாமல் நாடு வறண்டது போன்றது. 1010

102. நாணுடைமை

கருமத்தால் நாணுதல் நாணு: திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011

ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம்
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 1012

ஊனைக் குறித்த உயிரெல்லாம்: நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1013

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. 1014

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்
குறைபதி என்னும் உலகு. 1015

நாண்வேலி கொள்ளாது மன்னோ, வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 1016

நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர். 1017

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்,
அறம்நாணத் தக்க துடைத்து. 1018

குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 1019

நாணகத் தில்லார் இயக்கம், மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 1020

பழிச் செயல் செய்ய வெட்கப்படல்

இழிசெயல் செய்து வெட்கப்படுவதே வெட்கம்; மகளிர் கொள்ளும் வெட்கம் என்பது வேறு. 1011

உணவு உடை மற்றவை எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. நாணுதலே மக்கட்சிறப்பு. 1012

உயிர்கள் உணவைக் கருதி வாழ்வன. மாந்தர் நாணமாம் நலத்தை விரும்புவதே சால்பாகும். 1013

சான்றோர்க்கு அணிகலமாவது நாணம்; அது இல்லாப் பெருமிதம் நோயேயாம். 1014

பிறர் இழிவுக்கும் தன் இழிவுக்கும் நாணங் கொள் பவரே, நாணத்திற்கு இருப்பிடமானவர் என்பர். 1015

உலகமே கிடைத்தாலும் உயர்ந்தோர் நாணம் என்பதை விட்டு அதனைக் கொள்ளமாட்டார். 1016

நாணமுடையவர் நாணம் கெடுநிலையில், உயிரை விடுவரே அன்றி நாணத்தை விடார். 1017

பிறர் நாணக் கூடியதற்குத் தான் நாணவில்லை எனின், அதற்கு அறமே நாணும். 1018

கொள்கை தவறி நடந்தால் குடிப்பிறப்புக் கெடும். நாண மற்றுப் போனால் நல்லவை எல்லாம் கெடும். 1019

நாணமில்லாதவர் உலகில் திரிவது. மரப்பொம்மை உயிருள்ளதெனக் கயிற்றில் ஆடுவது போன்றது. 1020

103. குடி செயல்வகை

கருமம் செயஒருவன் 'கைதூவேன்' என்னும்
பெருமையின் பீடுடைய தில். 1021

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. 1022

'குடி செய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 1023

சூழாமல் தானே முடிவெய்தும், தம்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. 1024

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 1025

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 1026

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 1027

குடிசெய்வார்க் கில்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும். 1028

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ, குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு? 1029

இடுக்கண்கால் கொன்றிட வீழும், அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 1030

தன் குடும்பத்தை உயர்த்தும் வழிகள்

என்கடமையைச் செய்ய எவரையும் தேடேன் என்னும் பெருமையே பெருமையாம். 1021

முயற்சி. அகன்ற அறிவு என்பவற்றின் செயலால் குடிவளம் சிறக்கும். 1022

குடும்பத்தை உயர்த்த நினைப்பவர்க்கு உதவ மேலோரும் வரிந்துகட்டிக் கொண்டு வருவர். 1023

குடும்பத்தை மேம்படுத்தும் முயற்சியினர்க்கு அவர் அதை எண்ணுமுன்னரே நிறைவேறிவிடும். 1024

குறை இல்லாமல் குடும்பத்தை உயர்த்துபவனை உலகமே சுற்றமாகச் சுற்றி நிற்கும். 1025

தான் பிறந்த குடும்பத்தை உயர்த்துவதே ஒருவனுக்கு நல்ல ஆளுமை எனப்படும். 1026

போர்க்களத் தலைமைபோலக் குடும்பத் தலைமையும் தாங்குவார் மேலேயே வரும். 1027

குடும்பத்தைக் காப்பவர் காலம் பாரார். அவர் சோம்பலும் மானமும் கொண்டால் குடி கெடும். 1028

குடும்பத் தாழ்ச்சியை நீக்க நினைப்பவன் உடல், துயர்க்கே இடமாவதோ? இல்லை. 1029

அடுத்தடுத்துக் காக்கும் காவலர் இல்லாத குடும்பம் என்னும் ஆலமரம், வறுமைக் காற்றால் அழிக்கப்படும். 1030

104. உழவு

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்: அதனால்
உழந்தும் உழவே தலை. 1031

உழுவார் உலகத்தார்க் காணி, யஃதாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து. 1032

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் 1033

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 1034

இரவார்: இரப்பார்க்கொன் றீவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 1035

உழவினார் கைம்மடங்கின் இல்லை. 'விழைவதூஉம்
விட்டேம்'என் பார்க்கு நிலை. 1036

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037

ஏரினும் நன்றாம் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 1038

செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும். 1039

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்,
நிலமென்னும் நல்லாள் நகும். 1040

தொழிற் சிறப்பு

உலகம் உழவையே நம்பி இயங்குகின்றது. அதனால் எவ்வளவு துன்பம் வரினும் உழவே உயர்ந்தது. 1031

எத்தொழில் செய்வாரையும் தாங்கும் உழவரே. உலகத்தார்க் கெல்லாம் ஆணிபோன்றவர். 1032

வாழ்பவர் என்பவர் உழவால் வாழ்பவரே: பிறரெல்லாம் அவரைச் சார்ந்து வாழ்பவரே. 1033

ஏர் என்னும் குடையை உடைய உழவர், பலர் குடைகளையும் தம் குடைக்குள் கொண்டவர். 1034

வஞ்சமில்லாமல் உழுதுவாழ்பவர் பிறரிடம் ஒன்றைக் கேளார்; கேட்டவர்க்கும் இல்லை என்னாது தருவார். 1035

உழவர் ஒய்ந்தால், பற்றற்றேம் என்னும் துறவியர்க்கும் வாழ்வு நடவாது. 1036

ஒரு பங்கு கால்பங்காக, உழவு மண் உலர்ந்தால் எரு இல்லாமலே நல்ல விளைவு தரும். 1037

உழுவதினும் எருவிடலும் களை எடுத்தலும் நீர்விடலும் காவல் காத்தலும் சிறப்பாக வேண்டுவன. 1038

நிலத்தைப் பாராமல் உழவன் இருந்தால் அது, கணவன் முகம் பாரா மனைவிபோல் வாட்டமுறும். 1039

வளமான நிலமிருந்தும் எதுவும் 'இல்லை' என்றிருக்கும் சோம்பேறியைக் கண்டு நிலமகளே சிரிப்பாள். 1040

105. நல்குரவு

இன்மையின் இன்னாத தியாதெனின், இன்மையின்
இன்மையே இன்னா தது. 1041

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 1042

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக,
நல்குரவு என்னும் நசை. 1043

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை, இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். 1044

நல்குரவு என்னும் இடும்பையுள், பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். 1045

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும். நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 1046

அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 1047

இன்றும் வருவது கொல்லோ. நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு? 1048

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்: நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது. 1049

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

வறுமை

வறுமையினும் கொடியது எது என்றால் அவ் வறுமைக் கொடுமையே கொடுமையாம். 1041

வறுமை என்னும் பாவி உயிருள்ள அளவும் கெடுப்பான். இறந்த பின்னரும் குடி கெடுப்பான். 1042

தொடராக வரும் வறுமை, குடும்பப் பழமை பெருமை ஆகியவற்றைக் கெடுக்கும். 1043

வறுமை, நற்குடிப் பிறப்பாளரிடத்தும் இழிசொல் சொல்லும் தளர்வை உண்டாக்கும். 1044

வறுமைத்துயருள் பல்வேறு துயர்களும் சென்று சென்று தங்கும். 1045

நல்லதை நன்றாக உணர்ந்து சொன்னாலும் வறியவர் சொல் சிறப்புறாது. 1046

நேர்மையொடு பொருந்தாத வறுமையடைந்தால் பெற்றதாயும் அவனை அயலாக நினைப்பாள். 1047

கொன்றதுபோல் நேற்றுவந்த வறுமை இன்றும் வந்துவிடவே செய்யுமோ? 1048

தீக்குள் உறங்கினாலும் உறங்கலாம் ஆனால் வறுமைக்குள் கண்மூடலும் முடியாது. 1049

உண்ணவும் வகையில்லார் பற்றற்ற துறவு கொள்ளாமை உப்புக்கும் கஞ்சிக்கும் கேடாம் 1050

106. இரவு

இரக்க இரத்தக்கார்க் காணின், கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று. 1051

இன்பம் ஒருவற் கிரத்தல்: இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 1052

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்
றிரப்புமோர் ஏஎர் உடைத்து. 1053

இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. 1054

கரப்பிலார் வையகத் துண்மையால், கண்நின்
றிரப்பவர் மேற்கொள் வது. 1055

கரப்பிடும்பை இல்லாரைக் காணின், நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின், மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. 1057

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 1058

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம், இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை? 1059

இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. 1060

கேட்டுப் பெறுதல்

கேட்டுப் பெறத்தக்கவரிடம் கேட்டுப் பெறுக. அவர் மறுத்தால் அவர் பழியே; கேட்டவர் பழியன்று. 1051

கேட்டுப் பெறுதலும் இன்பமே; கேட்டவை தடையில்லாமல் கிடைக்கும் என்றால். 1052

மறையாமல் கொடுப்பவர் முன்னே நின்று கேட்டுப் பெறுவதும் ஓர் அழகேயாம். 1053

இல்லை என்று சொல்லுதலை அறியாதவரிடம் கேட்டுப் பெறுவதும் கொடுப்பது போன்றதே. 1054

கேட்டுப் பெறுபவர் உலகில் இருப்பது. மறையாமல் கொடுப்பவர் இருப்பதாலேயே 1055

மறையாமல் கொடுப்பவரைக் கண்டபோதே. வறுமை யெல்லாம் ஒழிந்துவிடும். 1056

இகழ்ந்து பழியாமல் கொடுப்பவரைக் கண்டால் உள்ளம் உள்ளுக்குள் மகிழும். 1057

கேட்டுப் பெறுபவர் இல்லை என்றால் உலக இயக்கம் மரப்பொம்மை இயக்கம் போன்றதே. 1058

கேட்டுப் பெறுவார் இல்லாதபோது கொடுப்பவர்க்கு என்னதான் பெருமை உண்டு? 1059

கெஞ்சிக் கேட்பவன் வெகுளக் கூடாது. அதற்கு அவன் வறுமையே தக்க சான்று. 1060

107. இரவச்சம்

கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1061

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான். 1062

'இன்மை இடும்பை; இரந்துதீர் வாம்' என்னும்
வன்மையின் வன்பாட்ட தில். 1063

இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே, இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு. 1064

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில். 1065

ஆவிற்கு நீரென் றிரப்பினும், நாவிற்
கிரவின் இளிவந்த தில். 1066

இரப்பன் இரப்பாரை எல்லாம், 'இரப்பின்
கரப்பார் இரவன்மின்' என்று. 1067

இரவென்னும் ஏமாப்பில் தோணி, கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 1068

இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069

கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ, இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்? 1070

கேட்டுப்பெற அஞ்சுதல்

மறையாமல் கொடுப்பவரிடத்தும் கேளாதிருத்தல் கோடி பெருமையாம். 1061

இரப்பு எடுத்தும் வாழவேண்டும் எனத்தக்க நிலையில் அமைந்த ஆட்சி ஒழியுமாக. 1062

வறுமை கொடுமையானது; அதனைப் பிச்சையால் மாற்றுவோம் என்பது கொடுமையினும் கொடுமை. 1063

வறுமையினும் கையேந்தாத பெருமைத்தன்மை உலகை அளவினும் விரிந்த தாகும். 1064

நீரே உலையாகக் காய்ச்சிய கஞ்சி எனினும் முயற்சியால் வந்ததாயின் அதனினும் இனியது இல்லை. 1065

பசுவுக்குத் தண்ணீரே ஆனாலும் கேட்டுப் பெறுதல் நாவுக்கு இழிவேயாகும். 1066

பிச்சை கேட்பவரை யெல்லாம் "நீங்கள் கேட்டால் அவர் மறைப்பார்; ஆதலால் கேளாதீர்" என்று கேட்பேன். 1067

இரத்தல் என்னும் கட்டுமரம் 'இல்லை' என்னும் பாறைதாக்க உடைந்து போகும். 1068

இரப்பதை எண்ண உள்ளம் உருகும்; இல்லை என்று மறைப்பவரை எண்ண உள்ளம் உலர்ந்துபோகும். 1069

இரந்து கேட்ட அளவிலேயே போகின்ற உயிர். 'இல்லை' என்பவர்க்கு எங்கே ஒளிந்திருக்குமோ? 1070

108. கயமை

மக்களே போல்வர் கயவர்: அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். 1071

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்;
நெஞ்சத் தவலம் இலர். 1072

தேவ ரனையர் கயவர், அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 1073

அகப்பட்டி யாவாரைக் காணின், அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். 1074

அச்சமே கீழ்கள தாசாரம்: எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. 1075

அறைபறை அன்னர் கயவர், தாம்கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 1076

ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு. 1077

சொல்லப் பயன்படுவர் சான்றோர்: கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். 1079

எற்றிற் குரியர் கயவர்? ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. 1080

இழிந்த தன்மை

இழிந்தவரும் மக்களைப் போலவே இருப்பர். இப்படி ஒப்பானவரை யாம் கண்டது இல்லை. 1071

பிறர்நலம் அறிந்தவரினும் கீழோர் நலம் பெற்றவர். ஏனெனில் அவர் மனத்தின் கவலை இல்லை. 1072

கீழோரும் மிக உயர்ந்தோரும் ஒப்பானவரே; ஏனெனில் இருவரும் அவரவர் விரும்புமாறே செய்வர். 1073

தம்மில் தாழ்ந்தவரைக் கண்டால் கீழோர் அவரில் மேம்பட்டு இறுமாப்புக் கொள்வர். 1074

கயவர் கடைப்பிடி. அச்சத்தால் ஆவதே. ஆசையாலும் சிலவற்றைக் கொள்வர். 1075

தாம் கேட்ட கமுக்கத்தைப் பரப்புவதால் கயவர், அறையும் முரசு போன்றவர். 1076

கன்னத்தை உடைக்கும் வளைந்த கையினர்க்கே கயவர் தம் ஈரக்கையையும் உதறுவர். 1077

சொல்லிய அளவில் கேட்பவர் உயர்ந்தோர். கரும்பைப் பிழிவது போல் பிழிந்தால் தான் கேட்பவர் கீழோர். 1078

பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டு குற்றம் காணும் இயல்பினது கயமையாகும். 1079

இடர் ஒன்று உண்டான அளவிலே தம்மை விரைவாய் விற்கவும் செய்வர் கயவர். 1080

திருக்குறள் கருத்துரை

இன்பம்

உயிர் தளிர்க்கச் செய்யும்

உறைவு இடம்

109. தகையணங்குறுத்தல்

அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ! கனங்குழை
மாதர்கொல்! மாலும்என் நெஞ்சு. 1081

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல், தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. 1082

பண்டறியேன் கூற்றென் பதனை; இனியறிந்தேன்;
பெண்தகையால் பேரமர்க் கட்டு. 1083

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால், பெண்தகைப்
பேதைக் கமர்த்தன கண். 1084

கூற்றமோ, கண்ணோ, பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085

கொடும்புருவம் கோடா மறைப்பின், நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண். 1086

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம், மாதர்
படாஅ முலைமேல் துகில். 1087

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே, ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. 1088

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்
கணியெவனோ ஏதில தந்து. 1089

உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 1090

கன்னியைக் கண்ட காளையின் நிலை

யான்காணும் வடிவம் தெய்வமோ. மயிலோ. பெண்ணோ அறிந்திலேன். என் மனம் மயங்குகின்றது. 1081

நான் பார்த்தவள் பார்த்த பார்வை. வருத்தும் பெண் படையோடு வந்தது போன்றது. 1082

முன்னே கூற்று என்பதை அறியேன். அது பெண் வடிவில் வந்து போரிடும் என்பதை இன்றறிந்தேன். 1083

கண்டவர் உயிரைப் பருகும் தோற்றத்தை உடையது இவ்விளையவள் கண். 1084

இவ் விளையவள் கண் கூற்றமோ, கண்ணோ, பெண்மான் கண்ணோ இவை மூன்றும் உடையது. 1085

வளைந்த புருவங்கள் வளையாமல் மறைத்தால் இவள் கண்கள் இவ்வாறு துன்புறுத்த மாட்டா. 1086

இவள் திரண்ட மார்பின் மேல் ஆடை. வலிய யானையின் முகபடாம் போன்றது. 1087

போரில் பகைவரும் நடுங்கும் என் பெருமிதம் இவள் நெற்றிக்குத் தோற்று விட்டதே. 1088

பெண் மான்போல் பார்வையும் நாணமும் உடைய இவளுக்கு வேண்டாத அணிகளை ஏன் பூட்டினர்? 1089

மது பருகினார்க்கு மயக்கம் தருவதல்லாமல் இவ்வாறு பார்த்தவரை மயங்கச் செய்யாதே. 1090

110. குறிப்பறிதல்

இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து. 1091

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம், காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. 1092

நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்: அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். 1093

யான்நோக்குங் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். 1094

குறிக்கொண்டு நோக்காமை யல்லால், ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 1095

உறாஅ தவர்போல் சொலினும், செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். 1096

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு. 1097

அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். 1098

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள. 1099

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. 1100

கண்ணியும் காளையும் தங்கள் மனக் குறிப்பறிதல்

இவளுக்கு இருகண்கள் உள. அவற்றுள் ஒன்று நோயாவது: மற்றொன்று மருந்தாவது. 1091

ஓரக்கண்ணால் பார்க்கும் உவகை, காமத்தில் சரிபாதி அன்று: அதிற் பெரிதாம். 1092

பார்த்தாள்; பார்த்துத் தலைகுனிந்தாள்; அது வயலில் தண்ணீர் நிரப்பியது போன்றதாம். 1093

நான் பார்க்கும் போது நிலத்தைப் பார்ப்பாள். பாராத போது என்னைப் பார்த்து நகைப்பாள். 1094

நேராகப் பாராமையுடன் ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்ப்பது போல் பார்த்துச் சிரிப்பாள். 1095

தொடர்பு இல்லாதவர் போல் பேசினாலும் காதலர் சொல், விரைவில் உணரும்படி வெளிப்படும். 1096

கடுமையான சொல்லும் சினந்தார்போன்ற பார்வையும் நெருங்காதவர் போல் நெருங்கிய காதல் குறிப்பாகும். 1097

மெல்லியவளுக்கு ஒருதனி அழகுண்டு: யான் பார்க்கவும் அன்புடையவள் போல மெல்ல நகுவாள். 1098

அறியார் போலப் பொதுப் பார்வை பார்த்தல் காதலர்க்கு உள்ள தன்மையாம். 1099

கண்ணும் கண்ணும் கூடி விட்டால் அதற்குப்பின் சொல்லால் என்ன பயன். 1100

111. புணர்ச்சி மகிழ்தல்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1101

பிணிக்கு மருந்து பிறமன்: அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 1102

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு? 1103

நீங்கின் தெறூஉம். குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்? 1104

வேட்ட பொழுதின் அவையவை போலுமே,
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால். பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள். 1106

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்.
அம்மா அரிவை முயக்கு. 1107

வீழும் இருவர்க் கினிதே. வளியிடை
போழப் படாஅ முயக்கு. 1108

ஊடல் உணர்தல் புணர்தல் இவை, காமம்
கூடியார் பெற்ற பயன். 1109

அறிதோ றறியாமை கண்டற்றால். காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110

மணங்கொண்டு மகிழ்தல்

காணல் கேட்டல் உண்ணல் முகர்தல் தொடுதல் ஆகிய ஐவகை இன்பமும் இவளிடத்தே உண்டு. 1101

நோய்க்கு மருந்து வேறொன்றாகும். ஆனால் இவள் தந்த நோய்க்கு இவளே மருந்தும் ஆவள். 1102

தம்மை விரும்புவாரைத் தழுவி உறங்குவதினும் இனியதோ, மாயவன் உலகு இன்பம். 1103

விலகினால் சுடவும், நெருங்கினால் குளிரவும் கூடிய நெருப்பை இவள் எங்கே பெற்றாள்? 1104

பூங் கொத்தணிந்த இவள் இன்பம், விரும்பிய பொழுதில், விரும்பின விரும்பின வாய்த்தல் போன்றவாம். 1105

தழுவும்தோறும் உயிர்வளர்தலால் இவள் உடல் அமுதத்தால் செய்யப்பட்டதாகுமோ? 1106

இவளை அடையும் இன்பம் தம் வீட்டில் இருந்து தம் உணவை விருந்தோடு உண்பது போன்றதாம். 1107

காற்றும் ஊடு புகாத தழுவுதல், விரும்பும் இருவர்க்கும் இணையிலா இன்பமாம். 1108

ஊடுதலும், ஊடல் நீங்குதலும், கூடுதலும் ஆகியவை காதல் மிக்கவர் பெற்ற பயனாம். 1109

காதலால் கூடியடையும் இன்பம், அறியும் தோறும் அறியாமை புலப்படுவதுபோல் புதுப்புது இன்பமாம். 1110

112. நலம் புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி அனிச்சமே; நின்னினும்
மென்னீரள். யாம்வீழ் பவள். 1111

மலர்காணின் மையாத்தி நெஞ்சே, இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. 1112

முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்,
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு. 1113

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்,
மாணிழை 'கண் ஒவ்வேம்' என்று. 1114

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 1115

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 1116

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல,
மறுவுண்டோ மாதர் முகத்து? 1117

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 1118

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 1119

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

தலைவியின் அழகு நலம் பாராட்டல்

அனிச்சமே நலமாக வாழ்க; யாம் விரும்புபவள் உன்னினும் மென்மையானவள் என்பதை அறிக. 1111

நெஞ்சமே. இவள்கண் பலரும் காணும் பூவோ என மயங்குகின்றாய்; நீ அறிவில்லாய்! 1112

என்னவளுக்குத் தளிர் உடல்; முத்துப்பல்; இயற்கை மணம்; வேற்கண்; மூங்கில் தோள். 1113

இவள் கண்ணைக் குவளை காணமுடிந்தால் 'ஒப்பாக மாட்டோம்' என்று குனிந்துவிடும். 1114

காம்பை ஒடியாமல் அனிச்சப்பூவைச் சூடினாள்; இடுப்புத் தாங்காது ஒடியும்; மிகத் தீமையே. 1115

முழுமதியா முகமா என்னும் ஐயத்தால் விண்மீன்கள் நிலைகப்போடு இமைக்கின்றன. 1116

இம்மங்கை முகத்தில் முழுமதிக்குள்ள கறைபோல் கறையுண்டோ? இல்லை. 1117

இம் மங்கை முகம்போல் ஒளி செய்வாயானால் மதியே! நீயும் என் அன்புக்கு உரியாய். 1118

மலர்போலும் கண்ணையுடையவள் முகத்திற்கு ஒப்பாக விரும்பினால் மதியே பலரும் காணத் தோன்றாதிரு. 1119

அனிச்சப்பூவும் அன்னத்தின் இறகும் இவள் மெல்லிய அடிக்கு நெருஞ்சி முள் போன்றவை. 1120

113. காதற் சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே, பணிமொழி
வாலெயி றூறிய நீர். 1121

உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. 1122

கருமணியிற் பாவாய்நீ போதாய்; யாம்வீழும்
திருநுதற் கில்லை இடம். 1123

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை; சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. 1124

உள்ளுவன் மன்யான் மறப்பின்; மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 1125

கண்ணுள்ளிற் போகார்; இமைப்பின் பருவரார்
நுண்ணியரெம் காத லவர். 1126

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. 1127

நெஞ்சத்தார் காத லவராக, வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. 1128

இமைப்பின் கரப்பாக் கறிவல்; அனைத்திற்கே
ஏதிலர் என்னுமிவ் வூர். 1129

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும்; இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர். 1130

தலைவனும் தலைவியும் தம் காதல் மிகுதி கூறல்

என் இனியவளின் வாயூறல் பாலில் தேன் கலந்தது போன்ற இனிமை யானது. 1121

எமக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு உடலுக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பாகும். 1122

கண்மணிப் பாவையே, நீ விலகுக; யாம் விரும்புபவளுக்கு வேறு இடமில்லை. 1123

கூடி இருக்கும் போது உயிராக உள்ளாள்; பிரியும்போது சாதற்கு ஒப்பாக உள்ளாள். 1124

மறந்தால் அல்லவோ நினைப்பேன்? போரிடும் கண்ணை யுடையவள் இயல்பை மறவேன். 1125

கண்ணுள்ளேயும் போகார்; இமைத்தாலும் துன்புறார்; அவ்வளவு நுண்மையானவர் எம் கணவர். 1126

எம் கணவர் கண்ணுள் இருத்தலால் அவர் மறைவார் என்று கண்ணுக்கு மையும் தீட்டமாட்டேம். 1127

எம் கணவர் நெஞ்சில் இருத்தலால் வெந்துவிடுவார் என வெப்பமாக உண்ணவும் அஞ்சுகிறோம். 1128

கண்ணைத் திறந்தால் மறைந்துவிடுவார்: அதற்கே அன்பிலார் என்கிறதே ஊர். 1129

உள்ளத்துள் மகிழ்வாக உள்ளார் கணவர். அவர் அயலாகப் பிரிந்தார் என்கிறதே ஊர். 1130

114. நாணுத் துறவுரைத்தல்

காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடல்அல்ல தில்லை வலி. 1131

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்.
நாணினை நீக்கி நிறுத்து. 1132

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்: இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 1133

காமக் கடும்புனல் உய்க்குமே. நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. 1134

தொடலைக் குறுந்தொடி தந்தாள், மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன், மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண். 1136

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில். 1137

நிறையரியர் மன்அளியர் என்னாது, காமம்
மறையிறந்து மன்று படும். 1138

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 1139

யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்,
யாம்பட்ட தாம்படா வாறு. 1140

காதல் மிகுதியால் நாணம் நீங்கியமை உரைத்தல்

காதலுற்று வருந்தியவர்க்குப் பாதுகாப்பானது அதனை ஊரறியச் செய்வதே. 1131

நாணத்தை விட்டுவிட்டு மெலிந்த உடலும் உயிரும் ஊரறியச் செய்யத் தொடங்கின. 1132

முன்பு நாணமும் வீரமும் உடையேன்; இப்பொழுது காதலை ஊரறியச் செய்தலுடையேன். 1133

நாணத்தோடு நல்லாற்றல் என்னும் மிதவையைக் காம வெள்ளம் அடித்துக் கொண்டே போய்விடுமோ? 1134

தொடுத்த வளையலை அணிந்தவள் காதலை வெளிப் படுத்தும் துணிவோடு துயரத்தையும் தந்தாள். 1135

என் துயரை அறியாதவளுக்காகக் கண்ணுறக்கம் கொள்ளேன். நடு இரவிலும் அதனை வெளிப்படுத்தவே விரும்புவேன். 1136

கடலளவு காமம் கொண்டாலும் அதனை வெளிப்படுத்தாத பெண்மையினும் பெருமையானதில்லை. 1137

அடக்கமாட்டாதவர்; இரங்கத்தக்கவர் என்று பாராமல் காமம் ஊரவர் அறிய ஆகிவிட்டது. 1138

என்னை எவரும் அறியார் என்றும் ஊர்த் தெரு வெல்லாம் என் காதற் செய்தி சுழல்கின்றதே? 1139

யாம் அடைந்ததைத் தாம் அடையாமையால், யாம் நேரில் காணுமாறு நகைக்கின்றனர்; அவர் அறிவிலார். 1140

115. அலர் அறிவுறுத்தல்

அலரெழ ஆருயிர் நிற்கும்; அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால். 1141

மலரன்ன கண்ணாள் அருமை அறியா
தலரெமக் கீந்ததிவ் வூர். 1142

உறாஅதோ ஊரறிந்த கௌவை? அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 1143

கவ்வையால் கவ்விது காமம்; அதுவின்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 1145

கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. 1146

ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். 1147

'நெய்யால் எரிநுதுப்பேம்' என்றற்றால், 'கௌவையால்
காமம் நுதுப்பேம்' எனல். 1148

அலர்நாண ஒல்வதோ, 'அஞ்சலோம்' பென்றார்
பலர்நாண நீத்தக் கடை? 1149

தாம்வேண்டின் நல்குவர் காதலர், யாம்வேண்டும்
கௌவை எடுக்குமிவ் வூர். 1150

காதலைப் பற்றிப் பலரும் பழித்துப் பேசுதல்

பழிச்சொல் எழும்புவதால்தான் உயிர் உள்ளது. அதனைப் பலரும் பகுத்து அறிய மாட்டார். 1141

மலர் போலும் கண்ணினளின் சிறப்பை அறியாமல் பழியை எமக்கு ஊர் தந்தது. 1142

ஊரறிந்த பழி உண்மையாகாதா? அதனை அடையாத போதும் அடைந்த இன்பம் உண்டு. 1143

பழிச் சொல்லாலேயே காதல் வளர்ந்தது; இல்லை யென்றால் வாடிக் குறைந்திருக்கும். 1144

மகிழும் தோறும் குடியர் மதுவுண்ண விரும்புதல் போல் காமம் பழி கேட்கும் தோறும் இனியதே. 1145

பார்த்தது ஒரே ஒரு நாள் தான். ஆனால் பழிச்சொல்லோ நிலவை நிழல் பற்றுவது போன்றாயிற்று. 1146

ஊரார் பழிச்சொல் உரமாகவும், தாய் சொல் நீராகவும் வளர்கிறது காமப் பயிர். 1147

பழியால் காமத்தை அழிக்கலாம் என்பது நெய்விட்டுத் தீயை அணைக்கலாம் என்பது போன்றது. 1148

அஞ்சாதிரு என்றவர் பிரிந்தபோது, பழிச் சொல்லுக்கு நாணுதல் தகுமோ? 1149

நாம் விரும்பும் பழியை ஊர் கூறுகின்றது. ஆனால் அவர் விரும்பினால் அல்லவோ பயனாம். 1150

116. பிரிவாற்றாமை

செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 1151

இன்கண் உடைத்தவர் பார்வல்: பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 1152

அரிதரோ தேற்றம், அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 1153

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின், தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு? 1154

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்: மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 1155

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின், அரிதவர்
நல்குவர் என்னும் நசை. 1156

துறைவன் துறந்தமை தூற்றாகொல், முன்கை
இறைஇறவா நின்ற வளை? 1157

இன்னா தினனில்லூர் வாழ்தல்: அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு. 1158

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ? 1159

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். 1160

தலைவன் பிரிவைத் தலைவி தாங்காமை

பிரியாமல் இருத்தலைப் பேசுக; பிரிந்து வருவேன் என்பதை உயிரோடு இருப்பாரிடம் உரைக்க. 1151

அவர் பார்வை இனிமையுடையதே. ஆனால் அவர் தழுவுதல் பிரிவச்சம் உடையதாகின்றது. 1152

உண்மை அறிந்தவரிடத்தும் பிரிவு உள்ளமையால் ஒருவரைத் தெளிவது அரிதேயாம். 1153

அன்பொடு 'அஞ்சாதே' என்றவர் பிரிந்தால் அவர் சொல்லை நம்பியவர் மேல் தவறுண்டோ? 1154

என்னுயிரைக் காத்தல் என்பது பிரியாமல் காத்தலே. பிரிந்தால் மீண்டும் கூடுதல் அரிதாகும். 1155

பிரிவையே துணிந்து சொல்லும் வன்மையானவர். இரக்கம் காட்டுவார் என்பது அரிதேயாம். 1156

கழன்று விழுந்த வளையல்களே அவர் பிரிந்த பிரிவைத் தூற்றப் போதாவோ? 1157

ஒத்த அன்பினர் இல்லாத ஊரில் வாழ்வது கொடியது. அதனினும் கொடியது இனிய அன்பரைப் பிரிவது. 1158

தொட்டால் சுடுவது அல்லாமல் தீ, காமத்தைப் போல் விட்டால் சுடுவது உண்டோ? 1159

பிரிவைத் தாங்கித் துயர் பொறுத்து அதன் மேலும் உயிரோடு இருப்பவர் பலரே போலும்! 1160

117. படர் மெலிந்து இரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை: இறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். 1161

கரத்தலும் ஆற்றேன்இந் நோயை; நோய்செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும். 1162

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்; என்
நோனா உடம்பி னகத்து. 1163

காமக் கடல்மன்னும் உண்டே; அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். 1164

துப்பின் எவனாவர் மற்கொல். துயர்வரவு
நட்பினால் ஆற்று பவர். 1165

இன்பம் கடல்மற்றுக் காமம்; அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்,
யாமத்தும் யானே உளேன். 1167

மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை. 1168

கொடியார் கொடுமையின் தாம்கொடிய, இந்நாள்
நெடிய கழியும் இரா. 1169

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின், வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 1170

பிரிவுத் துயர்க்கு மெலிந்து வருந்துதல்

பிரிவு நோயை மறைப்பேன். ஆனால் ஊற்றுநீர் இறைப்பது போல் அது மிகவே செய்யும். 1161

நோயை மறைக்கவும் முடியவில்லை; நோய் தந்தவர்க்குச் சொல்லவும் நாணமாகின்றது. 1162

என் வலிமை இல்லா உடலில், காமத்துயரும் நாணமும் உயிரைக் காவடியாகக் கொண்டு தூங்குகின்றன. 1163

காமக்கடல் இருக்கவே இருக்கிறது; ஆனால் அதனைக் கடக்கும் காவல் மிதப்புத்தான் இல்லை. 1164

நட்பிலேயே துயரம் வரச் செய்பவர், பிரியும் வன்மையுள்ள போது எப்படி இருப்பார்? 1165

காதல் இன்பம் கடல் போன்றதே. ஆனால் பிரிவுத் துன்பமோ அதனிலும் பெரியது. 1166

காமம் என்னும் கடிய வெள்ளத்தைக் கடக்க அறியேன். நள்ளிரவிலும் நானே தனித்துள்ளேன். 1167

எல்லா உயிர்களையும் உறங்கச் செய்யும் இரவிலும் என்னையன்றித் துணை எனக்கில்லை. 1168

கொடிய தலைவர் கொடுமையிலும் கொடுமையானது இரவு; அது கழிய நெடும் பொழுதாகின்றது. 1169

அவருள்ள இடத்திற்கு மனம் போவது போல் கண்ணும் சென்றால் இப்படிக் கண்ணீரில் நீந்தாவே. 1170

118. கண் விதுப்பழிதல்

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ, தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. 1171

தெரிந்துணரா நோக்கிய உண்கண், பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன்? 1172

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 1173

பெயலாற்றா நீர்உலந்த உண்கண், உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து. 1174

படலாற்றா பைதல் உழக்கும், கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண். 1175

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. 1176

உழந்துழந் துள்நீர் அறுக. விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண். 1177

பேணாது பெட்டார் உளர்மன்னோ, மற்றவர்க்
காணா தமைவில கண். 1178

வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 1179

மறைபெறல் ஊரார்க் கரிதன்றால், எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. 1180

தலைவனைக் காணக் கண் துடித்து வருந்துதல்

தீரா நோயைக் காட்டிக் காணச் செய்த கண்ணே அழுவது எதற்காகவோ? 1171

வருவதைத் தெரியாமல் கண்ட கண், தன் பிழையை அறியாமல் துன்புறுவது ஏன்? 1172

விரைந்து தாமே பார்த்துத் தாமே அழும் கண்களின் செயல், நகைப்புக்குரியது. 1173

தப்ப முடியாத் துயர் தந்த கண், நீர் வடிக்கவும் மாட்டாமல் உலர்ந்து போனது. 1174

கடலிற் பெரிய காம நோயைத் தந்த கண் படமுடியாத் துயரைப் படுகின்றது. 1175

ஓ! ஓ! இனியதேயாம்! நோய் எனக்குத் தந்த கண்ணே நோயில் நன்றாக மாட்டிக் கொண்டது. 1176

விரும்பி நெகிழ்ந்து அவரைக் கண்ட கண், துயர் பட்டுப் பட்டு நீர்வறண்டு போவதாக. 1177

விரும்பாமலே விரும்பிய அவர் உள்ளார். அவரைக் காணாமல் இருக்க முடியவில்லை கண்ணுக்கு. 1178

அவர் வராத போதும் உறங்காது; வந்தாலும் உறங்காது; ஆதலால் கண்ணுக்கு எப்பொழுதும் துயர் நீங்காது. 1179

எம்மைப் போல் முரசடிக்கும் கண்ணினர் இருக்கும் போது, அதனை ஊரார் அறிதல் அரிதில்லை. 1180

119. பசப்புறு பருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற? 1181

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு. 1182

சாயலும் நாணும் அவர்கொண்டார், கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. 1183

உள்ளுவன் மன்யான்; உரைப்ப தவர்திறமால்;
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்
மேனி பசப்பூர் வது. 1185

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 1186

புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187

பசந்தாள் இவள்என்ப தல்லால், 'இவளைத்
துறந்தார் அவர்' என்பார் இல். 1188

பசக்கமன் பட்டாங்கென் மேனி, நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். 1189

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே, நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். 1190

பசப்பு (நிறமாற்ற) நோய்த் துயர்

தரக்கூடாத பிரிவு ஒப்புதலைத் தந்தேன்; இனி என் நிறமாறுதல் துயரை எவர்க்குச் சொல்வேன். 1181

அவர் கொடுத்த நிறமாற்றம் என்பதால் என் உடலே பந்தலாக ஏறிப் படர்கிறதோ அக்கொடி. 1182

நோயையும் நிறமாற்றத்தையும் எனக்குத் தந்து அதற்குக் கைம் மாற்றாக என் பொலிவும் நாணமும் கொண்டார். 1183

நினைப்பதும் அவரையே; பேசுவதும் அவரையே; ஆயினும் நிறமாற்றம் வஞ்சிக்கிறதே. 1184

அதோ என்னவர் பிரிந்து செல்கிறார். இதோ என்னுடலில் நிறம் மாறுகின்றதே! 1185

விளக்கு அணைவதை இருள் எதிர் பார்ப்பது போல. அவர் பிரிதலை எதிர் பார்க்கிறதே நிறமாற்றம். 1186

தழுவிக் கிடந்தேன்; சற்றே விலகினேன்; அதற்குள் நிறமாற்றம் வந்து விட்டது. 1187

இவள் நிறமாற்றம் கொண்டாள் என்பதை அன்றி. அவர் பிரிந்தார் என்பார் இலரே. 1188

என் உடல் நிறம் மாறுவதாக. என் அன்பர் அதனால் நலம் பெறுவார் என்றால். 1189

நிறமாறினாள் எனப் பெயர் பெறுதலும் நல்லதே. அவர் பிரிவைப் பழித்துரையார் என்றால். 1190

120. தனிப்படர் மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே,
காமத்துக் காழில் கனி. 1191

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால், வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 1192

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே,
'வாழுநம்' என்னும் செருக்கு. 1193

வீழப் படுவார் கெழீஇயிலர், தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 1194

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ,
தாம்காதல் கொள்ளாக் கடை? 1195

ஒருதலையான் இன்னாது காமம்:காப் போல
இருதலை யானும் இனிது. 1196

பருவரலும் பைதலும் காணான்கொல், காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 1197

வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். 1198

நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு. 1199

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்: கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. 1200

தலைவி தனிமையில் அடையும் துன்பப் பெருக்கம்

தாம் விரும்புவார் தம்மை விரும்பவும் பெற்றவர். விதை இல்லாக் கனியைச் சுவைப்பவர் போன்றவர். 1191

உழவர்க்குப் பருவமழை பெய்தது போன்றதாம் விரும்புவார்க்கு விரும்புவார் தரும் இன்பம். 1192

விரும்புவாரால் விரும்பப்படுவார்க்கே, வாழ்கிறோம், என்னும் பெருமிதம் உண்டாகும். 1193

தாம் விரும்புபவர் நம்மை விரும்பவில்லை எனின் அவர் உரிமைப் பற்றுதல் இல்லாதவரே. 1194

நாம் விரும்பியவர் நம்மை விரும்பவில்லை எனின் நமக்கு என்ன நன்மை தான் செய்வார்? 1195

காவடியை இருபக்கமும் தாங்கினால் இன்பம். அப்படியின்றி ஒருபக்கம் சுமப்பின் துன்பமே. 1196

காமன் என்பான் ஒரு பக்கம் வருத்துகிறான். அவன் என் நோயும் துயரும் அறியானோ? 1197

விரும்புவாரின் நன் மொழி கேளாமல் உலகில் வாழ்பவரினும் வன்கொடியர் இல்லை. 1198

நாம் விரும்பியவர் நம்மை விரும்பார் எனினும் அவர் செய்திகேட்கச் செவிக்கு இனிப்பாகிறது. 1199

நெஞ்சே, நெருங்கி வராதவர்க்குத் துயரைக் கூறுக. வீணாகக் கடல்மேல் ஏன் சீற்றம் கொள்கிறாய். 1200

121. நினைந்தவர் புலம்பல்

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்.
கள்ளினும் காமம் இனிது. 1201

எனைத்தொன் றினிதேகாண் காமம்;தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். 1202

நினைப்பவர் போன்று நினைனார்கொல். தும்மல்
சினைப்பது போன்று கெடும். 1203

யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். 1204

தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத் தோவா வரல் 1205

மற்றியான் என்னுள்ளேன் மன்னோ, அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 1206

மறப்பின் எவனாவன் மற்கொல்; மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். 1207

எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு! 1208

விளியும்என் இன்னுயிர் 'வேறல்லம்' என்பார்
அளியின்மை ஆற்ற நினைத்து. 1209

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
